உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 03 வியாழக்கிழமை (19.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 266

# பிரபாகரன் ஆயுதம் ஏந்தக் காரணம் தெற்கின் அரசியல் பக்குவமின்மையே!

## நல்லிணக்க ஆணைக்குழு முன் மங்கள முனசிங்க



கொழும்பு,ஓகஸ்ட் 19

பிரபாகரன் ஆயுதம் ஏந்திக் களம் இறங்குவதற்குக் காரணம் தென்னிலங்கைத் தலைவர்களின் அரசியல் பக்குவம் இன்மையே.

தெற்கில் இரண்டு முக்கிய கட்சிகளின் தலைவர்களும் ஒருவர் மற்றவர் மீது பொறாமையுடனும் அரசியல் எதிரிகளை ஒழித்துக்கட்டி ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற சிந்தனையோடும் செயற்பட்டனர்.

இதன் பின்னர் வடக்கில் நடந்த தேர்தல்களில் இளைய சமுதாயம் உற்சாகமின்றிச் சோர்வுடன் காணப்பட்டது. அதன் விளைவாகவே ஒரு கட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிகளையும் தீவிரவாதக் குழுக்களையும் அகற்றிவிட்டு பிரபாகரன் ஆயுதங்களுடன் களமிறங்கினார்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளில் இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றியவருமாகிய மங்கள முனசிங்க.

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன் மங்கள முனசிங்க நேற்றுமுன்தினம் சாட்சியம் அளித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேச நலன் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அரசியல்வாதிகள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டனர். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழர்களின் வாக்குரிமைகளை ஐக்கிய தேசியக் கட்சி பறித்துவிட்டது. (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனிலிருந்து வந்த யாழ். இளைஞன் கைது

கொழும்பு,ஓக.19

பிரிட்டனில் இருந்து இலங்கைக்கு விமானம் மூலம் நேற்றுமுன்தினம் திரும்பி வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த மயில்வாகனம் சிவநேசன் (வயது - 30) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார். இவர் சுமார் 12 வருடங்களுக்கு முன் அரசியல் தஞ்சம் கோரி (24ஆம் பக்கம் பார்க்க)

## கைத்தொலைபேசி வெடித்து ராஜஸ்தானில் ஒருவர் மரணம்

ஜெய்ப்பூர், ஓக.19

ராஜஸ்தான் மாநிலம் கோடா நகர் அருகே உள்ள வனப்பகுதியில் நேற்றுமுன்தினம் மர்மமான முறையில் இளைஞர் ஒருவர் இறந்துள்ளார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது, 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் காது கிழிந்து ரத்தம் கொட்டிய நிலையில் இறந்து கிடந்தார்.

அவரது மார்பு பகுதியிலும் தீக்காயம் ஏற்பட்டிருந்தது. (24ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கை செல்கிறார் இந்தியச் சிறப்புப் பிரதிநிதி

### வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் தெரிவிப்பு

சென்னை,ஓக.19

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் மற்றும் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்வதற்காக இந்தியாவின் சிறப்புப் பிரதிநிதி அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கை செல்கிறார் என இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை சென்னையில் தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து ஒரு மணிநேரம் ஆலோசனை நடத்திய அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மீள்குடியேற்றம் மற்றும் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட இந்தியா விரும்புகிறது என்றும் அதுபற்றி தமிழக முதலமைச்சரிடம் ஆலோசனை நடத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகள் திருப்தியளிக்கின்றனவா என்று கேட்டபோது, அதுபற்றி இலங்கை அரசுடன் பேசி வருவதாக அவர் தெரிவித்தார்

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மட்டுமே போதுமானதாக இல்லை என்றும் அங்கு மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

விவசாயம், வைத்தியசாலைகள், பாடசாலைகள் (24ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறை நீதிமன்றில் புலிச் சந்தேகநபர்கள் 30பேர் ஆஜர்

### தம்மை விடுவிக்குமாறு ஒரே சமயத்தில் கோஷம்

கொழும்பு,ஓக.19

''எங்களது மனைவி குழந்தைகள் முகாம்களில் வசிக்கின்றனர். எங்களுக்குப் புனர்வாழ்வளித்து விடுதலை செய்யுங்கள். அவர்களுடன் வசிப்பதற்கு உதவி செய்யுங்கள்.''

- இவ்வாறு விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் 30 பேரும் எழுந்துநின்று ஒரே குரலில் நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். இதனால், நீதிமன்றத்தில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள விசேட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் 30புலிச் சந்தேக நபர்கள் முப்பது பேர் தொடர்பான வழக்கு, விசாரணைக்கு வந்தது. அப்போதே அவர்கள் இவ்வாறு கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.

''சரணடையுங்கள் புனர்வாழ்வளிக்கப்படும்'' (24ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய அபிவிருத்தி வங்கி உப தலைவர் இன்று காலை யாழ்.வருகின்றார்

### கிளிநொச்சி மக்களையும் அவர் சந்திப்பார்

யாழ்ப்பாணம்,ஓக.19

இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் சியாவோயூ சாவோ இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவிருக்கிறார்.

இன்று காலை யாழ்.கோட்டை, யாழ். பொது நூலகம் ஆகியவற்றுக்கு செல்லும் அவர் மாலை 4 மணிக்கு யாழ்.செயலகத் தில் இடம் பெறும் கூட்டத்தில் கலந்துகொள்வார்.

நாளை சாவகச்சேரியில் மின் விநியோகத்தை அவர் ஆரம்பித்து வைப்பார்.

இதேவேளை -

கிளிநொச்சியில் மீள்குடியமர்த்தப்பட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## குளிர்காற்று, மழைக்கு மத்தியிலும் சிவந்தனின் பாதயாத்திரை தொடர்கிறது

### நாளை ஜெனிவாவை அடைவார் அவர்

சுவிஸ்,ஓக. 19

புலம் பெயர்ந்து வாழும் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் தாங்கி வரும் சிவந்தனை வரவேற்கத் திரண்டு வருமாறு சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பு தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

லண்டனில் இருந்து ஜூலை 23ஆம் திகதி இலங்கை யுத்தக் குற்றத்துக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை உட்பட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து ஜெனிவா நோக்கி பாதயாத்திரை மேற்கொண்டுள்ள சிவந்தன் நாளை 20 ஆம் திகதி சுவிஸின் ஜெனிவா நகரை வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)

### விநியோகஸ்தர்கள் தேவை

உலகப் புகழ்பெற்ற லேசர் பிரிண்டர்களுக்கான டோனர் காட்ரிஜ்களின்
(Compatible Toner Cartridges)
ஏகமுகவர்கள், யாழ்ப்பாண நகரத்தில் தமது வியாபார வலையமைப்பில் புதிய விநியோகஸ்தர்களை இணைத்துக் கொள்ளவுள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் 19 மற்றும் 20.08.2010 திகதிகளில் யாழ்ப்பாணத்தில் அம்முகவர்களை சந்திக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
துசான் - 077 3635427
சசிரங்க - 077 3951640

## கொக்குவில், பூநாறி மரத்தடிப் பகுதிகளில் படையினரின் சோதனை நேற்றுத் தீவிரம்

சென்னை,ஓக. 19

கொக்குவில் மற்றும் பூநாறிமரத்தடிப் பகுதிகளில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் நேற்றுக் காலையில் இருந்து இரவு வரை தீவிரமாக்கப்பட் டிருந்தன.

கொக்குவில், பிரம்படியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கையில் படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில், பிரம்படி அம்மன் கோயில் (24ஆம் பக்கம் பார்க்க)



உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின் உற்சவக் காலத் திருக்காட்சிகள் தினமும் உங்கள் உதயனின் வலைத் தளத்திலும்....
www.uthayan.com

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொன்னி' அரிசியை பயன்படுத்த மலேசிய நிறுவனத்துக்குத் தடை

கோலாலம்பூர், ஓக. 19

பொன்னி அரிசியின் பெயரைப் பயன்படுத்த மலேசிய நிறுவனத்துக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஸ்யாரிகட் ஃபெய்சா என்ற மலேசிய நிறுவனம் பொன்னி என்ற பெயரை 2006இல் பதிவுசெய்து அரிசி விற்பனையில் ஈடுபட்டது.

இதை எதிர்த்து இந்திய வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், இந்திய விவசாயிகளினதும், ஏற்றுமதியாளர்களினதும் அமைப்புகள் கடந்த ஜனவரி 22இல் மலேசிய உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன.

தனது தீர்ப்பில் நீதிபதி அசார் முகமது தெரிவித்துள்ளவை வருமாறு:-

''பொன்னி என்பது தமிழகத்தில் காவிரியின் மற்றொரு பெயர். அந்தப் பகுதியில் விளையும் அரிசிக்குப் பெயர் பொன்னி. அந்த வார்த்தையை மலேசிய நிறுவனம் பயன் படுத்துவது குழப்பத்தை ஏற்படுத்தும்.

எனவே, மலேசிய வர்த்தக இலச்சினைகளுக்கான பதிவேட்டிலிருந்து பொன்னி என்பது நீக்கப்படவேண்டும். நீக்கப்பட்ட செய்தி அரசிதழிலும் வெளியிடப்படவேண்டும். இவ்வாறு உத்தரவிட்டார்.

# இந்திய எல்லைக்கோடு அருகில் சீனாவின் நவீன ஏவுகணைகள்

## அமெ. இராணுவத் தலைமையகம் தகவல்

வாஷிங்டன், ஓக. 19

இந்திய எல்லையையொட்டி நவீன ஏவுகணைகளை (சிசிஎஸ்-5) சீனா தயார் நிலையில் வைத்துள்ளது.

இந்திய எல்லையையொட்டி முன்னர் குறைந்த தூரம் பாய்ந்து சென்று தாக்க வல்ல சிசிஎஸ்-3 ரக ஏவுகணைகளை சீனா நிறுத்தி வைத்திருந்தது. இப்போது இதற்குப் பதிலாக நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த நவீன ஏவுகணைகளை சீனா தயார் நிலையில் வைத்துள்ளது என்று அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையே போர் மூளும் நிலை உருவானால் குறுகிய நேரத்தில் விமானப் படையை எல்லைப் பகுதிக்கு அனுப்பி வைக்கும் அவசரகாலத் திட்டத்தையும் சீனா வகுத்துள்ளது என்றும் பென்டகன் குறிப்பிட்டுள்ளது.

சீன - இந்திய எல்லையில் நிலவும் பாதுகாப்புச் சூழல் குறித்து ஆய்வுசெய்த பென்டகன், அமெரிக்க நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ளது. அந்த அறிக்கையில் இந்திய எல்லையையொட்டிய பகுதியில் நவீன ஏவுகணைகளை சீனா நிறுத்தி வைத்துள்ளது என்றும் அவசரகாலத் திட்டத்தை வகுத்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பலஸ்தீனத்துடன் மீண்டும் பேச்சு: முன்நிபந்தனையை ஏற்க முடியாது

## இஸ்ரேல் தெரிவிப்பு

ஜெருசலேம், ஓக. 19

பலஸ்தீனத்துடன் மீண்டும் நேரடி அமைதிப் பேச்சை நடத்தத் தயாராகவுள்ளோம். ஆனால், பேச்சுக்கு முன்னர் எவ்வித முன்நிபந்தனையையும் ஏற்க மாட்டோம் என்று கிரீஸுக்கு வந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார்.

பலஸ்தீனத்துடன் நிரந்தரமான தீர்வை எட்டவே விரும்புகிறோம். இதைக் கருத்திற்கொண்டு அந்நாட்டுடன் நேரடியான அமைதிப்பேச்சை தொடங்கவும் தயாராகவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கிடையிலான பேச்சு விரைவில் தொடங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. அப்படி பேச்சுகள் தொடங்கும் பட்சத்தில் அதில் பலஸ்தீனம் தனது கருத்துகளை வெளிப்படுத்தலாம். விவாதிக்கலாம் என்றும் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

நேரடிப் பேச்சுக்கு பல தடவைகள் விருப்பம் தெரிவித்தோம். ஆனால், அதையெல்லாம் பலஸ்தீனம் பொருட்படுத்தவில்லை. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவில்லை. எங்களது அழைப்புக்கு மறுப்புத் தெரிவித்து விலைமதிப்பற்ற நேரத்தை வீணடித்துவிட்டது என்று நெதன்யாகுடன் வந்துள்ள இஸ்ரேல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையேயான அமைதிப்பேச்சு கடந்த 2008 இல் தடைப்பட்டது. இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே பிரச்சினை நீடித்து வருவதால் அமைதிப் பேச்சை மீண்டும் தொடங்க முடியாத நிலை உள்ளது.

இரு நாடுகளுக்கிடையே மீண்டும் நேரடிப் பேச்சை தொடங்குவதற்கான முயற்சியை அமெரிக்கா சமீபத்தில் மேற்கொண்டது. ஆனால், நேரடிப் பேச்சுக்கு பலஸ்தீனம் சம்மதிக்கவில்லை.

இந்நிலையில் இரு நாடுகளும் அமைதிப் பேச்சை தொடங்குமாறு அமெரிக்காவும், ரஷ்யாவும் மீண்டும் நெருக்குதல் அளிக்கும் என்று தெரியவருகிறது.




# ஜப்பானில் கடும் வெயில்: 132 பேர் உயிரிழப்பு!

டோக்கியோ, ஓக. 19

ஜப்பானில் கடும் வெயில் காரணமாக 132 பேர் பலியாகியுள்ளனர். ஜப்பானில், கோடை வெயில் கொளுத்தி வருகிறது. 37 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அங்கு கடும் வெப்பம் நிலவுகிறது. இதனால், அங்கு கடும் அனல் காற்று காரணமாக, 132 பேர் உயிரிழந்துள்ளனர்.

30 ஆயிரம் பேர் வெயில் கொடுமை காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். வைத்தியசாலையில் உள்ள பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இதனால், பலியாகும் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. டோக் கியோ உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில், வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது.


## விற்பனைக்கு

A/C Car சிறியது SANRO கறுப்பு விற்பனைக்கு உண்டு. (பெண்களுக்கு உகந்தது)

0772850753


# பாகிஸ்தான் சீனாப் நதி உடைப்பு: வெள்ளத்தில் கிராமங்கள் தவிப்பு!

லாகூர், ஓக. 19

பாகிஸ்தானில் சீனாப் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், பல இடங்களில் கரை உடைந்து, நூற்றுக்கணக்கான கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

பாகிஸ்தானில் கடந்த ஒரு மாதமாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், சிந்து நதியில் பெருக்கெடுத்த வெள்ளம், சிந்து மற்றும் பஞ்சாப் மாகாணங்களின் பல பகுதியை சூழ்ந்தது.

இன்னும் வெள்ளம் வடியாத நிலையில், பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணத்தை இணைக்கும் சீனாப் நதியில் புதிதாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

சஜ்ரா, ஷெர் கூல் தான் ஆகிய நகரங்களில் வெள்ளம் உட்புகுந்துள்ளது. இதனால், நூற்றுக்கணக்கான கிராமங்கள் மூழ்கியுள்ளன.

பாகிஸ்தானில் பெய்துவரும் தொடர் மழை மற்றும் வெள்ளத்தால், ஆயிரத்து 700 பேர் பலியாகியுள்ளனர். 20 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளை இழந்து வேறு இடங்களில் குடியேறியுள்ளனர்.

ஏழு இலட்சம் ஹெக்டயர் நிலத்தில் விளைந்த கோதுமை, நெல், கரும்பு போன்ற பயிர்கள் முற்றிலும் நாசமாகி விட்டன. இதனால், பாகிஸ்தானில் கடும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.




## திருமண பந்தத்தில் வெள்ளிவிழா...

19.08.2010

கண்ணை இமை காப்பது போல என்றும் எமைக் காக்கும் அன்புத் தெய்வங்களுக்கு

திருமண நல் வாழ்த்துக்கள்

இல்லறம் எனும் நல்லறம் நடத்தி இன்று 25 ஆவது திருமண நாளை நிறைவு செய்து கொண்டாடிக் கொண்டிருக்கும் நீங்கள் இருவரும் என்றும் நூறு ஜென்மம் சேர்ந்து வாழ வாழ்த்துகின்றோம்.

ஜீவதாஸ் - வளர்மதி
தம்பதியர்

வாழ்த்துவோர்:
தர்சன், நித்தியா, சரத்பாபு
(பிள்ளைகள்).

## பதவி வெற்றிடங்கள்

யாழ்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் உணவகத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம், அலவன்ஸ், தங்குமிட வசதி என்பன வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் உங்களின் சுய விவரங்களுடன் நாளை (20.08.2010) வெள்ளிக்கிழமை எம்மை நேரில் சந்திக்கவும்.

1. சமையல்காரர்/Cook (ஆண்/பெண்)
   யாழ் உணவுகள் சமைக்கத்தெரிந்தவர்கள் - தகைமை: முன் அனுபவம் உள்ளவர்கள்
2. சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
   காய்கறி நறுக்குதல், பாத்திரம் கழுவுபவர்கள், சுத்தப்படுத்துவோர்
3. உதவியாளர்
   பார்சல் கட்டுதல், உணவுபரிமாறுதல்

மேலதிக விவரங்களுக்கு:
No.15 2/1, சிறாம்பியடி ஒழுங்கை (ஆரிய குளச் சந்திக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2224550, 0777585913, 0777222422


## மரண அறிவித்தல்கள்

### திருமதி காமாட்சி சின்னையா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சி சின்னையா நேற்று (18.08.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் மகளும் அமரர் சின்னையாவின் அன்பு மனைவியும் சற்குணம், அமரர் ராஜேந்திரன் மற்றும் பரமேஸ்வரி, குலேந்திரலிங்கம், லோகநாதன், குமாரசாமி, தயாநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகம், விக்னேஸ்வரி, விஜயரூபி, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் விக்னேஸ்வரன், கருணாகரன், பிரபாகரன், அமரர் சியாமளா மற்றும் மைதிலி, சர்மினி, வேணுகரன், நிருக்ஷிகா, யோகசிறி, தீபிகா, சர்மிலன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.08.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மண்டுவில், சாவகச்சேரி.*

தகவல்: சி.லோகநாதன் (மகன்), சி.குமாரசாமி (மகன்).

### வேலுப்பிள்ளை விவேகானந்தன்

(இளைப்பாறிய நடத்துநர், இலங்கை போக்குவரத்துச்சபை)

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மேற்கு, திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகன் விவேகானந்தன் நேற்று (18.05.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் கமலரேகாவின் அன்புக் கணவரும் சசிரேகா (நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா), நிரஞ்சினி (கட்டடத் திணைக்களம், கிளிநொச்சி), முகுந்தராஜ் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தகுமாரின் (நீர்ப்பாசனத் திணைக்களம்) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திக்கம், அல்வாய் மேற்கு.*

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மீண்டும் இருண்ட யுகத்துக்குள்ளா?

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில இடங்களில் இராணுவத்தினரின் காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சொற்ப கால இடைவெளியின் பின்னர் பரவலாகச் சோதனை நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இதனால் தாம் மீண்டும் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவல்கின்றனர். வலிகாமம் மேற்கின் சில பகுதிகளில் பல காவலரண்கள் அமைக்கப்பட்டு அங்கு இரவு நேரக் கடமையிலும் சிப்பாய்கள் ஈடுபடுவதாகத் தகவல்கள் கசிந்து கொண்டிருக்கின்றன.

போர் முடிந்தவுடனும் குடாநாட்டில் காவலரண்கள் அகற்றப்படவில்லை. போர் தான் அரசினால் வெற்றி கொள்ளப்பட்டு விட்டதே; இனியும் காவலரண்களும், சோதனைகளும் தேவை தானா என்று மக்கள் தரப்பில் ஆய்க்கினை கொடுக்கப்பட்டதன்பேரிலும், வெளிநாட்டுப் பிரசைகள் இங்கு வருவதற்கான பாதுகாப்பு அனுமதி சிறிது தளர்த்தப்பட்ட நிலையிலும் அவை முறையே நீக்கப்பட்டும் தளர்த்தப்பட்டுமிருந்தன.

அதனால் குடாநாட்டு மக்கள் அச்சம் தணிந்த நிலையில், இரவு நேரங்களிலும் தமது அவசிய தேவைகளுக்காக நடமாடும் சூழ்நிலை ஒன்று உருவாகி வந்தது. ஆள் கடத்தல்கள், கொலைகள் என்று சில சம்பவங்கள் ''மர்மமாக'' நடந்தேறியதன் பின்னணியில் சிறிது தொய்வுடன் மெதுவாக இராணுவக் காவற்பணி களம் கொண்டது.

இவற்றின் மத்தியில் இங்குள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும் என்றும், இராணுவ பாதுகாப்புக் கெடுபிடிகள் குறைக்கப்படும் என்றும் உயர்மட்டங்களிலிருந்து கருத்துத் தெரிவிக்கப்பட்டதும் உண்டு. இவையாவும் காற்றோடு போன கதையாகிக் காவலரண்களும், வழிச் சோதனைகளும் மெல்ல மெல்லத் தலையெடுப்பதால் மீண்டும் இருண்ட காலம் குடாநாட்டில் கவியலாம் என்ற அச்ச உணர்வு மக்களிடம் குடிகொள்ளத் தொடங்கி உள்ளது.

சாதாரண இயல்பு வாழ்க்கை நிலை மங்கி முடிந்து மீண்டும் இராணுவக் கெடுபிடிகள் குடாநாட்டில் மட்டுமன்றி, வட பிரதேசம் முழுவதிலும் உருவாகலாம் என அரசாங்கத் தரப்பில் சமிக்ஞை காட்டப்பட்டிருக்கிறது.

வட பகுதி மக்கள் மீது அரசாங்கத்துக்கு அதிகபட்சமான சந்தேகம் உண்டு. எனது நிலைப்பாடும் அதுவே. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த மக்களின் மனங்களில் விடுதலைப் புலிகள் தரப்பின் மீது இன்னமும் அனுதாபம் உள்ளது. விடுதலைப் புலிகள் என்று இனங்காணப்படாதவர்கள், மற்றும் கைது செய்யப்படாதவர்களில் பலர், விடுதலைப் புலிகளால் பல ஆண்டுகளாக மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள். அத்தகையோரே மிக மோசமானவர்கள். அவர்கள் தொடர்ந்தும் புலிகளுக்கு ஆதரவளிப்பார்கள் என்பது சர்வ நிச்சயம். - என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இடித்துக் கூறியுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் பிரதான சாட்சியமளிப்போராக இருந்து அவர், இந்தத் தகவல்களை, தமது ஊகங்களை நீட்டோலையாக வாசித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புத் தொடர்ந்தும் கட்டுக் குலையாமல் செயற்படுகிறது. அதனாலும் இராணுவத்தினரை வடக்கில் நிலை கொள்ள வைக்கும் தேவை உள்ளது என்றும் -

விடுதலைப் புலிகள் மீண்டும் வடக்கில் அணி சேர்வதற்கு இடங்கொடுக்கக் கூடாது. அதன் பொருட்டு வடபகுதியில் கணிசமான எண்ணிக்கையில் இராணுவத்தினரைக் கடமையில் ஈடுபடுத்தவேண்டி உள்ளது என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

வன்னியில் அங்கு கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினருக்குத் தங்குமிட வசதிகளே செய்யப்படுகின்றன. அது சிங்களக் குடியேற்றங்களோ இராணுவக் குடியேற்றங்களோ அல்ல என்றும் கோத்தபாய சமன்பாடு போட்டுக் காட்டியுள்ளார்.

அவர் கூறும் தகவல்கள் பெருப்பித்துக் காண்பிக்கப்பட்டவையா அல்லது சமச்சீர் உள்ளவையா என்பதனை இங்கே விமர்சனம் செய்வது பொருத்தமற்றது. அவை ஆணைக்குழுவின் முன்வைக்கப்பட்டவை. அதனைப் பரிசீலிப்பது ஆணைக்குழுவின் கடமையே ஆகும்.

ஆனால், அந்தத் தகவல்கள் மற்றும் கருத்துக்கள் வட பகுதியில், அரசாங்கத்தின் நிர்வாகத்துக்குச் சமாந்தரமாக ஓர் இராணுவ ஆட்சியும் செயற்படும் என்ற எண்ணத்தை, அச்சத்தை இப் பகுதி மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது என்பது சுட்டிக்காட்டப்படவேண்டிய ஒன்றே.

போர்க் காலத்தில் தமது ஜனநாயக உரிமைகளை மட்டுமன்றி, வாழ்வியக்க உரிமைகளையும் இழந்து முடக்குண்டு இருந்தமை, அச்ச உணர்வுடன் காலத்தைப் போக்கியமை போன்ற நிலை மீண்டும் உருக்கொள்ளுமா என்ற மன நெருடல் நேற்றே மக்கள் பால் உதித்துள்ளது.

நாம் இப்போதுள்ளதை ஒத்த, அச்சமற்ற, அடக்கி ஒடுக்கும் வகையற்ற, முடங்கலற்ற சுதந்திரமான சூழ்நிலையிலான வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா என்ற ஏக்கம் அவர்களைப் பீடித்திருக்கிறது.

பல ஆண்டுகளாகத் தமது இருண்டு கிடந்த அன்றாட வாழ்க்கையில், சுமாரான ஒளி தோன்றியிருக்கிறது. அது மேலும் பிரகாசிக்கும் என்று எண்ணியிருந்த வடபகுதி மக்களின் வயிற்றில் புளி கரைத்திருக்கின்றன நேற்று ஊடகங்கள் ஊடாகக் கிடைத்த தகவல்கள்....!

# கொக்குவில் தாக்குதல் சம்பவம்; விசேட பொலிஸ்குழு விசாரணை

## இதுவரை எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.19

கொக்குவில் பகுதியில் கடந்த 16ஆம் திகதி இரவு தென்னிலங்கை வியாபாரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை முடுக்கி விட்டிருப்பதாகவும் எனினும் இதுவரை எவரும் கைதாகவில்லை எனவும் யாழ். தலைமைப் பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த திங்கட்கிழமை இரவு கொக்குவில் பிரம்படி அம்மன் கோயில் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக நாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.

எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை - என்றார்.

தென்னிலங்கை வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை திடீரென வந்த சுமார் பத்துப் பேரடங்கிய கும்பலொன்று அந்த வியாபாரிகளை வாள்களால் தாக்கியது.

இச்சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(த-16)

### சைக்கிள் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை,ஓக. 19

வட்டு. தெற்கு கிராம சேவகர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு குடும்பத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் சைக்கிள்கள் உலக தரிசன அமைப்பினால் இலவசமாக வழங்கப்பட்டன. (ஒ-323-161)

### நீர்வேலி கைத்தொழில் நிலையத்திற்கு அமைச்சர் நிதி உதவி

வட்டுக்கோட்டை,ஓக. 19

நீர்வேலி காமாட்சி அம்பாள் கூட்டுறவுக் கைத்தொழில் நிலையத்திற்கு கடந்த 17ஆம் திகதி மாலை விஜயம் செய்த ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இந்நிலையத்தை முதற்கட்டம் செப்பனிடும் பொருட்டு ஆரம்ப நிதியாக ஒரு லட்சம் ரூபாவினை மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக வழங்கியதாக அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்று காலை அங்கு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்படி கைத்தொழில் நிலையத்தை ஆராய்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும் என்று அதில் உள்ளது. (த)

### யாழ்.மாநகரசபை சைவ சமய விவகாரக் குழு

# சிறந்த சேவையாளருக்கான 'மகர யாழ்' விருது சிவத்தமிழ்ச் செல்வி தங்கமா அப்பாக்குட்டிக்கு

நல்லூர்,ஓக.19



யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டுதோறும் வழங்கும் சிறந்த சமூக சேவையாளருக்கான 'மகரயாழ்' விருது இம்முறை அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வழங்கப்படவுள்ளது.

சைவத்திற்கும் தமிழுக்கும் சமூகத்திற்கும் தன்னை அர்ப்பணித்துத் தொண்டாற்றிய அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக 2010ஆம் ஆண்டுக்கான இந்த விருது தேகாந்த நிலையில் வழங்கப்படவுள்ளதாக நேற்றுமுன் தினம் இடம்பெற்ற சைவ சமய விவகாரக் குழுவின் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு திருமுருகனிடம் இந்த விருதைக் கையளிப்பார். (த-111)

### 'மைக்ரோ' நிதித்திட்டத்தின் கீழ்

# வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு கடன் வழங்கப்படும்

கொழும்பு,ஓக.19

அமைச்சரவை 'மைக்ரோ' நிதித் திட்டத்திற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித் துள்ளார்.

இந்தத் திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான கடன் வழங்கப்படும்.

இந்தக் கடன்கள் ஒரு புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவிருக்கின்றன. முக்கியமாக வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த விதவைகளுக்கு சுயதொழிலொன்றை அவர்கள் ஆரம்பிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தக் கடன்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இதற்கான வட்டி 4 வீதமாக இருக்கும். இத்திட்டத்தை புனர்வாழ்வு அதிகாரசபை நடைமுறைப்படுத்தும்.

சிறைச்சாலைகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேலும் 50 குளியலறைகள் அமைக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ-க)

# தரம்-5 மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வில் நாமல் கலந்துகொள்வார்

கிளிநொச்சி,ஓக.19

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக் குத் தோற்றும் மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வில் ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

மேற்படி மாணவர்களுக்கான கருத்தரங்கும் அவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, பரந்தன் இந்து மகா வித்தியாலயம், கனகபுரம் மகாவித்தியாலயம் ஆகிய மூன்று இடங்களில் காலையில் கருத்தரங்கும் பிற்பகலில் வாழ்த்து நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உரிய ஆசிரியர் மற்றும் மாணவர்களை குறிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கேட்டுள்ளார். (த-16-405)

# யாழ்.ஆஸ்பத்திரி 'கன்ரீன்' புதிய இடத்திற்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை இன்று வியாழக்கிழமை முதல் புதிய இடத்தில் இயங்கவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் 'ஜெய்க்கா' திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள அதிநவீன வசதிகளுடனான நான்கு மாடிக் கட்டடம் இச்சிற்றுண்டிச்சாலை அமைந்திருந்த பிரதேசத்தில் அமையவுள்ளது.

எனவே இப்பணிகளுக்கு ஏதுவாக இச்சிற்றுண்டிச்சாலை இடமாற்றப்பட்டுள்ளது. கடந்த 16ஆம் திகதி முதல் இந்த இடமாற்றம் காரணமாக சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டிருந்தது.

இதனால் வைத்தியசாலை விடுதியில் தங்கியிருக்கும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

எனினும் இன்று வியாழக்கிழமை புதிய இடத்தில் சிற்றுண்டிச்சாலை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-16-26)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 04 | 20.08.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | ஏகாதசி பி.ப.04.55 வரை |
| நட்சத்திரம் | மூலம் பி.ப. 1.55 வரை |
| சுபநேரம் | 06.05-07.35 வரை |
| இராகுகாலம் | 10.35-12.05 வரை |

# செயலிழந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு மீளவும் உயிரூட்டும் நடவடிக்கைகள் தீவிரம்

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் செயலிழந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்களும், கிராம அலுவலர்களும் இணைந்து இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கிராமங்களின் அபிவிருத்தியையும் மக்களின் தேவைகளையும் நிறைவேற்றும் நோக்குடன் இச்சங்கங்கள் புனரமைக்கப்படுகின்றன. கிராமங்களினதும் மக்களினதும் தேவைகள் அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் இனங்காணப்பட்டு, வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பல வருடங்களாக இயங்காமல் இருந்த சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளன. இடிந்த நிலையில் உள்ள சுதுமலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கட்டடத்தைப் புதுப்பொலிவுடன் மாற்றி அமைப்பதற்கான முயற்சியில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ஈடுபட்டுள்ளார்.

சுதுமலை மத்தி சனசமூக நிலையத்தில் கடந்த காலங்களில் இயங்கி வந்த சுதுமலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு தனியான ஒரு கட்டடத்தை அமைப்பதற்காகக் காணியைத் தெரிவு செய்வதில் சங்க உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். காணி கிடைத்தவுடன் கட்டடம் அமைப்பதற்கான ஒழுங்குகளை பிரதேச செயலகம் மேற்கொள்ளும் ஏன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்திஜி சனசமூக நிலையம்

### சைக்கிள் ஓட்டப் போட்டி

காந்திஜி சனசமூக நிலையத்தின் 35ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வீரர்கள் தங்கள் பெயர்களை மேற்படி நிலையத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

நிகழ்வுகள் 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

காந்திஜி சனசமூக நிலையம்,
காந்திஜி வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி/569/98) நிர்வாகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரத்தினம் தனலட்சுமி



வேலணையைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் மற்றும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் தனலட்சுமி 17.08.2010 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா (வேலணை) மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா (புளியங்கூடல்) மற்றும் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம், கேதீஸ் மற்றும் முத்துலிங்கம், மகேஸ்வரி, இராசாத்தி, புவனம், சோதி, பாலன், தவம், இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதந்திரகரன் (கனடா), விவேகானந்தன் (ஆனந்தன் - திருநெல்வேலி), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), ஞானகரன் (ஜேர்மனி), சிறிகரன் (லண்டன்), நாகேஸ்வரி (ரதி - கொழும்பு), கேதீஸ்வரி (கனடா), தயானந்தன் (லண்டன்), தங்கேஸ்வரி (நோர்வே), சுதாமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோ, சாந்தினி, திருச்செல்வம், சவி, பிறேமா, றஞ்சன், சுதா, சியாமினி, ஜெயராஜா, பவன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.08.2010 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தலங்காவல் பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.*
*தொ.பே. 0774707708 (இலங்கை),*
*0114162879552 (கனடா)* (102217)

தகவல்:
செ.விவேகானந்தன்
(மகன்).

## தவறிவிட்டது

17.08.2010 அன்று கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் திறப்பு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். ஸ்ரீ தாமோதர விலாஸ், சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம். 021 222 6867

## கடை வாடகைக்கு

எமது சங்கத்துக்கு சொந்தமான பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். வாடகைக்கு பெற விரும்புபவர்கள் காரியால நேரத்தில் தொடர்புகொள்ளவும்.
விலாசம்: நல்லூர் ப.நோ.கூ.சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொலைபேசி இல. 021 2222143
விண்ணப்ப முடிவுதிகதி: 31.08.2010 பொதுமுகாமையாளர்.

## வாடகைக்கு

களஞ்சியத் தேவைக்கு பயன்படுத்தக் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புக்கு: 0776393419

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள 88 Sri xxxx தொடரிலக்கமுடைய Honda CD 200 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776374345

## உணவகத்திற்கு ஆள்தேவை

சீரணி, சண்டிலிப்பாய் சந்தியில் உள்ள உணவகத்துக்கு சமையல் செய்வதற்கு உதவியாளர் தேவை.
T.P.No: 0773370037
சீரணி, சண்டிலிப்பாய்.

## வீடு, காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்கு சமீபமாக (200m) திருஞானசம்பந்தர் வீதியில் நன்னீர் வளங்களுடன் வீடும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0777043852, 0773313104

## SHALOM GUEST HOUSE

வெளிநாடுகளிலிருந்தும், தூர இடங்களிலிருந்தும் வருபவர்களுக்கு A/C, Non A/C Rooms உணவு வகைகளுடன் நாளாந்த, வாராந்த அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
No. 10A, கதீற்றல் றோட், யாழ்ப்பாணம். T.P. 021 2225687, 0773039606

உ
சிவமயம்
### வேலணை - பெருங்குளம்
### ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலன சபை

## அறிவித்தல்

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகமும் ராஜகோபுர கும்பாபிஷேகமும் 02.07.2010 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றன. இதையொட்டி சிறப்பு மலர் ஒன்று உற்சவ காலத்தின் போது வெளியிடப் பரிபாலன சபை தீர்மானித்துள்ளது. ஆலய செயற்பாடுகள் யாவற்றுக்கும் பரிபாலனசபையே பொறுப்புடையதாகும்.

எமது பரிபாலன சபையின் அனுமதியின்றிப் பிரத்தியேகமாக தனிநபரோ, திருப்பணிச் சபை என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஒரு சிலரோ ஆலயத்தின் பெயரில் மகா கும்பாபிஷேக மலரோ, ராஜ கோபுர கும்பாபிஷேக மலரோ வெளியிட முடியாது என்பதையும் அவ்வாறு வெளியீடு செய்தால் அவர்கள் மீது சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என்பதையும் வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

செயலாளர். (சி/570027) தலைவர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா பாலசுப்பிரமணியம் (மணிஜயா)



குருக்கள் பகுதி, மஞ்சற் தோட்டம், கரணவாய் கிழக்கைச் சேர்ந்த செல்லையா பாலசுப்பிரமணியம் (மணிஐயா) நேற்று முன்தினம் (17.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாறுபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வராசா (செல்வம்), செந்தமிழ்ச்செல்வி (செல்வி) மற்றும் புவனேஸ்வரி (புவனா - உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.), புவனேந்திரன் (தெய்வம்), மங்களேஸ்வரி (மது), ஆனந்தராசா (திரவியம்), அஜந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விநாயகமூர்த்தி (ரதன் - மூர்த்தி, டோகா), மணிமேகலை, ரஞ்சனா, விசுவநாதன் ஆகியோரின் மாமனாரும் விதுர்சனா, விதுர்சன், நிவிசா, தர்சா, தமிழினி, கலைப்பிரியா, துளசிகா, மது ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (17.08.2010) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருக்கள் பகுதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. தொ.பே. 060 321 1035 (102218)

தகவல்: திரவியம்
(மகன்).

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் மார்க்கண்டு கனகராசா

(இயற்கை நேசன், உரிமையாளர் சுதர்சனம் பேக்கரி)

| மண்ணில் இயற்கையை நேசிப்பதற்காக | விண்ணில் இயற்கை இரசிப்பதற்காக |
|---|---|
| 19.05.1950 | 21.07.2010 |

*கடந்த 21.07.2010 அன்று எம்மை விட்டு பிரிந்த எமது குடும்பத் தலைவர் அமரர் மார்க்கண்டு கனகராசா (இயற்கை நேசன்) அவர்கள் காலமான செய்தியறிந்து உடனிருந்தும் தொலைபேசி, கடிதம், இரங்கற் செய்தி மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.08.2010) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின்இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*சினட்டி,*
*வதிரி, கரவெட்டி.* (சி/570024) மனைவி, பிள்ளைகள்.


மகளிருக்கான விடுமுறைக்கால 12 நாள் வகுப்புகள்

கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல்.
- முடி அயன் செய்தல். (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 3 வித முடி வெட்டுதல்.
- Facials, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.), Waxing, தலை மசாஜ் செய்தல்.
- இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.


- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 23-08-2010 திங்கள் 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறியலாம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 15.12.1952 | 21.07.2010 |

### அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

(எரிக்கணேஷ் உரிமையாளர்)

அன்பிற்கு இலக்கணமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
நேற்றுவரை இருந்த உங்களை
தினமும் நினைத்து வாடுகின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலமும் தபால் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (20.08.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்
[illegible] ஒழுங்கை, ஆனைக்கோட்டை. 021 222 2486

(சி-570021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகளால் மறைத்துக்கொண்டு வந்த மரக்குற்றிகள், வாகன உதிரிப்பாகங்கள் பொலிஸாரிடம் சிக்கின

## லொறிச் சாரதியும், உதவியாளரும் கைது

அச்சுவேலி,ஓக.19

கிளிநொச்சியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகளையும், வாகன உதிரிப்பாகங்களையும் குப்பைகளால் மறைத்து ஏற்றி வந்த லொறியை மடக்கிய அச்சுவேலிப் பொலிஸார் லொறிச் சாரதியையும், அவரின் உதவியாளரையும் கைது செய்ததுடன் பொருள்கஎளயும் கைப்பற்றினார்கள்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:

கிளிநொச்சியில் சட்ட விரோதமாக வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகளும், வாகன உதிரிப்பாகங்களும் குப்பைகளால் மறைக்கப்பட்டு ஏற்றிவரப்பட்டன.இது குறித்து அச்சுவேலிப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்தது.

இதனையடுத்து அதிரடியாகச் செயற்பட்ட அச்சுவேலிப் பொலிஸார் ஜி.ஸ்ரீ. நிஷங்க ஜயரத்தின தலைமையில் சார்ஜன்ட் யு.டி துஷிதகுமார, கான்ஸ்டபிள் அழகக்கோன் உள்ளடங்கிய குழுவை அமைத்து சட்டவிரோதமாக மரக்குற்றிகளையும் வாகன உதிரிப்பாகங்களையும் ஏற்றி வந்த லொறியை அச்சுவேலி தெற்கு தோப்பில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

லொறிச் சாரதியையும் அவரின் உதவியாளரையும் கைது செய்த பொலிஸார் 25 மரக்குற்றிகளையும்டொயோட்டோ வான் என்ஜின்,கியர் பொக்ஸ் மற்றும் வாகன உதிரிப்பாகங்களையும் கைப்பற்றினார்கள்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-6-11)

# ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஓக. 19

நீதிமன்றங்களில் வெற்றிடமாக உள்ள ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 5 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றதுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்துப் பாடம் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

தகைமையுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

# சட்ட விரோதமாக மின்சாரம்பெற்ற 17 பேர் சாவகச்சேரி நீதிமன்றில்

## அபராதமும் இழப்பீடும் செலுத்துமாறு உத்தரவு

தென்மராட்சி, ஓக. 19

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 17 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 1லட்சத்து 70 ஆயிரம் ரூபா அபராதமும், மின்சாரசபைக்கு ஏற்பட்ட இழப்பாக 1 லட்சத்து 21 ஆயிரத்து 875 ரூபாவும் செலுத்துமாறு கடந்த 17 ஆம் திகதி உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாருடன் இணைந்து இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரிப் பிரிவினர் கடந்த 17 ஆம் திகதி அதிகாலை 2 மணி தொடக்கம் கைதடி, நாவற்குழி, தச்சன்தோப்பு ஆகிய பகுதிகளில் நடத்திய பரிசோதனையின்போது சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 17 பேரைக் கைது செய்தனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் மின்சாரசபைக்கு ஏற்பட்ட இழப்பாக ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட தொகையினை செலுத்துமாறும் உத்தரவிட்டார். (த-207)

# திறப்பு விழா இன்று

வடமராட்சி, ஓக. 19

வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் அபிவிருத்தி அமைப்பின் அலுவலகம் நெல்லண்டை வீதி, தும்பளை கிழக்கில் இன்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ-236)

# பாடசாலைச் சிறுவர்களிடையே மூலிகைத் தோட்டப் போட்டி

பருத்தித்துறை, ஓக. 19

நாடு முழுவதுமுள்ள பாடசாலைச் சிறார்களுக்கிடையே மூலிகைத் தோட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது. இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பாடசாலை ரீதியாகக் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைச் சிறார்களிடையே ஆயுள்வேத வைத்திய முறைமை மற்றும் மருந்து மூலிகைகள் தொடர்பாக விருப்பத்தினை ஏற்படுத்துதல் மற்றும் அறிவினைப் பெருக்குதல், மருந்து மூலிகைகளை அடையாளம் காணுவதில் இயலுமையை ஏற்படுத்தல், அன்றாட வாழ்க்கையில் மருந்து மூலிகைகளைப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தினை அடையாளம் காணுதல், மூலிகை மருந்துகளின் பெறுமதி மற்றும் ஆகாரத்தின் பெறுமதி தொடர்பான அறிவினைப் பெருக்குதல் அழிந்து போகின்ற மற்றும் அபூர்வமான மருந்து மூலிகைகளைப்பாதுகாத்தல், ஆயுள்வேத சுதேச வைத்திய முறைமை தொடர்பான உயர்கல்விக்கு சிறார்களை ஊக்குவித்தல் மற்றும் இயற்கையுடன் கூடிய சூழலில் நோய் நொடியற்ற எதிர்கால சந்ததியினரை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இப்போட்டி பாடசாலைச் சிறார்களிடையே நடத்தப்படவுள்ளது.

பாடசாலைகளில் தரம் 5 தொடக்கம் தரம் 10 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு இப் போட்டியில் முன்னுரிமை வழங்குமாறும் பாடசாலையில் சூழலுக்கென்று ஒரு குழு இருப்பின் அவர்களையும் பங்குபற்றச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதலாமிடத்தைப் பெறுபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடத்தைப் பெறுபவருக்கு 20 ஆயிரம் ரூபாவும், மூன்றாவது இடத்தைப் பெறுபவருக்கு 15 ஆயிரம் ரூபாவும், நான்காவது இடத்திலிருந்து பத்தாவது இடம்வரை பெறுபவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் பத்தாவது இடத்திலிருந்து இருபத்தைந்தாவது இடம் வரை பெறுபவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படவுள்ளன. வெற்றி பெற்ற அனைவருக்கும் ஆயுள்வேத திணைக்களத்தினால் பெறுமதியான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (த-26-190)

# ‘சமூகக் காவலன்’ விருது வழங்கி நான்கு பேருக்குக் கௌரவம்

யாழ்ப்பாணம் , ஓக. 19

சமூக, பொருளாதார,கலை, கலாசார மற்றும் வைத்திய சேவைகளில் முழு வினைத்திறனாகச் செயற்பட்ட நான்கு பேருக்கு சிறந்த சமூகக் காவலன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

யாழ்- காவேரி கலாமன்றத்தின் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் இந்த கௌரவிப்பு விழா இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொண்டு விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

பாரம்பரிய உணவு மற்றும் மரபு ரீதியான தொழில்துறையை மாவட்ட மட்டத்தில் வளர்த்து சமூகத்தில் தமிழ்ப் பண்பாட்டை காத்தமைக்காகச் சிறந்த சமூகக் காவலர் விருது மூளாயூரைச் சேர்ந்த திருமதி பொன்மலர் இராசேஸ்வரனுக்கு வழங்கப்பட்டது.

மரபு ரீதியான கவிதை மற்றும் சொற்பொழிவுகள் மூலமும் சிறந்த கருத்தாடல் மூலமும் சமூகத்திற்கு மாவட்ட மட்டத்தில் உயிர்ப்பையும், வழிகாட்டலையும் வழங்கிய எஸ். சிவசுப்பிரமணியத்திற்கு சிறந்த சமூகக்காவலன் விருது வழங்கப்பட்டது.

இளைய தலைமுறையினருக்குத் தமிழ் மரபு கலைகளைக் கற்பிப்பதற்கும், சமூகங்களின் மேம்பாட்டிற்கும் அயராது உழைத்த வைத்திய கலாநிதி பிரேமன் ஜெயரட்ணத்துக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட மட்டத்தில் சமூகத்தின் உயர்வான வாழ்வுக்கும் நல்லொழுக்க மேம்பாட்டிற்கும், சுகவாழ்வு,மதுஒழிப்பு, டெங்குக் கட்டுப்பாடு மற்றும் பிரதேச அபிவிருத்திகளில் முழுவினைத்திறனுடன் செயற்பட்ட வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணிக்கும் சிறந்த சமூகக் காவலன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.


இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன், வலி. தென் மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம்,காவேரி கலாமன்ற ஸ்தாபகர் வண.ரி.எஸ். யோசுவா அடிகளார் கலந்துகொண்டனர். (த-302)

# கீரிமலை முத்துமாரியம்மன் கோயிலில் ஞாயிறு முதல் நித்திய பூசை வழிபாடு

யாழ்ப்பாணம் , ஓக. 19

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நித்திய பூசை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆதீனகர்த்தா ந.உமாபதீஸ்வரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை அம்பாளைத் தரிசிக்கவரும் பக்தர்களின் நன்மை கருதி இளவாலையிலிருந்து கீரிமலைக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அன்றையதினம் அன்னதானமும் இடம் பெறவுள்ளது. (த-120)



நெடுந்தீவில் சுயதொழில் முயற்சி, இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகள் குறித்து வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் பணிப்புக்கமைய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகரன் உரையாற்றுவதை முதல் படத்திலும் சமூக சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் , கிராம அலுவலர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள் :லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

புலமைச் சுடரே உங்களின் வெற்றிச்சுடர்

தொடர் 10

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010

**வளவாளர்:**

மாணவர் சமூகத்தின் பாராட்டுக்குரிய
எமது தேசிய ஆசிரியர் பி.அம்பிகைபாகன்



**வினாத்தாள் I** — **45 நிமிடங்கள்**

**சுட்டெண்** ____ **புள்ளிகள்** ____


### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. இப்பாடலில் விவரிக்கப்படும் பிராணி எது?
தந்திரமானதாம்
நன்றியுள்ளதைப் போன்றதாம்
ஆனால் நன்றியை மறப்பதாம்
கோழியைப் பிடிப்பதாம்.




1) 2) 3) 4)

02. இப்பாடலில் மிக நன்றாக விவரிக் கப்படும் பொருள் எது?
கற்பதற்கு உதவாது - கல்லை
உடைப்பதற்கு உதவும்- ஆனால்
ஆணி அறைய உதவுமாம்
திருகு ஆணி செலுத்த உதவாதாம்.



1) 2) 3) 4)

03. இந்த உருக்களின் நிரையிலே அடுத்ததாக வரவேண்டிய பொருத்தமான உரு எது?



1) 2) 3) 4)

* மாத நாட்காட்டியை அவதானித்து வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவுசெய்க.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | ? | | □ |
| | | 8 | | | | |
| △ | | | | □ | | ? |
| ? | | | | . | | |
| □ | | △ | | 31 | | |

04. வினாக்குறியிடப்பட்ட இடங்களுக்குரிய திகதி கள் எவை?
1) 3, 18, 27 2) 2, 18, 26
3) 3, 19, 27 4) 4, 16, 29


05. மூன்று □ களினதும் திகதிகளின் கூட்டுத் தொகை யாது?
1) 49 2) 48
3) 51 4) 31

06. △ கள் இரண்டினதும் திகதிகளுக்கிடையிலான வித்தியாசம் எவ்வளவு?
1) 17 2) 16
3) 15 4) 12

* மரத்துண்டின் கோலத்தை அவதானித்து 7ஆம், 8ஆம் வினாக்களுக்குரிய விடை களைத் தெரிவுசெய்க.





07. பக்கம் A இலிருந்து பார்க்கும்போது இந்த மரத்துண்டு தோன்றும் விதத்தைத் தெரிவுசெய்க.



1) 2) 3) 4)

08. பக்கம் Bஇயிலிருந்து பார்க்கும்போது இந்த மரத்துண்டுகள் தோன்றும் விதத்தைத் தெரிவுசெய்க.




1) 2) 3) 4)

09. கூடுகள் ஒவ்வொன்றிலும் இடமிருந்து வலமாக நான்கு எழுத்துக்கள் கொண்ட நான்கு சொற்கள் உருவாகும் வகை யில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1) சமயம்.
2) சாதகம்.
3) சாதிகள்.
4) காந்தம்.

| | | | |
|---|---|---|---|
| பா | ட | | லை |
| கா | கி | | ம் |
| ப | க் | | ம் |
| சி | ல | | பு |


10. A, B, C, D எனும் நால்வரில் 3 தடவைகள் இடது பக்கமும் 2 தடவைகள் வலது பக்கமும் திரும்பியவர் யார்?





1) A யும், D யும். 2) B யும், C யும்.
3) A யும், C யும். 4) B யும், D யும்.

* **கீழுள்ள படவரிசையில் வித்தியாசமான ஒன்றைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கீறிடுக.**

11. 1) 2) 3) 4)



12. 1) 2) 3) 4)



13. முதலீடு மாறுபாடுகளையும் அவதானித்து மூன்றாவது மாறுபாட்டுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

6969 → 6969 | 9999 → 6666 | 1100 → ☐

1) 1010 2) 1001 3) 0011 4) 0101

* சிவப்புச்சாரி உடுத்த வெள்ளை அக்கா கறுத்த காகம் கத்த, சகுனம் சரியில்லை என்று ஊதா நிறச்சாரி உடுத்து மஞ்சள் வாங்க பச்சைத் தண்ணியண்ணை கடைக்குப் போய் நீலம் வாங்கி வந்தாள்.

14. இவ்வாக்கியத்திலுள்ள நிறங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
1) 6 2) 7 3) 4 4) 5

* பந்தியை வாசித்த பின் வினாக்களுக்கான விடையைத் தெரிவுசெய்க.


எமது பாடசாலை ஆரம்ப மணி அடிப்பதற்கு மாணவ தலைவன் அதிபர் காரியா லயம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அதிபர் காலைக் கூட்டத்தில் ஆற்ற வேண்டிய உரையைத் தயாரித்துக் கொண்டிருந்தார். நான் வகுப்பறையை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருந்தேன்.

15. அதிபர் ஆரம்ப மணியை அடித்தார்.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது 4) எல்லாம் சரி

16. அன்றைய காலைக் கூட்டத்தில் அதிபர் பேசினார்.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது 4) எல்லாம் பிழை

* ஒரு கடதாசித் துண்டை நான்காக மடித்து அதில் துவாரங்கள் துளைக்கப்பட்ட விதத்தை முதலில் தரப்பட்டுள்ள உரு காட்டுகிறது. இக்கடதாசித் துண்டை விரிக் கும்போது தோற்றும் உருவைத் தெரிவுசெய்க.

17. 1) 2) 3) 4)



* **18 ஆம், 19 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவுசெய்க.**

18. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை
1) உள்ளதில் திருப்தி இல்லாது இல்லாததை எண்ணி ஏங்குதல்.
2) உள்ளதில் திருப்தி அடைந்து இல்லாததை எண்ணி ஏங்காமை.
3) இக்கரையில் புல் உள்ளது; அக்கரையில் இல்லை.
4) அக்கரையில் புல் உள்ளது; இக்கரையில் இல்லை.


19. இளங்கன்று பயம் அறியாது
1) சிறியவர்களுக்கு துணிச்சல் அதிகம்.
2) சிறியவர்கள் பெரிய காரியம் செய்வார்கள்.
3) சிறியவர்கள் நன்மை - தீமை அறியமாட்டார்கள்.
4) இளங்கன்று சிங்கத்தையும் எதிர்க்கும்.


* **20 ஆம், 21 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகப் பொருத் தமான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்க.**

20. கதிரை : அமர எனின், குதிரை : ...............
1) இருக்க 2) ஓட 3) நடக்க 4) நகர

21. கள்வன் : திருட்டு எனின், விமானி : ...............
1) ஓட 2) பறக்க 3) செலுத்த 4) பாய

22. கடல், கப்பல், மாலுமி என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவ தற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் B யினால் காட்டப்படுவது யாது?
1) கடல் 2) கப்பல்
3) மாலுமி 4) மீன்





* **23 ஆம், 24ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலத்திற்கு ஏற்ப ? குறி உள்ள அடைப் புக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

23. 1) 4 2) 6
3) 8 4) 3

24. 1) 42
2) 36
3) 24
4) 32

| | | | | |
|---|---|---|---|---|
| 50 | 48 | 46 | 44 | 42 |
| 32 | 34 | ? | 38 | 40 |
| 30 | 28 | 26 | 24 | 22 |
| 12 | 14 | 16 | 18 | 20 |
| 10 | 8 | 6 | 4 | 2 |

25. ஒரு சதுரமுகியின் வெவ்வேறு மூன்று நிலைகள் காட்டப்பட்டுள்ளன. இதற் கேற்ப 2 இற்கு எதிரேயுள்ள இலக்கம் யாது




1) 2 2) 3 3) 1 4) 6

* **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

26. எல்லா புத்தகங்களிலும் இருக்கக்கூடியது
1) கேள்விகள் 2) கேள்வி - பதில்
3) படங்கள் 4) பக்கங்கள்

27. எங்கள் குடும்பத்தில் என்னிலும் வயது குறைந்தவர்
1) அண்ணா 2) அண்ணாவின் அக்கா
3) அக்கா 4) அக்காவின் தம்பி

28. வெப்பத்தால் விரிவடையக்கூடிய பொருள்
1) பஞ்சு 2) நூல் 3) கயிறு 4) கம்பி

* கீழுள்ள படவரிசையில் முதலாவது படத்திற்கு இரண்டாவது படம் ஏதோவொரு வகையில் தொடர்புடையது, அதேபோல் மூன்றாவது படத்திற்கு தொடர்புடைய படத்தை 4, 5 இல் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு 'ஜெய்க்கா' அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 19

ஜப்பானின் 'ஜெய்க்கா' நிறுவனம் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு அனுமதியை வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில், 'ஜெய்க்கா' நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களால் 10 திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் பெரும்பான்மையான திட்டங்கள் விவசாயம் மற்றும் மீன்பிடி சார்ந்தவை. இதில் 8 திட்டங்களுக்கு அனுமதிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு திட்டங்களுக்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை.

அனுமதிக்கப்படாத 2 திட்டங்கள் தொடர்பாகச் சமர்பிக்கப்பட்ட தரவுகள் திருப்தியாக இல்லாமை காரணமாகவே அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவரங்கள் பின்னர் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் குடாநாட்டில் தூர்ந்த நிலையில் உள்ள 7 குளங்களைப் புனரமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டதுடன் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக 13 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள காக்கைதீவு, நாவாந்துறை ஆகிய இறங்கு துறைகளைப் புனரமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக 20 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-319)

# தேசிய மொழிகள் அமைச்சின் நடமாடும் சேவை 3 தினங்கள்

நல்லூர்,ஓக. 19

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் ஐ.நா பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் நீதி, நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டமும் ஒருங்கிணைந்து நடமாடும் சேவையை நடத்தவுள்ளன.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவில் இன்று வியாழக்கிழமை, நாளை வெள்ளிக்கிழமை எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்களுக்கும், 21ஆம் திகதி சனிக்கிழமை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் காலை 9 மணிக்கு பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான இந்த நடமாடும் சேவை இடம்பெறும்.

இடம்பெயர்ந்தவர்கள் தமக்குத் தேவையான சட்ட ஆவணங்களைப் பெற இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டத்தின் வடமாகாணப் பொறுப்பாளர் சியாத் அறிவித்துள்ளார். (த-111)

# நல்லூர் ஆலயத்தில் தினமும் 300 பொலிஸார் கடமையில்

யாழ்ப்பாணம், ஓக 19

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு 26 நாள்களும் சுமார் 300 பொலிஸார் 24 மணிநேரக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவுக்கு இம்முறை பெருமளவு பக்தர்கள் வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளியிடங்களிலிருந்தும் பெருமளவான மக்கள் வருகைதந்த வண்ணம் உள்ளனர்.

எனவே சன நெரிசல் ஏற்படும் சாத்தியமுள்ளதால் பொலிஸார் மக்களை வழிநடத்தி அவர்களது வழிபாட்டை இலகுபடுத்தும் வகையில் ஆலய சூழல், வாகனத் தரிப்பிடங்கள் போன்ற இடங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இவ் உற்சவத்தின் பெருந் திருவிழாவான தேர்த்திருவிழாவில்சுமார் 600 பொலிஸார் வரை சேவையில் ஈடுபடுத்தப்படுவர் - என்றார். (த-16)




# சனசமூக நிலையங்கள் 25 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், ஓக. 19

டெங்கு மக்கள் மத்தியில் உயிர் கொல்லி நோயாக உருவெடுத்திருப்பதால் இதனைத் தடுப்பதற்கு சனசமூக நிலையங்கள் யாவும் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளில் ஈடுபடவேண்டுமென சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சனசமூகங்களின் சம்மேளனம் 12 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள் முன்னெடுக்க வேண்டுமெனக் கேட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணி முதல் 11 மணி வரை யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள் தங்கள் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களின் சமாசத்துடன் இணைந்து சிரமதானப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும், இதன் மூலம் இந்த நோயைவராமல் தடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதேச சபைச் செயலாளர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி சமாசத்தை ஊக்குவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-26-207)

## ரம்ழான் சிந்தனை

இந்த மாதத்தின் ஒவ்வொரு நாளும் பொழுது விடியும் போது எண்ணற்றவர்களுக்கு எப்படிப்பட்ட அருள்பேறு கிடைக்கின்றன தெரியுமா? இறைவனுக்காகவே, அவனின் கட்டளைகளுக்குக் கீழ் படிய வேண்டும் என்பதற்காகவே இறை வாய்ப்பைப் பெறவேண்டும் என்பதற்காகவே தம்முடைய ஆகுமான உடற்தேவைகளையும்; இச்சைகளையும் துறந்து விட்டு ''இறைவனே எங்கள் அதிபதி இறை உவப்பே இலக்கு என்றும் அவனுக்கே கீழ் படிந்து வாழவேண்டும் என்கின்ற ஆசையில் தான் வாழ்வின் அசல் பசியும் தாகமும் உள்ளன என்றும் அவனது உவப்பில் தான் இதயங்கள் நிறைவுபெறுகின்றன என்றும் சான்று பகர்கின்றது.

# பொது மக்களுக்கு ஏற்புடைய கடன்களை இனங்காண்பது தொடர்பான பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.19

பொது மக்களுக்கு ஏற்புடைய கடன்களை இனங்காண்பது தொடர்பாக வங்கி உத்தியோகத்தர்களுக்கு உரிய பயிற்சியொன்று இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறி நாளை மறுதினம் சனிக்கிழமை 'கிறீன் கிறாஸ்' விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் டபிள்யூ.எம்.கருணாரத்ன கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் வங்கிக்கடன் உத்தியோகத்தர்களுக்குத் தம்மை நாடிவரும் பொது மக்களுக்கு வழங்கக் கூடிய இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டத்தை தெரிவுசெய்து அவை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது பற்றிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் இ.சிறிதரன் தெரிவித்துள்ளார். (த-16)

# தங்க நகை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

மானிப்பாய் வீதி, கட்டுடைப் பகுதியில் நேற்று முன்தினம் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அதனை தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (எ-314-318)

# அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் பௌஸி யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,ஓக.19

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி எதிர்வரும் 28 ஆம் திகதி விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். வருகிறார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற 'தேசிய பாதுகாப்புத் தினம்' இவ் வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெறஉள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல்களும் இடம் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி யாழ். குடாநாட்டில் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளார்.

மேலும் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலிலும் அமைச்சர் பங்கு பற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-319)




கொழும்பு, 'வோட்டேஜ்' ஹோட்டலில் அண்மையில் ஐந்தாவது வருடாந்த லயன்ஸ் கழக மாநாட்டின் போது கழகத்துக்கு அதி கூடிய அங்கத்தவர்களை இணைத்தமைக்காக நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் (2009/2010) லயன் பி.கே.பி.பாலசங்கருக்கு முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் இயன் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதைக் காண்கிறீர்கள். அருகில் ஆளுநர் (2009/2010) லயன் லக்ஷ்மன் காணப்படுகிறார்.

# 'நெல்சிப்' அபிவிருத்தி முன்மொழிவுகளை கொத்தணி ரீதியாகப் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம்,ஓக.19

வலிமேற்கு பிரதேச சபை நெல்சிப் அபிவிருத்தி முன்மொழிவுகள் கொத்தணி ரீதியாக மக்கள் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அபிவிருத்தி முன்மொழிவுகள் விரைவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குயாழ். பிராந்திய உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் ஊடாகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எனவே மக்கள் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட நெல்சிப் அபிவிருத்தி முன் மொழிவுகளை பொது மக்கள் நாளை வெள்ளிக்கிழமை முதல் 23 ஆம் திகதி வரை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

எதிர்காலத்தில் முன்னுரிமைப் பிரகாரம் 'நெல்சிப்' அபிவிருத்திகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என, பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (த-302)







காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய [illegible] படங்கள். விருந்தினர்கள் விழா மேடைக்கு அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் [illegible] மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பதை இரண்டாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் ஆ.சிவசோதியின் துணைவியார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம். *(படங்கள் : டர்னிகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதிக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த லொறியின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை 50ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கினை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 6 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (எ-207)


## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள EXP Marketing Company தனது கிளை நிறுவனங்களை யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் நிறுவுவதற்கு 10 பேருக்கு முகாமைத்துவ பயிற்சி வழங்கவுள்ளது.

பயிற்சியின்போது *(3மாதம்)* Earning 15000/= - 25000/=வும்
பயிற்சி நிறைவில் Earning 65000/= இற்கு மேல் சம்பாதிக்க முடியும்
தகைமை: O/L அல்லது A/L ஆண், பெண். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தொடர்பிற்கு: 021 7200545


## இனிமையாக, பதமாக, அளவாகப் பேசுதல் சிறப்பு

எப்படி வளர்க்கப்பட்டோம் என்பதைச் சுட்டிக்காட்டுவீது நாக்கே. பார்வையில்லாத விவசாயி ஒருவனைப் பார்த்து 'ஏ தரித்திரம்' இந்தப்பக்கம் சிப்பாய் அணி வகுத்துச் சென்றது உன்காதில் விழுந்ததா? என்று கேட்டான் வழிப்போக்கன் ஒருவன். சில நிமிடங்கள் கழித்து மற்றொருவன் 'ஏ' குருடு! உன்னைத்தான்.இந்தப் பக்கம் சில சிப்பாய்கள் சென்ற சப்தம் உன் காதில் விழுந்ததா? என்று வாயைத் திறந்து சொல்லு என்று அதே விவசாயியிடம் கேட்டான். அதன்பின் மூன்றாவது ஒருவன் வந்து ஐயா! இந்தப்பக்கம் சிப்பாய்களின் அணிவகுப்பு எதுவும் நடந்ததா? எனக் கேட்டான். இறுதியாக இன்னொருவன் அவனருகே வந்து தோளில் கை வைத்து- அருமைப் பெரியவரே! இந்த வழியாக யாராவது அணி வகுத்துச் சென்றார்களா? என்று தயவு செய்து சொல்லுங்கள் என்று கேட்டான். ஒரு சிப்பாய், ஒரு அதிகாரி, ஒரு மந்திரி ஆகியோருடன் ஒரு அரசனும் சென்றதாகப் பார்வையில்லாதவன் வினாத்தொடுத்தவர்களுக்குப் பதிலளித்தான்.

நாக்கே இதயத்தைக் காக்கும் கவசம். அது ஒருவரின் வாழ்வைக் காப்பாற்றும். உரக்கப் பேசுவது, நெடுநேரம் பேசுவது, வசைபாடுவது, வெறுப்புடனும் சினத்துடனும் பேசுவது இவை அனைத்தும் மனிதனின் உடல்நலத்தைப் பாதிக்கும். அது மற்றவர்களிடம் சினத்தையும் வெறுப்பையும் வளர்க்கிறது. பிறரைப் புண்படுத்தவும் பகைக்கவும் செய்கிறது.



கால்வழுக்கி விட்டால் உங்கள் எலும்பு முறிகிறது. ஆனால் நாக்கு வழுக்கிவிட்டால் மற்றவர்களின் நிம்மதியையும், மகிழ்ச்சியையுமல்லவா அது குலைக்கிறது. நாவினால் சுட்டபுண் ஒரு போதும் ஆறாது. எனவே மிக எச்சரிக்கையுடன் இனியேனும் பேசுங்கள். இனிமையாகப் பேசுவது, பதமாகப் பேசுவது, குறைவாகப் பேசுவது முதலியவை உங்களுக்கும் உலகத்துக்கும் நன்மை பயக்கும்.

**சாயி சிந்தனை**




LOLC
imagine the possibilities





"டக்காலா லீசிங்" ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்

டக்காலா Leasing

நீங்களும் LOLC "டக்காலா" leasing ஒன்றை பெற்று "ரூம்ம்ம்" என்று காரில் செல்லுங்கள்

- உங்களுக்கேற்ற வாடகைகள்
- விரைவு மற்றும் சினேகபூர்வமான சேவை
- நிறுவனத்தாலேயே காப்புறுதி மற்றும் மதிப்பீடு
- நாடளாவிய ரீதியில் கிளைகள் வலையமைப்பு

☎ 011 5 880 600
✉ inquiries@lankaorix.com


# இதய அஞ்சலி



வர்த்தகப் பெருங்கடல்

## எஸ்.வி.முருகேசு ஐயாவின்

அன்பான அரவணைப்பும் ஆசியும் பெற்று அவர் நிழலில் முப்பத்தேழு
வருடங்கள் பணியாற்றி நான் பெற்ற அனுபவங்களை
எண்ணிப் பார்க்கின்றேன். பூரிக்கின்றது நெஞ்சம்.
தமிழர் வர்த்தகத்துறையில் கடந்த நூற்றாண்டின் பேரொளி என்று கருதப்படவல்ல
அவரிடம் தொழில்சார் நுணுக்கங்களைக் கற்றவன் என்பதில் பெருமை கொள்கின்றேன்.
அவரின் நிர்வாகத் திறமையும், வழிநடத்துதலும், ஆளுமையும்
என்னைப் போன்ற பலரை இத்துறையில் கால்பதித்து வெற்றிநடை போட உயர்த்தின.
பெருந்தகையின் வர்த்தகத் துறைப் பண்புகள் எங்களைப் போன்ற
ஆர்வலர்களைப் புடம் போட்டது. எமது உயர் நிலைக்கு வித்திட்ட எஸ்.வி.முருகேசு
ஐயாவின் பாதார விந்தங்களைக் கண்களில் பதித்து அவரது ஆத்மா சாந்தி பெற வண்ணை
வெங்கடேஸ்வரனை இறைஞ்சுகின்றேன்.
வர்த்தக வள்ளல் எஸ்.வி.முருகேசு ஐயா அவர்களுக்கு எனது நெஞ்சுருகிய
அனுதாபங்களைத் தெரிவித்து அவருக்குரிய எனது நன்றியைக்
குடும்பத்தினர் ஈண்டு ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.
செம்மல் எஸ்.வி. முருகேசுவின் மறக்க முடியாத சேவைகளை என்றும் மனதிருத்தி
எனது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றேன்.

அவர் என்றும் எங்களுடன் வாழும் தெய்வமாக ஒளிபெற

**த.தியாகலிங்கம்**
உரிமையாளர்,
வைகுந்தன் களஞ்சியம்.

**280, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இரு வருடங்களில் 36 ஆயிரம் மாணவர்கள் அகதிகளாக இடம்பெயர்வு

கிளிநொச்சி, ஓக. 19

யுத்தம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் 36 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் அகதிகளாகியுள்ளனர் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே அதிகளவில் இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 32 ஆயிரம் மாணவர்கள் இந்த இரண்டு மாவட்டங்களிலும் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்து வந்ததால், இந்த மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் சில வருடங்கள் பின்தங்கியுள்ளனர்.

இதனால் குறித்த மாணவர்களை இலக்காக கொண்டு துரித கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது அவசியமானது என வடமாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடபகுதியில் மீள்குடியேற்றப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும் சுமார் 4 ஆயிரம் மாணவர்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே வசித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## காவலரண் அகற்றப்பட்டது

கிளிநொச்சி, ஓக.19

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மைதானப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கிளிநொச்சி மத்திய கல்லூரி அதன் மைதானப் பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளில் இயங்க ஆரம்பித்ததையடுத்து இக்காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

இக்காவலரணுக்கு அருகில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (த- 405)

# மாங்குளம் மக்கள் வங்கியில் அடகு நகைகளுக்கு நஷ்டஈடு

கிளிநொச்சி, ஓக. 19

மாங்குளம் மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளுக்கான நஷ்டஈடு வழங்கப்பட்டு வருவதாகக் கிளை முகாமையாளர் எஸ்.ஸ்ரீதரன் அறிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி முதல் மாங்குளத்தில் அமைந்துள்ள வங்கிக் கட்டடத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை கிழமை நாள்களில் இந்த நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நஷ்ட ஈட்டினைப் பெறுவதற்கு வருவோர் அடகுச் சீட்டின் மூலப் பிரதி, அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டின் மூலப்பிரதி ஆகியவற்றை எடுத்து வர வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடகுச் சீட்டினைத் தொலைத்தவர்கள், இறந்தவர்கள், காணாமற்போனோர், வெளிநாட்டில் உள்ளவர்கள் ஆகியோரின் அடகுகளுக்கான நஷ்டஈடு உரிய ஆவணங்களைப் பெற்றுக் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

இந்த நஷ்ட ஈட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான காலவரையறை குறிப்பிடப்படாமையால் வாடிக்கையாளர்கள் ஆறுதலாக வங்கி நாள்களில் நகைகளுக்கான பெறுமதியைப் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மன்னாரில் ரம்ழான் நோன்பாளிகளுக்கு பேரீச்சம் பழம் வழங்கப்படவில்லை

மன்னார், ஓக. 19

புனித ரம்ழான் நோன்பு ஆரம்பித்து ஒரு வாரமாகியும் மன்னாரிலுள்ள நோன்பாளிகளுக்குப் பேரீச்சம் பழங்கள் விநியோகிக் கப்படாமை குறித்து இங்கு வாழும் முஸ்லிம்கள் பெரிதும் கவலையடைந்துள் ளனர்.

ஒவ்வொரு வருடமும் ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்கும் முஸ்லிம்களுக்கு வழங்கவென அரபு நாடுகளிடமிருந்து பல தொன் பேரீச்சம் பழங்கள் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருவது வழமையாகும்.

அவ்வாறே இம்முறையும் சவுதி, கட்டார், ஈரான், குவைத் நாடுகளிடமிருந்து ஏராளமான தரமான பேரீச்சம் பழங்கள் வந்து சேர்ந்துள்ளன. ஆயினும் இன்று வரை இப்பழங்கள் மன்னார் முஸ்லிம்களுக்கு விநியோகிக்கப்படவில்லை.

சென்ற ஆண்டு ரம்ழானில் ஏற்பட்ட தாமதம் போல் இம்முறையும் தாமதம் ஏற்பட்டுள்ளதனால் முஸ்லிம் நோன்பாளிகள் பேரீச்சம் பழத்தை ஒரு கிலோ 300 ரூபா கொடுத்தே சந்தையில் வாங்குகின்றனர். (த-80)

# சர்வோதய மத்திய நிலையத்தினால் 65 பயனாளிகளுக்கு சுயதொழில் உதவி

மன்னார், ஓக.19

மன்னார் சர்வோதய மத்திய நிலையத்தின் அனுசரணையில் சுமார் 68 பயனாளிகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்கான உபகரணங்களும், இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

சம்பவத்தில் மாந்தை மேற்கில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட ஐந்து கிராம சேவகர் பிரிவுகளிலுமுள்ள, 10 கிராமங்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கே இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் தள்ளாடி இராணுவக் கட்டளை அதிகாரி மைத்திரி டயஸ் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக மாந்தை மேற்கு 215 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி விக்கும் லியனகே மற்றும் அப்படைப்பிரிவின் சிவில் நிர்வாக அதிகாரி நலிந்த மாறாவித்திராண ஆகியோர் முன்னிலையில் சர்வோதய மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் இவ்வுபகரணங்களையும் இயந்திரங்களையும் வழங்கினார்.

அடம்பன், கருங்கண்டல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தையல் இயந்திரங்களை 22 பயனாளிகளும், தச்சு இயந்திரங்களை 23 பயனாளிகளும், மேசன் உபகரணங்களை 23 பயனாளிகளும் பெற்றுக்கொண்டனர்.

தள்ளாடி இராணுவக் கட்டளைத் தளபதி மைத்திரி டயஸ், 215 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி விக்கும் லியனகே, 215 படைப்பிரிவின் சிவில் நிர்வாக அதிகாரி நலிந்த மஹாவித்தாரண, சர்வேதய மன்னார் இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் ஆகியோர் இதில் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கினார்கள். (த-80)




# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் தொடர்ந்தும் மீள் குடியேற்றப் பணி

கிளிநொச்சி, ஓக.19

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 4ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்தும் மீள் குடியேற்றம் நடைபெற்று வருகின்றது.

இதன் பிரகாரம் நாளை வெள்ளிக்கிழமை ஸ்கந்தபுரம், கண்ணகை புரம், கோணாவில், அக்கராயன்குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீள் குடியேற்றம் நடைபெறவுள்ளது.

நலன்புரி முகாம்களில் இருந்த இக்கிராம மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் தற்போது இக்கிராமங்களைச் சேர்ந்த தற்காலிகமாக வேறுமாவட்டங்களில் வசித்து வருபவர்களே மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவ்வாறு வேறு இடங்களில் வசிக்கும் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தற்போது தாம் வசிக்கும் கிராம அலுவலர் பிரிவில் தமது பதிவுகளை நீக்கி அக்கிராம அலுவலர் பிரிவுக்கான பிரதேச செயலரால் மேலொப்பமிடப்பட்ட கடிதங்களைக் கொண்டு நாளை வெள்ளிக்கிழமை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத் தங்கல் முகாமிற்கு வருகை தரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தினத்தில் குறிப்பிட்ட 6 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதால் அக்கிராம மக்கள் மட்டும் வருகை தரமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத்தங்கல் முகாமில் வைத்து திருவையாறு மேற்கு, பாரதிபுரம், மலையாளபுரம், பொன்னகர், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு மீள்குடியேற்றப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு இராணுவ புகைப்படங்கள் எடுக்கப்பட்டு இலக்கங்கள் வழங்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்டனர். (த-405)

## செம்மொழி விழாவுக்கான ஆலோசனைக் கூட்டம்

மன்னார், ஓக. 19

மன்னார் தமிழ்ச் சங்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மூன்று நாள்கள் நடத்தவுள்ள தமிழ் செம்மொழி விழாவுக்கான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் கவிஞர். எஸ். வி.சிவகரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ள மன்னாரில் வாழும் தமிழ் அபிமானிகள், அரச உயர் அதிகாரிகள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட திகதியில் மன்னார் அரச செயலகத்தின் 'ஜெயக்கா' கேட்போர் கூடத்தில் காலை 9 மணியளவில் சமூகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்பணி தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் கூட்டம் நடைபெறும். (த-80)

# மன்னாரில் வாகனங்கள் அதிகரிப்பால் தினமும் தொடரும் வீதி விபத்துக்கள்

மன்னார், ஓக. 19

மன்னாரில் அதிகரித்திருக்கும் வாகனப் பாவனையின் காரணமாக வீதி விபத்துக்களும் அதிகரித்துச் செல்கின்றது. நாட்டில் நிலவி வந்த யுத்தம் முடிவடைந்ததையடுத்து வடபகுதி உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்குமான போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்பட்டிருக்கும் நிலையில் மன்னார் மாவட்டத்திலும் வரையறையற்ற வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் வாகனங்களின் பயன்பாடுகளும் அதிகரித்திருக்கும் நிலையில் வீதி விபத்துக்களும் அதிகரித்துச் செல்வதையே அவதானிக்க முடிகின்றது.

மன்னாரில் பல்லாயிரக்கணக்கான சைக்கிள்களும், ஆயிரக்கணக்கான மோட்டார் சைக்கிள்களும் நூற்றுக்கணக்கான சிற்றூர்திகள்,பார ஊர்திகள், பேருந்துகள் மற்றும் எங்கு திரும்பினாலும் தலைதெறித்து ஓடித்திரியும் முச்சக்கரவண்டிகள் எனப் பல்வேறு வகையான விதம் விதமான வாகனங்களும் இரவு பகலாக பிரதான வீதிகள், சிறுவீதிகள், உள்ளக வீதிகள் என்பவற்றில் ஓடித்திரிகின்றன.

அகலம் குறைந்த வீதிகள் வழியாக பார ஊர்திகள் செல்ல முற்படுவதனாலும் வேகக் கட்டுப்பாடு இன்றி சாரதிகள் தமது வாகனங்களை செலுத்துவதனாலும் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதை தடுக்க முடியாமல் இருக்கின்றது.

மதவாச்சி, மன்னார், தலைமன்னார், (ஏ-14) நெடுஞ்சாலை உள்ளிட்ட மன்னார் நகரின் பிரதான வீதிகள் அதிநவீனமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டிருப்பதை அடுத்தே வீதி விபத்துக்கள் இடம்பெறத் தொடங்கியிருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க மன்னார் நகரின் மையப்பகுதிகள் எங்கிலும் உள்ள வீதியோர நடைபாதைகளை அங்காடி வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருவதனால் நகரின் மையப்பகுதி சனநெரிசலுக்கு உள்ளாகியே இருக்கின்றது. (த-80)

# வன்னிப் பிராந்தியத்தில் பெற்றோரற்ற 1,200 சிறுவர்கள்

கிளிநொச்சி, ஓக.19

வட மாகாணத்தில் பெற்றோரின் பராமரிப்பு அற்ற 1200 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கில் பெற்றோர் இருவரையும் அல்லது தாயையோ தந்தையையோ இழந்த நிலையில் பெற்றோரின் பராமரிப்பு அற்ற 1200 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்தும் அடையாளம் காணப்பட்ட இந்த சிறார்களை வடமாகாணத்தின் ... பாதுகாப்பான நான்கு ... இல்லங்களுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த 1200 சிறுவர்களும் செப்ரெம்பர் முதல்வாரத்திலிருந்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள நான்கு சிறுவர் இல்லங்களில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்படவுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாந்தை வடக்கு மற்றும் வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமே 1200 சிறுவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 12 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர். இவர்களை பராமரிப்பதற்கு தேவையான நிதியை வடமாகாண சபையின் ஊடாக ஒதுக்கத் தீர்மானித்துள்ளதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு அதிரடி மலிவு விற்பனையில்...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறைச் சாதனங்கள், சகல மரபின் வகைகள், கோமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், காஸ்மீ திபோன்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0215672061, 077 7578277.

VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.

## கண்ணீர் அஞ்சலி



களபூமி காரைநகரைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும், சமூக சேவையாளரும், பரோபகாரியுமான

**ச.வி.முருகேசு**

(ஸ்தாபகர் SVM PVT(Ltd) யாழ்ப்பாணம், கொழும்பு) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத்தின் மூத்த வர்த்தகரும் உயர்ந்த குணவியல்பைக் கொண்டவருமான

**எஸ்.வி.முருகேசு**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

உரிமையாளரும் ஊழியர்களும்
**தெய்வேந்திரம் ஸ்ரோர்ஸ்,**
இல.62, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 12 ★ 05 ★ 1949



உதிர்வு 23 ★ 08 ★ 2007

**அமரர் செல்லையா சந்திரன்**

திதி: தசமி

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்புகாட்டி
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
ஆண்டு மூன்று சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் நீங்காது.

ச.வசீகரன் (மகன்)
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (102161) குடும்பத்தினர்.

வேலைக்கு ஆள் தேவை

எமது நிறுவனத்துக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள்தேவை.
1.விற்பனைப் பிரதிநிதி-பெண்/ஆண் 2. விற்பனை உதவியாளர்-பெண்/ஆண் 3.கணனிப் பதிவாளர்-பெண் 4. விற்பனையாளர்- ஆண் 5.சாரதி.
விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரங்களை எமது நிறுவனத்துக்கு தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பிவைக்கவும்.

"ஐங்கரன் மோட்டோர்ஸ்"
மானிப்பாய்.

விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப் பாவனைக்கும் உகந்த திண்டுக்கல் இரும்புப் பெட்டகங்கள் (IRON SAFE) தேவையான அளவுகளில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:- இரும்புப் பெட்டகத் தொழிலகம், இல.13, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0779698942

விற்பனைக்கு

52-XXXX இலக்கமுடைய டபிள்கப் இசுசு கன்ரர் வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- பிரகாஸ், எலக்ரோனிக்ஸ், பருத்தித்துறை. 0773222837

## மதுப்பிரியர்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஒக 19

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் தாவடிச்சந்திக்கு அருகில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையத்தில் மாலை நேரங்களில் மதுப்பிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் அப்பகுதியில் அவர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள இந்த மதுபான விற்பனை நிலையத்தில் மதுபானம் கொள்வனவு செய்வோரின் அதிகரிப்பால் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

மதுபானங்களை வாங்கும் மதுப்பாவனையாளர்கள் அவற்றை கூட்டம் கூட்டமாக வீதியோரத்தில் நின்றுகொண்டே அருந்திவிட்டு வீதியில் செல்வோருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதாயும் இதனால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு உரியதரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-313)

## இலங்கைக்கு வரும் பிரி. சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 19

இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரிட்டன் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 51 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. 30 ஆண்டுகளுக்கு பின்னர் பிரிட்டன் இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகளை அண்மையில் முழுமையாக நீக்கியிருந்தது.

கடந்த வருட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் அதிகளவான பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் தடை செய்யப்பட்டிருந்த பல பிரதேசங்களை பார்வையிட சுற்றுலாப் பயணிகள் அதிக நாட்டம் காட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 14 ★ 08 ★ 1922



ஆண்டவன் அடியில் 30 ★ 08 ★ 2009

**திருமதி செல்லையா விசாலாட்சி**

திதி: தசமி (19.08.2010)

அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து
எமையெல்லாம் வாழவைத்த
எம் அன்புத் தெய்வமே! எம் அம்மாவே!
எமையெல்லாம் விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஆனதம்மாவே!
ஆனாலும் உங்கள் பாசத்துயரம் எங்கள்
மனதைவிட்டு அகலாதம்மா
உங்கள் ஆன்மா சாந்தி பெற்று
இறைவன் திருவடி சேர இறைவனை வேண்டுகின்றோம்.

மகன், மருமகள், பேரன், பேர்த்தி, பூட்டப்பிள்ளைகள்.
பிரான்ஸ். (102194)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 ★ 04 ★ 1934



மறைவு 20 ★ 07 ★ 2010

**திருமதி சரஸ்வதி இராசதுரை**

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே!
அன்பாலே எம்மை அரவணைத்து பண்பாலே
எம்மை வழிநடத்தி
நிலையில்லா வாழ்வினிலே நீங்கா நினைவுகளைத் தந்து
நிலையான வாழ்வுதேடி சென்றீரே!

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (19.08.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (102171)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



கடந்த ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது கடை உரிமையாளரின் தாயாரான

**பொன்னுச்சாமி பரமேஸ்வரி**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சிறிகுமரன் கடை ஊழியர்கள்,**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரியானது விவாத மேடை தவறானது

# பஞ்சாபி அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

## சரியானது

எமது கலாசாரம் பண்பாடு என்பது எமது நடைமுறைகளிலேயே தங்கியுள்ளது. எமது கலாசாரத்திற்கு எல்லா வகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆடையை அணிவதுதான் முக்கியமே. தவிர சேலைதான் எம் கலாசாரம் பஞ்சாபி அல்ல என்று சேலையைவிட எமது கலாசாரத்தை வெளிப்படுத்தக்கூடிய பஞ்சாபியை ஒதுக்கி வைப்பது தவறு.

எமது கலாசாரம் அடக்கமான ஆடை அணிய வேண்டும் என்கின்றதே தவிர சேலைதான் எம் கலாசாரம் ஆகாது. எமமே முன்னோர்கள் தமது அறிவிற்கு எட்டியபடி புடவையை அழகாகச் சுற்றி சேலை ஆக்கினார்கள். அக்காலத்தில் தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சி குறைவு. இப்போது நாம் தொழில்நுட்ப ரீதியில் எல்லாத்துறைகளிலும் முன்னேறிவிட்டோம். இலகுவாகவும் விரைவாகவும் எம் கலாசாரத்திற்கு ஏற்ற வகையில் அணியக்கூடிய பஞ்சாபி உருவாக்கம் பெற்றுள்ளது. அதை அணிவதில் எதுவித தவறும் இல்லை. நம் முன்னோர்கள் உருவாக்கியதுதான் எமது பாரம்பரிய உடை எனில் இலைகுழை கூட எமது பாரம்பரிய ஆடைதான்.

நம் தமிழரின் பாரம்பரிய தொழில் உழவுதான். என் தாத்தா செய்ததும் உழவுதான். அதுதான் எம் தொழில் என்று தற்போதைய இளைஞர் எல்லோரும் ஏர்தான் பிடிப்பேன் பேனா அல்ல என்று ஒற்றைக் காலில் நின்றால் இப்போதைய கால கட்டத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றா?

இலக்கிய காலப் பெண்கள் அணிவது கூட கிட்டத்தட்ட பஞ்சாபியின் அமைப்பு கொண்டதுதான் (பரதநாட்டியத்தில் பயன்படுத்தும் ஆடை போல).

தற்போதைய நிலையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளோர்முதல் கோடீஸ்வரர் ஈறாக சரிசமமாக அணியக்கூடிய உடை எனில் அது பஞ்சாபி மட்டும்தான். ஆகவே எல்லோரையும் சரிசமமாகப் பார்க்க வேண்டிய ஆலயங்களில் பஞ்சாபி அணிவது தவறல்ல.

அது போல, சேலையைக் கருவாக வைத்து பண்பாடு, கலாசாரத்தில் தவறி நடப்பதை விட, பண்பாடு, கலாசாரத்தைக் கருவாக வைத்து அதற்கு பொருத்தமான ஆடையை அணிவதிலேயே கலாசாரம் தங்கியுள்ளது அதைவிட்டு வீண் பிடி வாதங்களில் அல்ல.

**சத்தியகீதா யேசுநேசன்**
உபய கதிர்காமம், புலோலி, பருத்தித்துறை.

## தவறானது

'யாழ்ப்பாணம்' என்பது - கலை,கலாசாரம், பண்பாடு, உடை, தமிழ் மொழி, சமய விழுமியங்கள், மனித சுபாவம் யாவும் சேர்ந்த ஒரு தனித்துவமான மக்கள் குழாம் வாழும் பிரதேசமாகும். உலகமே யாழ்ப்பாண மக்கள்மீது அபார நம்பிக்கையையும் வாழ்க்கையினையும், வரவேற்பினையும் வைத்திருக்கிறது. ஆலயங்கள், பிரமாணங்கள், ஆகமங்கள், அந்தணர்கள், மந்திரங்கள், வழிபாடுகள், அபிஷேகங்கள், பிறப்பு, இறப்பு யாவுமே மாற்றமில்லாது உள்ளவாறு பிரகாசித்த வண்ணம் எம்மை வாழவைத்த வண்ணமேயுள்ளன.

இந்நிலையில் ஒரு பாரம்பரிய சம்பிரதாயத்தை மாற்றி மாற்றிக் கொண்டு செல்வோமாக இருந்தால் அதற்குரிய விலையையும் நாம் தாம் பொறுப்பேற்க வேண்டும். இறுதியில் ஆலய விக்கிரகங்களும், அந்தணர்களும் மாத்திரம் தமிழர் தம் உடைக் கலாசாரத்தினை பேண வேண்டிய பரிதாப நிலையை நாமே அனுபவிக்க வேண்டியவர்களாக இருப்போம். மணவறைச் சம்பிரதாயங்களில் மணப்பெண்ணுக்குப் பஞ்சாபி அணிந்து தாலி கட்ட நாம் சம்மதிக்கிறோமா? ஏன் அதுவே தமிழர் தம் அடையாளம்! ஆலயத்திற்கும் அது (பஞ்சாபி) ஏற்புடையதன்று. சரியானதொரு சமய தலைமைத்துவம் இதுதொடர்பாக தவறு என்று கூறவில்லை. நாவலர் இருப்பாரேயானால் இதில் வென்றிருப்பார்!

**கே. எஸ்.சிவஞானராஜா**
கொக்குவில்.





## "க்ளோஸ் ஃபிரெண்ட்" வேணுமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

தவறாகவே புரிந்து கொள்ளப்படாதது. அதோடு நகைச் சுவையுணர்வும் சேர்ந்துவிட்டால், ஆட்கள் இயல்பாகவே உங்களிடம் ஒட்டிக் கொள்வார்கள். இப்படிப்பட்ட நல்ல குணங்கள் மனதில் பிறக்கின்றன. என்பதை நினைவில் வையுங்கள். ஆகவே பிரயோசனமான, நம்பிக்கையான எண்ணங்களாலும் உணர்ச்சிகளாலும் உங்கள் மனதையும் இருதயத்தையும் நிரப்புங்கள். உலக நடப்புகள், வித்தியாசப்பட்ட கலாசாரங்கள், இயற்கை நிகழ்வுகள் போன்ற ஆர்வத்திற்குரிய பயனுள்ள விஷயங்களைப் படியுங்கள். உற்சாகமூட்டும் இசையைக் கேளுங்கள். அதே சமயத்தில், டிவி, திரைப்படங்கள், நாவல்கள் ஆகியவை உங்கள் மனதையும் உணர்ச்சிகளையும் கற்பனை உலகில் சஞ்சரிக்க வைக்க இடங் கொடுக்காதீர்கள். திரையில் காட்டப்படுபவை எல்லாம் நிஜமானவை அல்லி, நிஜ நட்புறவுகளும் அல்ல, ஆனால் அவை ஒருவரின் கற்பனை படைப்புகளே.

நல்ல நண்பர்கள் கிடைப்பதற்கு நாம் மனந்திறந்து பேச வேண்டும் அதன் மூலம் நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை அவர்களாகவே தெரிந்து கொள்வார்கள். அவ்வாறு பேசுவதும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பகிர்ந்து கொள்வதுமே உண்மையான நட்புக்கு மிக மிக முக்கியம், மாறாக, அழகான தோற்றமோ வசீகரிக்கும் குணமோ அல்ல. நீங்கள் சகஜமாகப் பழகுபவராக இருந்தாலும் கூட, நண்பர்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கை உருவாவதற்குக் காலம் எடுக்கிறது. அதே சமயத்தில் ஒத்த அனுபவங்கள் இருப்பதும் கூட அப்படிப்பட்ட நம்பிக்கையை வளர்ப்பதற்கு உதவுகிறது. இக் காலப்பகுதியில், மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்று ரொம்பவும் கவலைப்படாதீர்கள். (வளரும்)



ஞா.அகுந்தி,
கல்வயல்

## விவாதமேடை

பஞ்சாபி (சுடிதார்) அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

சரியானது | தவறானது

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே ''பஞ்சாபி (சுடிதார்)'' அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது சரியானதா? தவறானதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## நிம்மதி

**சுகந்தனி கருணாகரன்,**
சாவகச்சேரி, இந்துக் கல்லூரி. $12A_3$ (2012)

குமுறிக் கொந்தளிக்கும்
கொடுமைகளை சுமந்து நிற்கும்
எங்கள் மண்ணுக்கும்- மக்களுக்கும்
என்றைக்கு நிம்மதி?

கொடிய யுத்தமெனும்
கோரக் கதை முடிந்த பின்னும்
மிடியில் தவிக்கும் எங்கள்
மக்களுக்கு என்று நிம்மதி?

என்றைக்கோ தொலைந்துபோன அது
எப்போது எமக்கு மீண்டு வரும்
அன்றைய அந்த நாளுக்காக
அனைவரும் இங்கு காத்திருக்கிறோம்



கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

''பஞ்சாபி (சுடிதார்)'' அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

சரியானது ☐ தவறானது ☐

பெயர் :-.............................................
முகவரி :-.............................................
:-.............................................
அடையாள அட்டை இல:.............................................

உங்கள் தீர்ப்புகளை 26.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும்,\
பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்
**'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது.
இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.............................................
முகவரி :-.............................................
:-.............................................
........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகா எம்.பிக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.19

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணைகள் நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் இரண்டாவது நீதிமன்றம் நேற்று முன்தினம் காலை கூடியது.

இதன்போதே நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

சரத் பொன்சேகா இராணுவ சேவையில் இருந்தபோது இராணுவத்துக்கான ஆயுதக் கொள்வனவு விடயத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மோசடி தொடர்பிலேயே இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)


## விளை நிலத்திற்கு பாரிய சக்தி

**Kaushalya Motor Trading (Pvt)Ltd.**
**Colombo 08.**

இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் விவசாய மன்னன்

**GN 12 Super Fang**



இலவசம்



**GN 12 Super Fang**

கை உழவுஇயந்திர விற்பனை நிலையம்
இன்று கிளிநொச்சியிலுள்ள கரடிப்போக்கில் திறந்துவைக்கப்படுகிறது.
உழவுஇயந்திரத்துடன் பல உப உபகரணங்கள் இலவசமாக கிடைப்பதுடன் செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கொள்வனவு செய்பவர்களுக்கு புத்தம்புதிய சைக்கிள் இலவசமாக வழங்கப்படும்.
இந்த உழவு இயந்திரத்திற்கு 6 மாத உத்தரவாதம் வழங்கப்படும்.
இலகுதவணைக்கொடுப்பனவுமுறையிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

கிளைகள்:


கரடிப்போக்கு சந்தி
யாழ்ப்பாண வீதி, கிளிநொச்சி.
தொ.பே: 077 1746182
பக்ஸ்: 011 2684247

இல: 162, யாழ்ப்பாண வீதி,
வவுனியா. (கமத்தொழில் மத்திய நிலையத்திற்கு முன்னால்)
தொ.பே: 077 1746182


## மரண அறிவித்தல்

### கதிரவேலு தியாகராஜா

(இராசம் லொறி உரிமையாளர்)



யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 8/3, புகையிரத வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தியாகராஜா 16.08.2010 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் தங்கமணி, காலஞ்சென்றவர்களான சுபத்திரை, சுப்பிரமணியம், கனகரெட்ணம், கோதாவரி, பராசக்தி, ஈஸ்வரி, நவரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரன் (கனடா), அபிராமி (கனடா), அமிர்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மயூரதி, சுரேஷ் (கனடா), ஜயந்தன் (உரிமையாளர், திவ்வியா ஸ்ரோர்ஸ்- கந்தர்மடம், பிரீமி ஸ்ரோர்ஸ்- கலட்டி) ஆகியோரின் அன்பு மாமனும் திவ்விஜனி, பிரீமிகா, ஆரன், அதீஸா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08. 2010) வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/3, புகையிரத வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(102209)

தகவல்:
குடும்பத்தினர்

# ‘அற்றைத் திங்கள்’ கூத்துருவ நாடகம்

இலங்கை கூத்து மரபுகளின் சங்கமமாகத் தயாரிக்கப்பட்ட பாரி மன்னனின் வீர வரலாற்றினை எடுத்தியம்பும் 'அற்றைத் திங்கள்' என்னும் கூத்துருவ நாடக நிகழ்வு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் படைப்பாகிய இந்நாடகம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமையும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6.45 மணிக்கு யாழ்.திருமறைக்கலாமன்ற அரங்கில் நடைபெறும். பலஆண்டுகளுக்கு முன்னர் இதே பாணியில் அமைந்த 'கொல்ஈனும் கொற்றம்' நாடகத்தை தயாரித்து மேடையேற்றி பல தரப்பினரதும் பாராட்டைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-135)



## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆவணித் திங்கள் 6 ஆம் நாள் (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 09.55 மணிமுதல் 11.39 மணிவரையுள்ள துலா இலக்கினமும் உத்தராட நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபவேளையில்

திரு.திருமதி
பாலசிங்கம் பத்மலோஜினி
தம்பதியரின் புத்திரன்
திருவளர் செல்வன்
**தவகுமார்**
அவர்களுக்கும்



திரு.திருமதி
மகாலிங்கம் ஸ்ரீ ரஞ்சனா
தம்பதியரின் புத்திரி
திருவளர் செல்வி
**துளசி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு தாவடி அம்பலவாண கந்தசுவாமி கோயில் (முருகமூர்த்தி கோயில்) திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும் :

அச்செழு வடக்கு, நீர்வேலி.
செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

80, Benleigh DR,
Scarborough Ont,
Canada MIH 1J6

(இரு வீட்டார் அழைப்பு)


## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

**R.T.R. ICE CREAM CORNER**

இன்று 19.08.2010 வியாழக் கிழமை மு.ப. 10.39 தொடக்கம் 11.20 வரையுள்ள சுபநேரத்தில்மேற்படி எமது நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்
எனும் முகவரியில்
கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**R.T.R. ICE CREAM CORNER**

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
தொ.பே: 021 321 808






## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha 17.08.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2280

வெற்றி எழுத்து: Y
வெற்றி எண்கள்: 8 1 5 0 3 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 8 | 1 | 5 | 0 | 3 | 6 | ரூபா.17,722,819/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 1 | 5 | 0 | 3 | 6 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 1 | 5 | 0 | 3 | 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 5 | 0 | 3 | 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 130 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 3 | 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1323 |
| 5 பரிசுகள் | | | | | | 3 | 6 | ரூபா. 100/= | பரிசுகள் 13184 |
| 6 பரிசுகள் | | | | | | | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 130960 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 1 | 5 | 0 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | | 8 | 1 | 5 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 133 |
| 9 பரிசுகள் | | 8 | 1 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1324 |
| 10 பரிசுகள் | | 8 | 1 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13114 |
| 11 பரிசுகள் | Y | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52417 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 12,050,040.00**

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு **Rs. 18,899,084.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

மக்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயம்




கோப்பாய் பிரதேசத்தில் இராஜவீதிச் சந்திக்கு அண்மையில் உரும்பிராய் வீதியில் அருள் வழங்கும் இவ் ஆலயம் அமைந்துள்ளது.

இவ் ஆலயம் யாழ். குடாநாட்டில் உள்ள விஷ்ணு ஆலயங்களில் மிகவும் பிரசித்தி வாய்ந்தவைகளில் ஒன்று. இவ் ஆலயம் ஏனைய விஷ்ணு ஆலயங்களோடு ஒப்பிடுகையில் வழிபாட்டு முறைகளில் சற்று வித்தியாசம் காணப்படுகிறது.

அதாவது ஆகம விதிமுறைகளை விடுத்து மரபு வழியாக வந்த பக்தி மார்க்க பூஜை முறை இங்கு பின்பற்றப்படுகிறது.

இங்கு ஆலயத்தில் ஈடுபாடு கொண்ட அடியார்களின் உதவியோடு பூஜை, அபிடேகபூஜை, கூட்டுப் பிரார்த்தனைகள் சிறப்பாகக் கைக்கொள்ளப்படுகின்றன.

தினமும் ஒருவேளை பகல் பூஜை நடைபெற்று வருகிறது.

இவ் ஆலய வரலாற்றை எடுத்து நோக்கும்போது பரந்து, விரிந்த பழம் பெரும் நாடாம் பாரத கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடியில் விரிந்தகலை என்பது ஒரு சிற்றூர்.

அந்நியராட்சியில் மதமாற்றம் செய்யப்பட்ட பல பரத குலமக்கள் இங்கே வியாபாரம் செய்து வந்தார்கள். அப்படியான ஒரு நடுத்தர கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவரே இவ் ஆலயத்தின் முதலாவது குருநாதர்.

இவரது இளமைப் பெயர் சேவியர். இளம் பராயத்திலே தந்தையை இழந்து விட்டார். இதனால் குடும்பப் பாரத்தைச் சமாளிப்பதற்காக பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு உடலுழைப்பிற்கு ஆயத்தமானார். அதனால் கப்பலோட்டிகளின் துணையோடு இலங்கை வந்தார். கொழும்பிலே தன் உறுப்பினர்களோடு வசித்து துறைமுகத் தொழிலாழியாய் பணிபுரிந்தார். காலப் போக்கில் பணிகளில் முன்னேற்றம் கண்டு வருமானத்தை பெருக்கினார்.

1942 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தால் குடும்பமும் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

தொடர்ந்து 1958 ஆம் ஆண்டு சித்திரை தமிழ் திங்கள் 2ஆம் திகதி நாற்பத்து மூன்று முக்கோணமும் நவக்கிரகங்களும் கொண்ட சக்கரம் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் நிலைநாட்டப்பட்டுக் கூட்டுப் பிரார்த்தனை மூலம் வழிபாடு செய்யப்பட்டது. தூய தமிழில் பூஜை வழிபாடுகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

குருநாதருடன் இரத்தினம்மாளின் சகோதரர்களான பழனியப்பா, பாக்கியம்மா, அன்னபூரணம் ஆகியோருடன் குரும்பசிட்டியைச் சேர்ந்த நாகநாதர் (ஐயம்பிள்ளை) காந்தியம்மா ஆகிய எல்லோரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை மூலம் வழிபட்டு வந்தனர். குருநாதர் தன் தீப வழிபாட்டின் படி பலரது நோய்களைத் தீர்த்து வைத்தார்.

1958 ஆம் ஆண்டு தொடக்கம் மஹோற்சவம் நடைபெறத் தொடங்கியது. 1969 ஆம் ஆண்டு ஆடி மாதம் 14 ஆம் திகதி புனர்பூசத்தன்று குருநாதர் சமாதியடைந்தார். அதைத் தொடர்ந்து 1973 இல் இரத்தினம்மாளும் சமாதியடைந்தார். இதன் பின்பு ஆலயப் பொறுப்பை பழனியப்பாவும் சாமியப்பாவும் அவருடன் ஏனைய ஞானக் குழந்தைகளும் நடத்திவந்தனர். *(தொடரும்)*



# வலி.கிழக்கு விதாதா வளநிலையம்




"விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பங்களை மக்களுக்கு வழங்குவதன் மூலம் கிராமிய இயற்கை மற்றும் மனிதவள அபிவிருத்திக்காக வளங்களை உபயோகித்து வேலையில்லாப் பிரச்சினையைக் குறைத்து வாழ்வு நிலையை முன்னேற்றம் அடையச்செய்தல்'' என்ற நோக்குடன் விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சினால் பிரதேச செயலர் பிரிவு வாரியாக விதாதா வளநிலையங்கள் நிறுவப்பட்டுவருகின்றன. கிராமத்துக்கு தொழில் நுட்பம் என்றவகையால் யாழ். மாவட்டத்தில் 7 விதாதா வள நிலையங்கள் செயற்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் முதன் முதலாக நிறுவப்பட்ட வலி. கிழக்கு விதாதா வளநிலையம் கோப்பாய் - மானிப்பாய் வீதியில் கோப்பாய் மத்தியில் (கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அண்மையில்) வீதிக்கு தெற்குப் புறமாக உள்ள கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது. 2006 ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்டது. நிலையத்தில் பொறுப்பதிகாரியாக பத்மநாதன் பகீரதன் (விஞ்ஞான பட்டதாரி) கடமையாற்றி வருகின்றார்.

விதாதா வளநிலையங்கள் மத்தியில் அவற்றின் செயற்பாடுகள் கட்டமைப்புக்கள் தொடர்பாக நடத்தப்பட்டுவரும் போட்டியில் வலி.கிழக்கு விதாதா நிலையம் யாழ்.மாவட்ட நிலையம் முதலாம் இடத்தைப் பெற்றதோடு வடக்கு மாகாண மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளிலும் கலந்துகொண்டுள்ளது. அண்மையில் தேசிய மட்ட போட்டிக்கான மதிப்பீட்டுக் குழுவினர் விதாதா வளநிலையத்தை நேரில் பார்வையிட்டு மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

"வலி.கிழக்கு விதாதா வளநிலையம் மாவட்ட நிலையிலும் வடக்குமாகாண நிலையிலும் முதலாம் இடம்பெற்று தேசியரீதியில் போட்டியில் கலந்துகொண்டு இருப்பதற்கு அதன் நேர்த்தியான செயற்பாடும் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பும் அங்கு பயிரிடப்பட்டுள்ள பயிரினங்கள் மூலிகைகள்; வீட்டுத் தோட்டம், நாற்றுமேடை அமைப்பு, பழப் பயிர்கள், கால்நடைப் பண்ணை, சேதனைப்பசளை உருவாக்கம், இயற்கை கிருமிநாசினி பிரயோகம் பண்ணை அமைப்பு, முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள், காட்சிப்படுத்தல் முறை, கையாளப்படும் சுய உற்பத்திக் கருவி சாதனங்கள், பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிகள், பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், விவசாயிகள் இளைஞர்களுக்கான பயிற்சிகள், மற்றும் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிகள், கணனிப்பயிற்சி, மாணவர்களுக்கான பொது அறிவுசார்ப் போட்டி, மற்றும் பொறுப்பதிகாரி பகீரதனின் முகாமைத்துவ ஆற்றல் அங்குபணிபுரியும் பணியாளர்களின் நேர்த்தியான சேவை என்பனவும் காரணமாக இருக்கலாம். *(தொடரும்)*




ஞானஆதவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்

அவசரப்பட்டு செய்த காரியம் ஒன்றால் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். பஸ் பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தரலாம். கணவன் மனைவி இடையே சிறு விடயங்களுக்காக பெரிய அளவில் வாக்குவாதம் ஏற்படலாம். சக ஊழியர்களை பரிகாசம் செய்து பேசி அவர்களின் கோபத்திற்கு ஆளாவீர்கள். கோபம், வேகம் தவிர்க்கவும்.

### இடபம்

சோர்வுகளை விலக்கி ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறலாம். மலை போல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்வீர்கள். கடன் மிகுதி ஒன்றை நண்பர்களிடம் கைமாத்து வாங்கி தீர்ப்பீர்கள். முகவர் தொழில் புரிவோர் ஏற்றம் காண்பர். பெண்களுக்காக, பிள்ளைகளுக்காக செலவு செய்வீர்கள்.

### மிதுனம்

குழப்பங்கள் நீங்கி எதிலும் தெளிவான சிந்தனையுடன் செயற்படும் நாள். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். வாகனங்கள் வழியில் பராமரிப்புச் செலவுகளைச் சந்திக்கலாம். கடந்த காலத்தில் தொல்லையாக இருந்த சிலர் இன்று உதவிகரமாக இருப்பர். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

### கடகம்

குறைந்த செலவில் முடியுமென நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். வழக்கத்திற்கு மாறாக கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆட்படலாம். அரசு தொடர்பான காரியங்கள் இழுபறிக்கு பின்னர் முடிவுக்கு வரும். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டி கொள்ள முற்படுவீர்கள். சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள்.

### சிங்கம்

சக ஊழியர்களின் ஏட்டிக்கு போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். தந்தை வழியில் அன்பு தொல்லைகளுக்கு ஆள்படலாம். நண்பர் ஒருவர் மீது கோபம் வந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். வெளியூர்களில் இருக்கும் உறவினர்களைத் தொடர்பு கொண்டு நலம் விசாரிப்பீர்கள்.

### கன்னி

விருந்தினர் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். திட்டமிட்ட வேலைகளை சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை சக ஊழியர்களிடம் சொல்லி முடித்துக் கொள்வீர்கள். உங்களின் செயற்பாடுகளை பற்றி மற்றவர்கள் பெருமையாகப் பேசலாம்.

### துலாம்

பேச்சில் கடுமையை குறைத்து, கனிவைக் கூட்ட வேண்டிய நாள். குடும்ப உறுப்பினர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நிதியுதவிகள் பெற மேற்கொண்ட முயற்சிகளில் தடை தாமதங்களைச் சந்திக்கலாம். சிலரிடம் வாக்குக் கொடுத்துவிட்டு அதில் மாற்றம் செய்யலாம். பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்கலாம்.

### விருச்சிகம்

வரவுகளை எதிர்பார்த்து செலவு செய்வீர்கள். குடும்பத்துடனோ அல்லது தனியாகவோ வெளியிடங்களுக்கு செல்லலாம். உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். நீங்கள் பொறுப்பாக செயற்பட்டாலும், சிலர் உங்களை குறை சொல்லலாம். தன்னிச்சையாக சில காரியங்களில் இறங்கி சாதனை படைப்பீர்கள்.

### தனுசு

சிறிய வேலை ஒன்றை முடிக்க பல முறை அலையலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். மருத்துவம் தொடர்பான காரியங்களுக்காக காத்திருக்கலாம். பண விவகாரங்களில் சிலருடன் காரசாரமாக வாக்குவாதங்கள் செய்யலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

### மகரம்

நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள். பழைய பொருள்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைத்து பெருமிதம் கொள்வீர்கள், பெண்கள் பெற்றோர் வழியில் உதவிகளைப் பெறலாம். மாமன், மைத்துனர்கள் உங்களின் முயற்சிகளுக்கு துணையாக இருப்பர். பணவரவு உண்டு.

### கும்பம்

எந்த காரியத்தையும் தடையின்றி விறுவிறுப்பாக செய்து முடிப்பீர்கள். பல நாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதிகள் வரலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகலாம். எதிர்ப்புகள் போட்டிகளை முறியடிப்பீர்கள். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று பாசம் அதிகரிக்கும்.

### மீனம்

மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். உங்களின் அனுபவம் ஒன்றை பற்றி மற்றவர்களிடம் சொல்வீர்கள். உங்களுக்கு பாதகமாக செயற்பட்டவர்களையும் மன்னிப்பீர்கள். சிறு பணவரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகள் காத்திருக்கும். நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் கோவில்களுக்கு சென்று வழிபாடு செய்வீர்கள்.


Internationally Recognized and Affordable

UK Qualification

Delivered locally...... Recognized globally......

edexcel BTEC

HND
Higher National Diploma

in Computing (General)
in Computing (ICT System Support)
in Computing (Software Development)

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

New Batch Starts on 10.09.2010



IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 [illegible] Fax:- 021 222 6933
Web:- iis.edu.lk



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1217 நீலம்

விருச்சிகம் 06 13 28 32 17-08-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 224,479 | 20/- | 4,489,580/- |
| 2 இலக்கங்கள் | 20,635 | 40/- | 825,400/- |
| 1 இல. + லக்கினம் | 20,418 | 60/- | 1,225,080/- |
| 2 இல. + லக்கினம் | 1,880 | 200/- | 376,000/- |
| 3 இலக்கங்கள் | 545 | 1000/- | 545,000/- |
| 3 இல. + லக்கினம் | 54 | 10,000/- | 540,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 10,601,060/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 595 | | 596,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 268,610 | | 11,197,060/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 02 31 36 41

ஜக்பொட் பரிசு ரூபா. 1,100,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 592 | 500/- | 296,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,100,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 595 | | 596,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,200,000/-


## துயர் பகிர்கின்றோம்



அமரர் S.V.முருகேசு ஐயா அவர்கள் வடமராட்சி, நெல்லியடியில் வர்த்தகத் தொழிலினை ஆரம்பித்து யாழ். மண்ணில் S.V.M என்றும் எழில் நாமத்துடன் வர்த்தகத்துறையில் முடிசூடா மன்னனாக வாழ்ந்த பெருந்தகை. அன்னாருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், S.V.M ஸ்தாபனத்தினர் மற்றும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

K.K. ரட்ணம்
குமாரி ஸ்ரோர்ஸ், ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் (பருத்தித்துறை வர்த்தகர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மீது பொலிஸார் தாக்கியமை தொடர்பாக விசாரணை நடத்தக் கோருகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக. 19

தாம் பொலிஸாரால் தாக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் என்று விஜித ஹேரத் எம்.பி. நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்பி அவர் உரையாற்றியவை வருமாறு:-

காலியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக முறைப்பாடு ஒன்றைச் செய்வதற்காக இம் மாதம் 12ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது முறைப்பாடுகளை ஏற்கும் அலுவலர்கள் தற்போது இல்லை என்று பொலிஸார் கூறினர்.

பொலிஸ் அத்தியேட்சகரைச் சந்தித்து எமது முறைப்பாட்டை முன்வைப்பதற்கு நாம் முயற்சி செய்தோம். அவரைச் சந்திக்கவிடாது பொலிஸார் எம்மைத் தடுத்தனர்.

நாங்கள் எம்.பிக்கள் எமக்கு முறைப்பாடுகள் செய்ய உரிமை உண்டு என நாம் பொலிஸாரிடம் கூறினோம். அதற்குப் பொலிஸார்; எம்மைக் கழுத்தில் பிடித்துத் தள்ளினர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட பல பொலிஸார் எம்மைத் தாக்கினர்.

பொலிஸ் அத்தியேட்சகர் முன்னிலையிலேயே இது நடந்தது. அவரின் உத்தரவின்படி பொலிஸார் எம்மைக் கைது செய்தனர்.

நாம் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினோம் என்று எம்மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியே எம்மைக் கைதுசெய்தனர்.

எம்.பிக்களுக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களுக்கு என்ன நடக்கும் என்று சொல்லத்தேவையில்லை. இந்த விடயத்தில் சபா நாயகர் கவனஞ்செலுத்த வேண்டும் - என்றார். (சி)

# அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைதானோர் எவரும் பூஸா தடுப்பு முகாமில் இல்லை

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 19

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட எவரும் காலி பூஸா தடுப்பு முகாமில் இல்லை என்று நேற்று அரசால் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாய் மூல விடைக்கான வினாவின்போது பிரபா கணேசன் எம்.பி எழுப்பியிருந்த கேள்விக்கு அரசால் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது.

பிரபாகணேசனின் கேள்வி நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தபோதும் அந்தக் கேள்வியைக் கேட்பதற்கு பிரபாகணேசன் நேற்று முன்தினம் நாடாளுமன்றிற்கு வந்திருக்கவில்லை.

இதனால், ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அவரது கேள்வியை ரவிகருணாநாயக்க எம்.பி கேட்டார்.

அந்தக் கேள்விக்கான பதிலை பிரதி அமைச்சர் விஜயமுனி சொய்ஸா சபாபீடத்தில் சமர்ப்பித்தார். அந்தப் பதிலிலேயே மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

• அத்தோடு அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளோரில் 21 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு அவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்தப் பதிலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# அமெ.படையினர் குழு இலங்கைக்கு விஜயம்

கொழும்பு, ஒக. 19

அமெரிக்காவைச் சேர்ந்த படையினர் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் வான், கடல், தரை மற்றும் பொதுச் சுகாதார சேவையைச் சேர்ந்த நாற்பது பேர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

இலங்கை அரசுடன் இணைந்து வைத்திய மற்றும் கட்டட நிர்மாணப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ உத்தியோகத்தர்கள் ஆறு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு சேவைகளை ஆற்ற உள்ளனர் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் விசேட மருத்துவசேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் வைத்திய சிகிச்சை முகாம்களை நடத்துதல் ஆகிய சேவைகள் மேற் கொள்ளப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 19

நல்லைக் கந்தன் ஆலயப் பெருந் திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு திருமதி குமுதா உமாகாந்தனின் பாட்டுக் கச்சேரி இடம் பெறும்

கே.பத்மநாதன் வயலினும், எஸ்.துரைராசா மிருதங்கமும், ஏ.செல்வரத்தினம் கடமும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக் கந்தன் ஆலயப் பெருந் திருவிழாக் காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'என் கடன் பணி செய்து கிடப் பதே' என்னும் தலைப்பில் சைவப் புலவர் இராசையா சிறீதரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். அராலி கோமாதா அறநெறிப் பாட சாலை, அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## கந்தன் கருணை

துயரோடு வருகின்றேன் உனைக் காணவே
- என்
மனமேற நினக்கென்றும் பொழுதில்லையோ
சிலையேறி இருக்கின்ற திருவேலனே - உந்தன்
திறனாலே எனையாளத் தினம் நாடுவேன்

அழகோடு உறவாடும் எழில் வண்ணனே - தமிழ்
அறிவுக்கு அருள் நல்கும் மனவண்ணனே
பழம் வாங்க வலம் வந்த கனிநெஞ்சமே - என்னை
பழகென்று அழைக்கின்ற உயருள்ளமே

ஒருநாள் யான் வழிபட்டால் அது போதுமே - இதை
ஒரு கோடி யுகமெண்ணி வளமாற்றுவாய்
உருவாகும் சுவையெல்லாம் நீயாகுமா - என்றும்
உயர்வான மனமெல்லாம் நினதல்லவா
குன்றங்கள் தோறும் நின் கொடியல்லவா
- மலர்க்
கூட்டங்கள் தோறும் நின் மணமல்லவா
அன்றாடம் நீ எந்தன் துணையல்லவா - என்
அகமென்றும் நீ பாடும் இசையல்லவா!

ரீ.என்.தவபாலன்
கல்வியங்காடு.

## கண்ணீராய்க் கசிந்துருகு!

எழிலோங்கும் எம்மினம் என்றென்றும் வாழ
வழிகாட்டும் என்னப்பன் வேலன் - விழியெங்கும்
கண்ணீராய்க் கசிந்துருகிக் கந்தா என்றுன்னை
நண்ணினர்க் கருள்வாய் நனி

- ச.லலீசன்

## புதுவாழ்வு தந்தருள்வாய்!

நல்லூரிற் கந்தப்பனே நமக்கருளும் வேலவனே
எல்லோரும் போற்றிடும் எழில்நல்லை வாசவனே
பல்லோரும் பணிந்திடும் பார்வதியாள் புத்திரனே
பொல்லாத வினையகற்றிப் புதுவாழ்வு தந்தருள்வாய்!

- சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

## எம்துயர் கண்டு இரங்குமையா!

ஏன் இந்தக் கோபம் எம்மீது உனக்கு - நல்லைக் குமரா
என்ன பிழை செய்தோம் ஐயா !
வான் அதிர கதறி அழுது உன்னைத் தொழுதேத்தினோம்
வாளாதிருந்த தேனோ பதில் கூறுமையா!
கண்முன்னே எம் சகோதரர்கள் வீழ்ந்து மடிதல்
கண்டும்
புண்பட்ட உன் மனம் மௌனமாய் இருந்ததேனோ
இன்னும் உன்னை நாம் மறக்கவில்லை - கந்தா
இரங்குமையா எம் துயர்கண்டு மனம் இரங்குமையா!

- உதிஷ்டிரன்
நல்லூர்.

## பெற்ற பேறெதுவுமில்லை!


இன்புற்று முருகன் அந்த
இணையிலா மாமயில் மீதேறி
கண்கவர் கயிலை விட்டகன்று
கடுதினில் இலங்கை ஏக
வன்னியில் நடந்தவற்றை
வள்ளியும் வினவி நின்று
அண்ணலே! நீர் நல்லை சென்று
அணிகள் பற்பலவும் மாட்டி
கன்னலும் தேனும் பாகும்
கனிகளும் மாவிளக்கு முண்டு
பண்ணிறை தேவ கானம்
பஜனைகளும் கேட்டு விட்டு
மண்மிசை புரண்டெழுவோர்
மாதரசிகள் அடி அழிப்போர்
உன்னையே எண்ணிக் கண்ணீர்
உதிர்த்திடும் அடியார்க் கெல்லாம்
என்னதான் பதிலுரைப்பீர்?
என்றவள் அதட்டிக் கேட்டு
கண்ணீர் சொரிந்த வாறு
கண்ணிறை கோடலுற்றாள்
துன்புற்ற தெய்வ யானையாளும்
துயரினில் கண் கலங்க
பண்ணிய பாவம் போக்க
பரிகாரம் எதுவுமில்லை
மண்ணில் கலியுகத்தை வெல்ல
மாற்று வழியேதும் இல்லை யென்றான்
பின்னை உம்மோடிருந்து நாம்
பெற்ற பேறெதுவு மில்லை என்றார்.

- விகடகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சண்முகம் விசுவநாதர் முருகேசு



(நெல்லியடி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பிரபல தொழில் அதிபர்)

**Proprietor:- S.V. Murugesu, 154, Hospital Road, Jaffna.**
**Chairman:- S.V.M. (Pvt) Ltd, Dam Street, Colombo - 12**

காரைநகர் களபூமி, இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இல. 17/1, டி.பொன்சேகா றோட், கொழும்பு - 5 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் விசுவநாதர் முருகேசு 16.08.2010 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர்-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா, ஆறுமுகம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான லக்சுமிபிள்ளை, இராசம்மா, சுந்தரம்மா, வேலுப்பிள்ளை, சதாசிவம், கந்தையா, இராமநாதர் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் தங்கராஜா, இராஜேஸ்வரி, நடராஜா, தங்கரத்தினம், பூமணி, குணரத்தினம், சதானந்தன், சிவானந்தன் ஆகியோரின் ஆருயிர்த் தகப்பனும், அம்பலவாணர், சறோஜினி, நாகேஸ்வரன், பத்மராணி, இராசமலர், உமாதேவன், பத்மினி, சர்வேஸ்வரி, சுசிலா தேவி ஆகியோரின் மாமனாரும், இளங்கோ, சங்கர், சுரேகா, சர்மிலா, ஆரூரன், சஞ்சிவன், மேனசா, மகிழினி, தாரணி, சிவசங்கர், சியாம்சங்கர், தயந்திகா, லக்சிகா, சர்மிகா, ராகுல் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2010) வியாழக்கிழமை அவரது கொழும்பு இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: தங்கராஜா: தொ.பே. 0094114378676
நடராசா: 0094772240153, தங்கரெட்ணம்: 0094778177805
குணரத்தினம்: 0094114378675, 0094777325418,
சதானந்தன்: 0094777482265, சிவானந்தன்: 0094777325418.

(சி/570015)

தகவல்:
**பிள்ளைகள்.**

---

# கண்ணீர் அஞ்சலி



எமது வர்த்தக நிறுவனத்தை ஆரம்பித்து
வைத்தவரும் கடந்த 65 ஆண்டுகளாக வர்த்தகத்
துறையில் சிறந்து விளங்கியவரும் காரைநகர்
களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான

## அமரர் S.V. முருகேசு

(பிரபல தொழில் அதிபர், **S.V.M.** கூட்டு நிறுவனங்கள்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரதும் துயரில் நாமும்
பங்கெடுப்பதுடன் அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்

**ESWARRAN** *Traders & Transport Service*
**Eswarran Transport & Passangers Service**

இல.115, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222813/2224317.

இல.01, காடிப்போக்கு,
கிளிநொச்சி.
தொ.பே: 0212285306
பக்ஸ்: 0212285307

இல.201B, டாம் வீதி,
கொழும்பு-12
தொ.பே: 0112433889
பக்ஸ்: 0112435247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிஸ்ரன், ஜெயந்திரனின் அதிரடி கைகொடுக்க மட்டக்களப்பு இந்துவை வென்றது யாழ். சென்றல்

யாழ்ப்பாணம்,ஓக.19

யூலியஸ் கனிஸ்ரனின் சிறப்பான துடுப்பாட்டமும் பந்துவீச்சும் ஜெயந்திரனின் துல்லியமான பந்து வீச்சும் கைகொடுக்க யாழ்.மத்திய கல்லூரி மட்டக்களப்பு இந்துக் கல்லூரியை 184 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ். மத்திய கல்லூரியும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியும் மோதின.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 49 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் யூலியஸ் கனிஸ்ரன் அதிரடியாக ஆடி 71 ஓட்டங்களையும், ஒனசியஸ் 26 ஓட்டங்களையும் சஞ்சயன் 24 ஓட்டங்களையும் ஜெயந்திரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி சார்பில் பந்துவீசிய துஸ்யந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், தனுசன் 10ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களையும் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அன்புஜன் 10 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

219 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி 15.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

லயந்தன், துசித்தன் ஆகியோர் தலா 4 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

யாழ்.மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய ஜெயந்திரன் 2.5 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டத்தை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் யூலியஸ் கனிஸ்ரன் 5 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், செளமிதரன் 5 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிரூபன் ஓர் ஓவர் பந்துவீசி ஓர் ஓட்டத்தைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (6-23)

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.19

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொய்யாத்தோட்ட விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டிகள் யாவும் காலை தொடக்கம் மாலை வரை இடம் பெறவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் 10 கழகங்கள் பங்குபற்றவுள்ளன. (6-23)

## வலைபந்தாட்டம்: அணிகள் தெரிவு

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 12,14 வயதுப் பிரிவுகளுக்கு இடையே முதல் தடவையாக வலைபந்தாட்டப் போட்டியொன்று நடத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகள் வலைபந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் 12,14 வயதுப் பிரிவினர்களுக்கான அணிகளைத் தெரிவுசெய்துகொள்ளும் முகமாக இப்போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

12 வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் நான்கு அணிகளும் 14 வயதுப் பிரிவில் 7 அணிகளும் கலந்துகொண்டன.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-86)

# றோட்டறக்ட் விளையாட்டுப் போட்டி; விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஓக.19

றோட்டறக்ட் கழகம் யாழ்.நகர மையப் பகுதியினரால் விளையாட்டுப் போட்டி ஒன்று யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

போட்டி விவரங்கள் வருமாறு:

இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 4 ஆம்,5 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன. மூன்று பேர் கொண்ட 11 புள்ளிகள் மூன்று சுற்றாக நடைபெறும்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இருபது நிமிடங்கள் ஏழு பேர் கொண்டதாக இப்போட்டி இடம்பெறும்.

ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி செப்ரெம்பர் மாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டி 11,13,15,17,19 ஆகிய வயதுப் பிரிவுகள் மற்றும் வயதெல்லை அற்ற போட்டியாகவும் செப்ரெம்பர் மாதம் 18 ஆம்,19 ஆம் திகதிகளில் இடம்பெறும்.

சதுரங்கப் போட்டிக்கான அனுமதிக் கட்டணம் 50 ரூபாவும் ஏனைய போட்டிகளுக்கான கட்டணம் 300 ரூபாவும் ஆகும். போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 28 ஆம் திகதியாகும். விண்ணப்ப படிவங்களை 'உதயன்' பணிமனையிலும் மற்றும் இல. 175, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ரமணன் ஸ்போட்ஸ் இலும் பெற்றுக் கொள்ள முடியும். போட்டி நிரல்கள் தெரிவு 29ஆம் திகதி இடம் பெறும். (6-319)

# வலிகாமம் கல்வி வலய வலைப்பந்தாட்டம்; இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து

வலி.வடக்கு,ஓக.19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 12 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்ட அரை இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குள் நுழைந்தது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய சில நிமிடங்களிலேயே உடுவில் மகளிர் கல்லூரி எதிர்ப்புக்காட்டிய போதிலும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதனை முறியடித்து முன்னேறத் தொடங்கியது.

இரண்டு பாதி ஆட்டத்திலும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் கைகளே மேலோங்கி இருந்தன.

ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 17:02 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரியை வெற்றிபெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (6-86)

# இறுதி நிமிடம் வரை போராடிக் கூடைப்பந்தாட்ட சம்பியனைத் தனதாக்கியது உடுவில் மகளிர்

வலி.வடக்கு,ஓக.19

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையின் கடும் எதிர்ப்பைச் சமாளித்து உடுவில் மகளிர் கல்லூரி இறுதி நிமிடத்தில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவுப் பெண்கள் அணிகளுக்கு இடையே நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

நான்கு கால்பாதி ஆட்டங்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் கால் பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 11:04 புள்ளிகள் என்ற அடிப்படையில் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் கால் பாதி ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை உத்வேகத்துடன் ஆடிய போதிலும் உடுவில் மகளிர் கல்லூரி 14:13 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

மூன்றாவது கால் பாதி ஆட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை 8:5 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலை வகிக்கையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நான்காவது கால் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப்பாடசாலை 9:6 புள்ளிகள் என்ற நிலையில் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 36:34 புள்ளிகள் என்ற அடிப்படையில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையை வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகியாக உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கமலினி மில்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (6-86)




# 5 000, 10 000 மீற்றர் தூர ஓட்டங்களில் யாழ்.வீரர் ரஜீகரன் புதிய சாதனைகள்



**சாதனைகளின் பதிவுகள்** யாழ்ப்பாணம்,ஓக.19

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தட களப் போட்டியில் ஆண்களுக்கான 5,000 மீற்றர், 10,000 மீற்றர் ஓட்டப் போட்டி நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட வீரர் ரஜீகரன் மாகாண மட்டத்தில் புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற 5,000 மீற்றர் தூர ஓட்டத்தை 16 நிமிடங்கள் 32 செக் கன்கள் 07 வினாடிகளில் ஓடி சாதனை படைத்துள்ளார்.

10,000 மீற்றர் தூர ஓட்டத்தை 34 நிமிடங்கள் 43 செக்கன்கள் 07 வினாடிகளில் ஓடி சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவரின் இந்த இருசாதனைகளும் வடமாகாண பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. (6-23)



பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் பாஷையூர் தண்டர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உள்ளூர் அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் பரிசளிப்பு வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.'

சிறந்த வீரர்களான தெரிவு செய்யப்பட்ட கொக்கக்கோலா அணி வீரர் யரோசனுக்கு பாஷையூர் இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ராமநாயக்கா விருது வழங்குவதையும், ஹப்பினஸ் அணி வீரர் கலிஸ்ரஸூக்கு கப்டன் பாப்பா விருது வழங்குவதையும் வெற்றி பெற்ற ஹப்பினஸ் அணித்தலைவர் திலீபனிடம் பிரதம விருந்தினரான அரச அதிபர் இமெல்டா சுகுமார் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவமங்கை நிவாசம் (பெண்கள் நிலையம்)



# 19.08.2010 திறப்பு விழா அழைப்பு

### கோப்பாய், இராஜ வீதியில் நிறுவப்பட்டுள்ள நவமங்கை நிவாசம் கட்டடத் திறப்பு விழாவில் அதன் ஸ்தாபகர் சுவர்ணா நவரட்ணம் வழங்கிய ஆசிச்செய்தி




எமது பாசமிகு பெற்றோர்களான நவரட்ணம் - மங்கையர்க்கரசி ஆகியோரின் ஞாபகார்த்தமாக இந்த மண்டபம் கட்டப் பட்டுள்ளது. இவர்களின் பெயர்களைக் கொண்டு 'நவமங்கை நிவாசம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் எமது சகோதரிகள் பலர் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இது பற்றி ஆய்வு செய்வதனைவிட அவர்களின் மறுவாழ்விற்காக நாம் என்ன செய்யலாம் என்பது இன்றைய கட்டாயத் தேவையாகவுள்ளது. இந்த இல்லம் ஆதரவற்ற பெண்களின் வாழ்க்கைக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைய வேண்டும் என்பதே என் நம்பிக்கையும் விருப்பமும் ஆகும். இந்த நோக்கம் நிறைவேறி அவர்கள் வாழ்வில் நலமும் வளமும் பெற்று வாழ வேண்டும். சுவாமி பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அருளும் அன்பும் இந்த இல்லத்தைக் கட்டி முடிக்க துணை நின்றது போல, இந்த இல்லத்தைத் தொடர்ந்து நடத்தவும் இங்கு வாழ்பவர்கள் நிம்மதியாக, நம்பிக்கையுடன் வாழவும் சுவாமியின் அன்பும் அருளும் தொடர்ந்து எம்முடன் இருக்க வேண்டும் என அவரின் பாதக் கமலங்களில் வணங்கி வேண்டுகின்றேன்.

அத்துடன் இச்சமயத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில் நவமங்கை நிவாச கட்டடத்தை நிர்மாணித்து உரிய நேரத்தில் தந்த பெருமை கட்டட ஒப்பந்தகாரர் திரு. க.சண்முகநாதன் அவர்களையே சாரும். கடமை உணர்வும், சமூக நலமும் அவரது பணியில் நான் கண்ட சிறப்பான அம்சங்களாகும். அவருக்கு எனது நன்றிகள். 'உயிர் குலத்திற்கு ஆற்றும் மனப்பூர்வமான பணியின் மூலமாக நிலையான இன்பத்தைப் பெறலாம்' என்ற கீதோபதேச வார்த்தைகளுக்கு அமைய மனித நேயத்துடன் வாழ்ந்து இந்த இல்லம் நல்ல முறையில் செயற்படவும் வாழ்பவர் சந்தோசமாக, அமைதியுடன் வாழவும் இறைவனை வேண்டுகின்றேன்.

சுவர்ணா





### செஞ்சொற் செல்வரின் ஆசியுரை



எண்ணம் என்னும் நல்லெண்ணமாகத் திகழ்ந்தால் எத்தனை நல்ல காரியங்களை மனிதர்கள் சாதிக்கலாம். பரந்தஎண்ணமுள்ள மனிதர்கள் சிலர் வாழ்வதால் இவ்வுலகு நிலை பெற்றுள்ளது. 'பண்புடையார் பட்டுண்டு உலகு' என்பது வள்ளுவர் வாக்கு.

கோப்பாய் மண்ணில் புண்ணிய காரியங்கள் செய்யவும் ஈரநெஞ்சுடைய நல்ல மனிதர்கள் காலத்துக்குக் காலம் தோற்றம் பெற்று வருகிறார்கள். அவ்வகையில் கோப்பாய் நவரத்தினம் - மங்கையர்க்கரசி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்து உயர்நிலையில் வாழும் சுவர்ணா அம்மையார் ஆற்றிவரும் கருணைப் பணி போற்றுதற்குரியது. கோப்பாய், இராச வீதியில் 'நவமங்கை நிவாசம்' என்ற நாமத்தில் அழகான ஒரு பெண்கள் நிலையத்தைத் தோற்றுவித்துள்ளமை பாராட்டுதற்குரிய விடயமாகும். லண்டனில் வசிக்கும் அம்மையார் ஆன்மீக உரைக்காக யான் லண்டன் சென்ற வேளை சந்தித்து உரையாடினார். யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அருகில் தனக்குள்ள சொந்த நிலத்தில் ஏதாவது தர்மகாரியம் செய்ய வேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்தினார். அவ்வேளை அம்மையாருக்கு யான் விடுத்த அன்பான வேண்டுதல் உளநலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், துணையற்ற பெண்களுக்கும் மகிழ்வாக வாழும் ஓர் ஆச்சிரமம் அமைத்தால் நல்லது என அறிவுரை கூறினேன். அக்கருத்துக்கு அம்மையார் உயர்ந்த மதிப்புத் தந்தார்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிலையத்தை உருவாக்கியுள்ளார். இந்த இல்லத்தை நிர்வகிப்பதில் ஆர்வமுடைய அன்பர்களை இணைத்து நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளார். கட்டட நிர்மாணத்தைப் பொறுப்பேற்ற திரு.க.சண்முகநாதன் அவர்கள் நன் முறையில் நவமங்கை நிவாசத்தை உருவாக்கி ஒப்படைத்துள்ளார். இவ்வில்லம் ஆன்மீகச் சூழல் நிறைந்த ஆறுதல் வழங்கும் இல்லமாக விளங்க எல்லாம் வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து, இப்பணியில் பெரிதும் உழைத்த சகோதரி சுவர்ணா அம்மையாருக்கு நன்றியையும் வாழ்த்தையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

**ஆறு.திருமுருகன்**

தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

### பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையின் ஆசிச்செய்தி



நவமங்கை நிவாசம் திறப்பு விழாவுக்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பெண்கள் நிலையம் லண்டனில் வாழும் சுவர்ணா நவரத்தினத்தின் இலட்சியங்களால் காலத்தின் தேவைக்கு ஏற்ப உருவாகியுள்ளது. இவர் நலிந்த பிரிவினர் மேலும், தாய் மண்ணிலும், தர்மத்திலும் கொண்டிருக்கும் பற்றுக் களின் விளைவே இப் பெண்கள் நிலையம்.

இத்தகைய சமூக சேவை நிறுவனங்கள் சிறப்புற இயங்குவதற்கு சமூகத்தின் உதவி மிகவும் முக்கியமாகும்.

இந்த நிலையம் உருவாகப் பாடுபட்ட அன்பர்கள் யாவரும் பாராட்டுக்குரிய வர்கள்.

பேராசிரியர்

**பொ.பாலசுந்தரம்பிள்ளை**

முன்னாள் துணைவேந்தர்

### லண்டன் மாநகரில் இருந்து ஆசிச் செய்தி வழங்கியோர்

- ★ திரு. நாகேஸ்வரன் (Station super stores)
- ★ I.T சம்பந்தர் சுடரொளி ஆசிரியர்
- ★ நடாமோகன் - நவஜோதி (Sunrise Radio)
- ★ Mr. வாமாணந்தன் (தலைவர் சைவ முன்னேற்றக் கழகம், லண்டன்)
- ★ கைலநாதசிவமும் ஏனைய குருமாரும் (லண்டன் ஸ்ரீ முருகன் கோயில்)
- ★ திரு. கிரி, திரு. யோகராஜா, திரு. சீலன் (Super Stores, Fasthern)
- ★ திரு. திருமதி திலகராஜ் (Tilko நிறுவனம்)
- ★ திரு. பொஸ் (Select estates)
- ★ திரு. கோபால் (பிள்ளையார் கோயில்)
- ★ திரு. போல் சத்யநேசன் (மேஜர் Newhom council)
- ★ திரு. செல்வராஜ் (பிள்ளையார் கோயில், Ilford)
- ★ Mr. சதானந்தன் (Satha and Company Soliators)

### நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய ஆசிர்செய்தி




ஆன்மீகப் பணிகளில் தலையாயது ஆதரவற்றவர்க்கு ஆறுதல் வழங்கி ஆற்றுப்படுத்தலாகும். எம் மண்ணில் ஆறுதல் தேடி அலைபவர்கள் பலர். போரின் தாக்கம் எத்தனையோ பேரை நிர்க்கதியாக்கியுள்ளது. இந்த நிலையில் பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினை, மனத்தாக்கத்தால் விரக்தியுள்ள நிலையில் இருக்கும் பெண்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. லண்டனில் வசிக்கும் பரோபகாரச் சிந்தனை கொண்ட சுவர்ணா அம்மையாரின் நல்லெண்ணத்தால் 'நவமங்கை நிவாசம்' என்ற நிழல் தோற்றம் பெற்றமை பாராட்டுக்குரியது. இவ்வில்லத்தில் தங்கும் பெண்களை நன்முறையில் வாழச் செய்ய வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் பொதுவான கடமையாகும். இறை ஆசியுடன் இப்பணி சிறக்க நல்லாசி கூறி அமைகிறேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 1) 2) 3) 4) 5)




30. 1) 2) 3) 4) 5)



* 45 நிமிடங்களில் முடிக்கப்பட வேண்டிய தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் 1ஐ செய்து முடிப்பதற்கு ஐந்து மாணவர்களுக்கு எடுத்த நேரமும், அவர்கள் எழுதிய அப்பரீட்சைத் தாள்களை திருத்தியபொழுது அவர்கள் எடுத்த புள்ளிகளும்

| பெயர் | செலவான நேரம் நிமிடங்களில் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| THULASI | 35 | 75 |
| KAMALAN | 40 | 80 |
| AMALAN | 30 | 85 |
| VIMALAN | 45 | 60 |
| MAYURI | 20 | 30 |

* **அட்டவணையை அவதானித்து விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதவும். (பெயர்களைத் தமிழில் எழுதவும்)**

31. இவர்களில் விவேகம் கூடிய பிள்ளை யார்? (.........................)
32. இவர்களில் விவேகம் குறைந்த பிள்ளை யார்? (..................)
33. பரீட்சைத்தாள் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட முழுக் காலத்தையும் பயன்படுத்தியவர் யார்? (.....................)
34. பெற்ற புள்ளிகள் அடிப்படையில் அவர்களின் பெயர்களை இறங்கு வரிசையில் எழுதுக. (..............................................................................)
35. பரீட்சை எழுதிய மாணவர்களின் பெயர்களை ஆங்கில அகர வரிசை ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி ஆங்கிலத்தில் எழுதுக. (..............................................................................)
36. பெற்ற புள்ளிகள் அடிப்படையில் ஆகக்கூடுதலான புள்ளிக்கும் ஆகக் குறைந்த புள்ளிகளுக்கும் இடையில் வித்தியாசம் எவ்வளவு? (............................)

* பின்வரும் சொற்கூட்டங்களில் முதலாம் சொல்லுக்கும் இரண்டாம் சொல்லுக்கும் ஏதோவொரு வகையான தொடர்பு உண்டு. அதேபோல் மூன்றாம் சொல்லுக்குத் தொடர்புடைய சொல்லைத் தெரிவுசெய்து அதனை வினாவிற்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

37. வாகனம் - சாரதி, கப்பல் ..............................
(கடல், பயணி, சரக்கு, மாலுமி)

38. கைவிரல் - மோதிரம், செருப்பு
(கால்விரல், நகம், கால், பாதம்) ..............................

39. பச்சை - கிளி, கறுப்பு
(நிறம், காகம், கருமை, துக்கம்) ..............................

40. கடவுள் - இறைவன், அரசன்
(அரசி, கோன், அரண்மனை, இளவரசன்) ..............................

## வினாத்தாள் II — 1மணி 15நிமிடங்கள்

சுட்டெண் | புள்ளிகள்

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* **கீழே தரப்பட்டுள்ள பாட்லை வாசிக்குக**

**மழை**

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத்திரை கொண்டு விண்ணையடிக்குது
கொட்டியடிக்குது மேகம் - கூ கூவென்று
விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட ட்டடா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்கணம் வந்ததடா தம்பி வீரா.

மழை, வானம், இடிமுழக்கம், காற்று, கடல், அலை, மின்னல், மழைவெள்ளம், மழைத்தூறல், வீட்டுக்கூரை, மேகம்.

01. கீழுள்ள வினாக்களுக்கு மேலுள்ள சொற்கூட்டத்திலிருந்து பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
   1) வெட்டியடிப்பது எது?..............................
   2) விண்ணைத் தொடுவது எது?..............................
   3) கொட்டியடிப்பது எது? ..............................
   4) விண்ணைக் குடைவது எது? ..............................
   5) சட்டச்சடவென சத்தமிடுவது எது? ..............................
   6) தாளம் போடுவது எது? ..............................

02. 'கடல்' என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று எழுதுக ..............................
03. மழை எப்படி வந்ததென கவிஞர் கூறுகின்றார்? ..............................
04. 'கொட்டிக் கனைக்குது' என்பதன் பொருள் யாது? ..............................
05. 'நாம் பாடினோம்' என்பதை ஒருமையில் எழுதுக? ..............................
06. மாமா, மாமி, மைத்துனன் ஆகியோரைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக?
..............................
07. கோழியின் இளமைப் பெயர் யாது? ..............................
08. இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை, ஆண்பால் பெயர்ச்சொல் யாது?
..............................
09. 'வீரன்' என்பதன் பெண்பாற் சொல் யாது? ..............................
10. 'வீட்டுக்கூரை' என்பதைப் பிரித்து எழுதுக? ..............................

02. தடித்த எழுத்திலுள்ள சொற்றொடர்களின் கருத்தை எழுதுக.
   01) நம்பிக்கையின் நிமிர்த்தம் **அடைக்கலம்** தந்த பொருள் ..............................
   02) விடுமுறைக் காலங்களில் குடும்பத்தாருடன் **உல்லாசமாக** பொழுதைக் கழிக்கலாம் ..............................

03. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.
   01) வாருங்கள் வாருங்கள் உங்கள் வரவு நல்வரவாகுக.
   02) குமார் பாடசாலைக்கு பிந்தி வந்தது உனது குற்றம் வாங்கின் மேல் ஏறிநில்.

04. பழமொழிகளின் கருத்தை எழுதுக.
   01) ஒருவர் பொறை இருவருக்கும் நட்பாம்.
   ..............................
   02) பசித்தாலும் வரிப்புலியார் புல்லுண்ணாரே?
   ..............................

05. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.
   01) இயற்கை அன்னை கோபம் கொண்டால் .............................. ஏற்படும்.
   (பேரளிவு, பேரலிவு, பேரழிவு, பெரழிவு)
   02) நேற்று .............................. காற்று வீசியது.
   (இளந்தென்றல், இளந்தென்றல், இலந்தென்ரல், இளந்தென்ரல்)

06. பின்வரும் தொடர்மொழியின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக.
   01) ஒரே நேரத்தில் பத்து விடயங்களை அவதானிக்கக்கூடியவர் ..............................
   02) ஆழ்கடல் பகுதியில் ஏற்படும் பாரிய பூமியதிர்ச்சியினால் ஏற்படுவது
   ..............................

07. ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.
   01) கடற்கரை ..............................
   02) கிணறு ..............................
   03) மலை ..............................

08. பின்வரும் தொடர்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.
   01) NO PARKING PLEASE ..............................
   02) SIT DOWN ..............................
   03) HOW ARE YOU? ..............................

09. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
   01) அபி யனவா ..............................
   02) வாடிவென்ட எப்பா ..............................

10. பொருத்தமான சிங்களச் சொற்களை தமிழில் எழுதுக.
   01) பாடசாலை ..............................
   02) குரங்கு ..............................

11. 
படத்தில் காணப்படும் சைக்கிளின் படத்தை அவதானிக்கவும். அதில் காணப்படும் பாகங்கள் கையாளும் கைப்பிடி, மணி, முன், பின் தடுப்புகள், முன்பக்க விளக்கு, பின் சிவப்பு விளக்கு, சேற்றுத் தடுப்பு, ஆசனம், மிதி பெடல், சங்கிலி, பற்சில்லுகள் போன்றன ஆகும். அவற்றின் பயன்பாடுகளை உணர்ந்து தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. ஆசனம் | 1. பின்னால்வரும் வாகனத்தை எச்சரிக்க |
| 2. மணி | 2. மனித வலுவைச் செலுத்த |
| 3. முன், பின் தடுப்புகள் | 3. இரவில் ஒளிதர |
| 4. மிதி பெடல் | 4. அமர்வதற்கு |
| 5. முன்பக்க விளக்கு | 5. சேறுபுழுதி உடையில் பரவாமலிருக்க |
| 6. சேற்றுத்தடுப்பு | 6. திசைதிரும்பிச் செல்ல |
| 7. பின் சிவப்பு விளக்கு | 7. எச்சரிக்கை ஒலி எழுப்ப |
| 8. கையாளும் கைப்பிடி | 8. நிறுத்த |
| 9. பற்சில்லுகள் | 9. சில்லைச் சுழலவைக்க |

* **12 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க்கீறிடுக.**

12. இழைக்கருவிகள் எவை?
   1) புல்லாங்குழல், நாதஸ்வரம் 2) தாளம், சல்லாறி
   3) மேளம், உடுக்கு 4) வயலின், வீணை
13. நாயிடம் காணப்படும் விசேட புலனுணர்வு எது?
   1) குரைத்தல் 2) வாலாட்டல்
   3) மோப்பசக்தி 4) கடித்தல்

14. வங்கியில் நடைமுறைக் கணக்கு உள்ளவர்கள் பணப்பரிமாற்றம் செய்யப் பயன்படுத்தும் பத்திரம் எது?
   1) சேமிப்புப் புத்தகம் 2) காசோலை
   2) காசுக்கட்டளை 4) பணம் மீளப்பெறும் பத்திரம்

15. துவிச்சக்கர வண்டியில் முன் விளக்கு ஒளிர்வதற்கு மின்சக்தியை உண்டு பண்டுவது எது?
   1) மின்கலம் 2) டைனமோ 3) மின்னிணைப்பு 4) ஒளித்தெறியி

16. குறுந்தூர ஓட்ட அளவு யாது?
   1) 100m, 200m, 400m 2) 600m, 800m, 900m
   3) 300m, 600m, 900m 4) 500m, 1000m, 1500m

17. அலங்காரத்தையல் வகை எது?
   1) சங்கிலித்தையல், கம்பளித்தையல்,
   2) பெருநூலோடி, சிறுநூலோடி
   3) விஸ்வம், சோம்
   4) நரம்பு, துன்னாத்

18. மின்குமிழின் உள்ளே எரியும் இழையின் பெயர் என்ன?
   1) செப்புக்கம்பி 2) மின்கம்பி 3) தங்கிதன் 4) ஆளி

19. இலங்கையில் உப்பளம் உள்ள பிரதேசம் ஒன்று
   1) கண்டி 2) காலி 3) கொழும்பு 4) புத்தளம்

20. முலையூட்டி வகையைச் சேர்ந்த நீர்வாழ் உயிரினம் எது?
   1) கணவாய் 2) நண்டு 3) இறால் 4) திமிங்கிலம்
21. இலங்கையின் முதல் பிரதம மந்திரி யார்?
   1) டி.எஸ்.சேனநாயக்கா
   2) சிறிமாவோ பண்டாரநாயக்கா
   2) மகாத்மா காந்தி
   4) ஜே.ஆர்.ஜெயர்த்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. இலங்கையின் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம்
1) கொழும்பு 2) முல்லைத்தீவு 3) கண்டி 4) காலி

23. வெப்பத்தால் விரைவாக விரிவடையும் திரவம்
1) தண்ணீர் 2) இரசம் 3) சுடுநீர் 4) பால்

24. இந்தியாவின் தலைநகர் எது?
1) புதுடில்லி 2) சென்னை 3) பம்பாய் 4) பங்களூர்

24. இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் நூல் எது?
1) மகாவம்சம் 2) பைபிள் 3) பகவத்கீதை 4) திருக்குர்ஆன்

25. சந்திரன் பூமியைச் சுற்ற எவ்வளவு நாட்கள் எடுக்கின்றது?
1) 24 2) 28 3) 29 4) 31

26. தேவநம்பியதீஸ மன்னன் கட்டிய நீர்பாசனக் குளம் எது?
1) திஸ்ஸ வாவி 2) மின்னேரியாக்குளம்
3) யோதகால்வாய் 4) கந்தளாய்க் குளம்

* **சில்லறைக் கடையில் விற்பனைக்கிருந்த சில பொருள்களின் விலை விவரம்**

| பொருட்கள் | ஒன்று அல்லது ஒரு கிலோவின் விலை |
|---|---|
| அரிசி | ரூபா 28.00 |
| கோதுமை மா | ரூபா 18.00 |
| பருப்பு | ரூபா 36.00 |
| கடலை | ரூபா 40.00 |
| தேங்காய் | ரூபா 09.00 |
| பால்மா பைக்கற் | ரூபா 62.00 |
| சீனி | ரூபா 43.00 |
| தேயிலை | ரூபா 66.00 |
| மீன் ரின் | ரூபா 44.00 |
| தீப்பெட்டி | ரூபா 08.00 |

* **சரியான விடையின் கீழ்க்கீறிடுக.**

27. 1500g அரிசியின் விலை எவ்வளவு?
1) ரூபா 40.00 2) ரூபா 32.00 3) ரூபா 42.00 4) ரூபா 20.00

28. 2kg கோதுமை மாயின் விலைக்கு சமமான விலையுடைய ஒரு கிலோகிராம் பொருள் எது?
1) அரிசி 2) பருப்பு 3) கடலை 4) சீனி

29. 100g தேயிலையின் விலை எவ்வளவு?
1) ரூபா 6.00 2) ரூபா 3.30 3) ரூபா 6.60 4) ரூபா 6.30

30. 5 தேங்காய்கள் வாங்கியபின் கடைக்காரரிடம் ரூபா 50 தாள்க்காசைக் கொடுத்தால் கிடைக்கும் மிகுதிப்பணம் எவ்வளவு?
1) ரூபா 9.00 2) ரூபா 4.00 3) ரூபா 5.00 4) ரூபா 7.00

31. ஒரு பால்மா பைக்கற்றுக்கும் ஒரு கிலோ சீனிக்கும் இடையிலான விலை வித்தியாசம் எவ்வளவு?
1) ரூபா 19.00 2) ரூபா 20.00 3) ரூபா 21.00 4) ரூபா 22.00

* **பின்வரும் எண், எழுத்து அட்டவணையை அவதானித்து, கீழேயுள்ள எண், எழுத்துத் தொடர்களுக்குரிய விடையத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.**

| A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|
| 2 | 40 | 75 | 10 | 30 | 25 | 20 |


32. D+E 1) B 2) C 3) E 4) G

33. AxG 1) B+E 2) C+F 3) G+D 4) C+D

34. 10X2+10 1) A 2) B 3) C 4) E

* **இவ்வரிப்படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக**

மரக்கறி சாப்பிடுவோர் →




← மீன் சாப்பிடுவோர்

← இறைச்சி சாப்பிடுவோர்

35. எத்தனை பேர் இறைச்சியை மட்டும் சாப்பிடுவார்கள்? ..............................

36. எத்தனை பேர் மரக்கறியையும், இறைச்சியையும் மட்டும் சாப்பிடுவார்கள்?
..............................

37. இறைச்சி, மீன், மரக்கறி மூன்றையும் சாப்பிடக்கூடியவர்கள் எத்தனை பேர்?....

38. மீன் சாப்பிடுபவர்கள் எத்தனை பேர்? ..............................

* **அட்டவணையை அவதானித்து விடை தருக.**

| பெயர் | வயது (வருடங்கள்) | நிறை (Kg) |
|---|---|---|
| சலீம் | 10 | 49 |
| சந்திரன் | 12 | 52 |
| சபீனா | 11 | 60 |
| இந்திரன் | 9 | 9 |

39. இவர்களில் நிறை குறைந்த, வயது குறைந்த பிள்ளையின் பெயர் என்ன?
..............................

40. இவர்களில் நிறை கூடிய பிள்ளையின் பெயர் என்ன?
..............................

41. இவர்களில் வயது கூடிய பிள்ளையின் நிறை யாது?
..............................

* "நாம் சென்ற கல்விச் சுற்றுலா" என்ற தலைப்பின் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களாவது இடம்பெறுவதுடன் அவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலையும் திருத்தமான முறையில் அமைந்திருத்தல் வேண்டும்.

..............................
..............................
..............................
..............................
..............................
..............................
..............................

## விடை விளக்கக்குறிப்புக்கள்

### வினாத்தாள் I

01. 01-4 02-2 03-2 04-2 05-3 06-A 07-A 08-3 09-2
10-2 11-1 12-1 13-1 14-3 15-1 16-3 17-1 18-1
19-1 20-1 21-2 22-3 23-2 24-2 25-1 26-3 27-3
28-3 29-3 30-2 31-3 32-7kg 33-J, L 34-I, E 35-150m
36-7 தடவை. 37-6 38-483 39-16 40- கத்தரி.

### வினாத்தாள் II

01. 1-வண்ண வண்ண 2-வண்ண/சிறிய/அழகு 3-சின்னஞ்சிறிய
4-விரிந்த 5-அழகாய்/வடிவாய் உள்ள
6-வெம்மை/அழகு/பெறுமதி 7-விலை மதிப்புள்ள/விலை உயர்ந்த
8-1) வெப்பம் 2) அழகாய் 9-1) மழை 2) வெயில்
10-சிறுவர்/பெரியோர்.
02. 1-நாங்கள் இறைவன் அருளால் சுகமாக இருக்கின்றோம்.
2-நத்தைகள் பற்றைக்குள் குவியல் குவியலாகக் கிடந்தன.
03. அழியாது இருக்கும்/நிலையான தன்மை. 04. வெட்கமடைதல்.
05. 1) காலை வணக்கம். 2) இராப்போசனம்.
06. 1) "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழியாகும்.
2) நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்பன ஐம்பூதங்களாகும்.
07. வள்ளல். 08. வெளிநோயாளர் பிரிவு/வெளிநோயாளர் பகுதி.
09. doctor hospital 10. 1) Nose, 2) Fence 3) River
11. 1) காலை உணவு. 2) தேங்காய். 3) பாண்.
12. 1) நான் தங்கை 2) இது எனது வீடு.
13. 1-3 2-2 3-3 4-4 5-1 6-6 7-2 8-1 9-1
10-2 11-4 12-1 13-3 14-1 15-4 16-2
14. 1) தொலைநகல். 2) மின்சூள். 3) இலங்கைப் போக்குவரத்துச்சபை.
4) வலது. 5) கறுப்பு.
15. 1) சரி. 2) பிழை. 3) பிழை. 4) சரி. 5) சரி.
16. 1) றபான். 2) கொம்புவாத்தியம்.
17. 1) அலரி/தேமா. 2) கொன்றை.
18. 1) மூலைமட்டம். (சுவரின் மூலையைச் செங்கோணத்தில் கட்ட)
2) தூக்குக்குண்டு. (சுவரைச் செங்குத்தாகக் கட்ட)
19. 1) 9000 ரூபா. 2) 88 ரூபா. 3) காலை 6.50
4) 16000 ரூபா. 5) 4 லீ. 800 மி.லீ. 6) 0.6 7) 9 செ.மீ
8) 5/8 9) 30 10) 5 11) 6
12) 14.5 செ.மீ 13) 1லீ. 400 மி.லீ. 14) 48 செ.மீ. 15) 5/9
* கட்டுரை இறந்த காலத்தில் எழுதவேண்டும்.

**12.08.2010 அன்று வெளிவரவிருந்த தொடர் 06 இற்கான விடைகள்.**

### வினாத்தாள் I

01-1 02-3 03-1 04-3 05-2 06-3 07-2 08-1 09-2
10-1 11-3 12-2 13-1 14-1 15-4 16-2 17-3 18-1
19-3 20-1 21-2 22-3 23-2 24-1 25-3 26-2 27-3
28-2 29-3 30-2 31-2 32-1 33-3 34-2 35-3 36-1
38. 4 இல் தொடங்கி 3 ஆல் அதிகரித்துச் செல்கின்றது. எனவே, 19+3= 22 விடை: 22

37.


| | | |
|---|---|---|
| 12 | 8 | 20 |
| 8 | 12 | 20 |
| 20 | 20 | |

39.

| மாடு | தவிடு | நாள் |
|---|---|---|
| 6 | 6 | 6 |

எனவே, ஒரு மாட்டிற்கு ஒரு மூ[illegible]
06 நாட்களுக்குப் போதும். விடை: 6 [illegible]

40.



### வினாத்தாள் II

01. 01-2 02-3 03-1 04-2 05-3
02. 1) அ) கவிதை/பாட்டு ஆ) குழந்தை/மழலை
2) அ) வன்பு. ஆ) போனது.
3) அன்பு+தமிழ். 4) அன்பு/பாசம். 5) தாய்/கண்மணி.
03. 1-3 (இலைமறைகாய் போல)
2-1 (சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது)
04. 1) 640ml + 260ml = 900ml 2) 800ml - 420ml = 380ml
3) 260ml × 3ml = 780ml 4) 640ml ÷ 4ml = 160ml
5) 420ml + 640ml + 260ml + 800ml = 2120ml
05. 1) 4m+4m+4m+4m= 16m 2) 6m×6m= $36m^2$ (சதுர மீற்றர்)
3) S இலிருந்து V = 4 V இலிருந்து T = 8m, ∴ 4m+8m=12m
4) L இலிருந்து K ஊடாக V =14m, K இலிருந்து L ஊடாக T = 12m எனவே, விடை: L
06. 1) 50 2) XL =40, V=5 எனவே, XVL = 45
3) ஒரு மணித்தியாலம் = 60 நிமிடங்கள், 60÷14=4 விடை: 4
4) 100×5=500cm
5) 100 கிராமில் 2 உள்ளன, 500 கிராமில் = 2×5=10 விடை: 10
07. 1) ஸ்தோபெரி. 2) பப்பாசி. 3) பலா.
4) திராட்சை/கொடிமுந்திரி. 08. 1) பலா. 2) தக்காளி.
3) கத்தாப்புக்கொட்டை. 4) மரமுந்திரி. 5) குன்றிமணி.
09. 1) 1-1 2-2 3-3 4-3
5) அல்லி நீரினால் பரவும், எருக்கலை வெடித்துப்பின் காற்றில் பறந்து பரவும். (இது காற்றின் மூலம் பரவுவது) விடை: 1
10. 1) மணல். 2) பூச்செடி. 3) செல்லப்பிராணி. 4) தேங்காய்.
11. 1) Light 2) Daytime/Day/After noon 3) Cloud
4) Rain
12. 1) செவ்வரத்தை. 2) B (அல்லி என்பது இதழ்) 3) சூலகம்/சூழ்வித்து
4) எழுத்து C காட்டுவதே மகரந்தக்குழாய். C இற்கு அருகில் Z போட்டால் சரி.
5) குறி/மகரந்தக்குறி.

**மாணவர்களின் நலன்கருதி நாளைய தினமும் பத்திரிகை ஊடான கருத்தரங்குத்தொடர் வெளிவரும்**

புலமைச்சுடரின் மகத்தான சேவையைக்கண்டு மிக அண்மையில் எமது கல்விச்சுடர் வளவாளர் குழுவுடன் இணைந்துகொண்ட ஆசிரியர்களான திரு.கே.சுதர்ஷன் (கொழும்பு), திரு.ஜீ.கஜன் (மன்னார்) ஆகியோரின் வினாத்தாள்கள் நாளைய தினம் வெளிவரவிருக்கின்றது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கருத்தரங்குக் குறிப்பு:*

*நேற்றைய வினாத்தாளுக்கும் 11.08.2010 இல் வெளிவந்த வினாத்தாளுக்கும் மாணவர்கள் அளித்த விடைகளை இன்றைய தினம் வெளிவந்துள்ள விடை விளக்கக்குறிப்புக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை 0773068999, 0773013062 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக திரு.எஸ்.ஏ.சந்திரபவன், திரு.வே.அன்பழகன் ஆகியோரிடம் இன்றைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (பிரபல ஆசிரியர்கள் ஒதுக்கிய அரிய நேரத்தை பயன்படுத்தத் தவறாதீர்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மம்தா மத்தியஸ்தராகச் செயற்பட்டால் மத்திய அரசுடன் பேச்சு நடத்தத் தயார்



## மாவோயிஸ்ட்டுகள் அறிவிப்பு

கொல்கத்தா, ஓக. 19

மத்திய ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி மத்தியஸ்தராகச் செயற்பட்டால் சண்டையை நிறுத்தி விட்டு மத்திய அரசுடன் அமைதிப் பேச்சில் ஈடுபடத் தயாராக இருக்கிறோம் - என்று மாவோயிஸ்ட் தலைவர் அறிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி மேற்குவங்க மாநிலம் லால்களில் மம்தா பானர்ஜி நடத்திய பேரணியில் அவர் மாவோயிஸ்ட்டு ளுக்கு ஆதரவாகப் பேசிய விவகாரம் நாடாளுமன்றின் இரு அவைகளிலும் புயலைக் கிளப்பியது. மத்திய அமைச்சர் மாவோயிஸ்ட்டுகளுக்கு ஆதரவாகப் பேசியதற்கு பிரதமரிடம் விளக்கம் கேட்டு எதிர்க்கட்சிகள் பெரும் அமளியை ஏற்படுத்தினர். தற்போது மம்தா தலையிட்டால் பேச்சுக்குத் தயார் என மாவோயிஸ்ட்டுகள் கூறியிருப்பது மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மம்தா தவிர சமூகநல ஆர்வலர்களான கபிர் சுமன், அருந்ததி ராய், மேதா பட்கர், பி.டி.சர்மா ஆகியோரும் பேச்சுக்கு மத்தியஸ்தர்களாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என மாவோக்கள் தரப்புத் தெரிவித்துள்ளது.

தொலைபேசி மூலம் பேசிய மாவோயிஸ்ட் தலைவர் கிஷன்ஜி தெரிவித்திருப்பவை வருமாறு -

3 மாதங்களுக்குச் சண்டையை நிறுத்தத் தயாராக இருக்கிறோம். அந்தக் கால கட்டத்தில் மத்திய அரசுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம். மாவோயிஸ்டுகள் எப்போதும் தாங்களாகவே வன்முறையைக் கையில் எடுத்ததில்லை. மத்திய அரசின் செயற்பாடுகள்தான் வன்முறையில் இறங்கத் தூண்டின.

சமீபத்தில் எங்களது இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான ஆசாத் அமைதிப் பேச்சுக்கு அழைப்பு விடுத்திருந்தும் கூட அதைப் பொருட்படுத்தாமல் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மாவோயிஸ்ட்டுகள் பேச்சுக்குத் தயாராக இருந்த பட்சத்திலும் அரசுதான் வன்முறையை தூண்டி விடுகிறது என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு மாவோயிஸ்டுகளை ஒழிப்பதற்காக பொலிஸ் படையை நவீனப்படுத்த ரூபா 800 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. அந்த நிதியை மேற்குவங்கம், சட்டீஸ்கர், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் வளர்ச்சிப் பணிகளுக்கும், வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும் அரசு ஏன் பயன்படுத்தக் கூடாது என்றும் கிஷன்ஜி கேள்வி எழுப்பியுள்ளார்.

# தமிழக மீனவர்களின் பிரச்சினை குறித்து கேட்டறிந்தது இலங்கை மீனவர்கள் குழு

## 20இல் சென்னை அதிகாரிகளுடன் ஆலோசனை

இராமேஸ்வரம், ஒக.19

தமிழக மீனவர்களின் பிரச்சினை பற்றி இலங்கை மீனவர் குழுவினர் கேட்டறிந்தனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இலங்கைக் கடற்படையினரின் சூட்டுக்கு பல மீனவர்கள் பலியாகி உள்ளனர்.

இதுகுறித்து இரு நாட்டு மீனவ சங்கப் பிரதிநிதிகள் தங்கள் பிரச்சினைகளை நேரடியாகப் பேச முடிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து இலங்கை மீனவ சங்கப் பிரதிநிதிகள் 20 பேர் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் வந்தனர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் நாட்டுப் படகு மீனவர்களைச் சந்தித்து, மீன்பிடிப்பதில் உள்ள பிரச்சினைகளைக் கேட்டுப் பதிவு செய்து கொண்டனர்.

அப்போது இலங்கை வடமராட்சி மீனவர் சம்மேளன செயலாளர் கிருஷ்ணபிள்ளை செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாட்டு மீனவர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே இலங்கையில் இருந்து ஒரு குழுவாகப் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்துள்ளோம். இங்குள்ள மீனவர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் 3 நாள்கள் நாங்கள் கேட்டறிய உள்ளோம்.

அவர்களின் கருத்துகளைப் பதிவு செய்து சென்னையில் 20,21ஆம் திகதிகளில் நடைபெறும் அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்து தமிழக, இலங்கை அரசுகளிடம் சமர்ப்பிப்போம். இலங்கைக் கடற்பகுதிக்குள் மீன்பிடிக்க வரும் இந்திய மீனவர்கள் மீது இலங்கைத் தமிழ் மீனவர்கள் ஒருமுறை கூடத் தாக்குதல் நடத்தவில்லை. அவ்வாறு கூறுவது முற்றிலும் தவறான தகவல்.

- இப்படி அவர் கூறினார்.

பின்னர் இலங்கை மீனவப் பிரதிநிதிகள் குழு தலைவர் சூரியகுமார் கூறியவை வருமாறு -

பாக் ஜலசந்தி கடல் பகுதியில் மட்டும் மீன்பிடித்தொழிலை நம்பி, இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழக மீனவர்கள் தொடர்ந்து மீன்வளத்தை அழிக்கக் கூடிய வலையைப் பயன்படுத்தி, இலங்கைக் கடல் பகுதிக்குள் மீன்பிடித்து வருகின்றனர். இதனால் மீன்வளம் அழிவதோடு, எதிர்காலத்தில் இராமேஸ்வரம் கடற்பகுதிபோல் இலங்கைக் கடற்பகுதியும் மீன்வளம் அற்றதாக மாறிவிடும் வாய்ப்புள்ளது.

மீன்வளத்தை அழிக்கும் மீன்பிடி வலைகளைத் தவிர்ப்பதோடு இலங்கைக் கரைப் பகுதியில் மீன்பிடிப்பதையும் தவிர்க்க வேண்டும். இந்திய - இலங்கை அரசுகள் பாக்ஜலசந்திக் கடலில் மீன்வளத்தைக் காப்பதோடு, இருநாட்டு மீனவர்களும் நட்புறவுடன் மீன்பிடித் தொழில் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.



காஷ்மீரில் சுமார் 200 பேரைப் பலிகொண்ட நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரதமர் மன்மோகன்சிங் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

## இலங்கைக்கு வெடிமருந்து கடத்தல் வழக்கில்

# புலி உறுப்பினர் தம்பியண்ணா உட்பட ஐந்து பேருக்குச் சிறைத் தண்டனை

தாம்பரம்,ஒக.19

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வெடிமருந்து கடத்த முயன்ற வழக்கில், விடுதலைப் புலிகள் உட்பட 5 பேருக்கு தலா ஓராண்டு சிறைத் தண்டனையும், மேலும் ஒருவருக்கு 2 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில், சென்னை விமானநிலையத்தில் சந்தேகத்தின் பேரில் 3 பேரை கியூப் பிரிவு பொலிஸார் கைதுசெய்தனர். விசாரணையில், அவர்கள் இலங்கையைச் சேர்ந்த செயின்ட் ஜோன் (வயது - 40) மற்றும் ஜெயக்குமார் (வயது-35), சென்னை ஒட்டேரியைச் சேர்ந்த ரவிக்குமார் என்பதும், தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு வெடிபொருள்கள் மற்றும் மருந்துகளை அவர்கள் கடத்துவதும் தெரியவந்தன.

ஒட்டேரியைச் சேர்ந்த ரவிக்குமார், இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு கைத்தொலைபேசிச் 'சிம்' கார்ட் வாங்க தன்னுடைய வாக்காளர் அடையாள அட்டையைக் கொடுத்து உதவியதும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. அவர்களிடம் இருந்து ரூபா 5 லட்சம் மதிப்புள்ள இந்திய மற்றும் இலங்கைப் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இராமநாதபுரம் அருகே உள்ள மசூலிப்பட்டினத்தில் இவர்களுக்கு மருந்துகள் கடத்த படகு வாங்கிக் கொடுத்த பூமிநாதன், புஷ்பதன்ராஜ் ஆகிய 2 பேரை கைதுசெய்து படகையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இந்த வழக்குத் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தம்பி அண்ணா (வயது - 45) என்பவரும் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு விசாரணை தாம்பரம் சார்பு நீதிமன்றில் நடந்து வந்தது.

வழக்கை விசாரித்த சார்பு நீதிமன்ற நீதிபதி சிவக்குமார், தம்பி அண்ணா உட்பட 5 பேருக்கு தலா ஓராண்டு சிறைத் தண்டனை விதித்தார். ஜெயக்குமாருக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனையும் 2 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

தண்டனை விதிக்கப்பட்ட தம்பி அண்ணா, கடற்புலிகள் பிரிவில் முக்கிய பதவி வகித்தவர். செயிண்ட் ஜோனும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தொடர்புடையவர். இந்த வழக்கில் தொடர்புடைய கருப்பையா என்பவர் தலைமறைவாக இருக்கிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தியச் செய்திகள்

## பாதிரியாருக்கு விளக்கமறியல்

மாணவனிடம் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டார் எனக் கூறி பாதிரியார் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு அடுத்த தச்சம்பாடியில் கிறிஸ்தவ ஆலயத்தில் பாதிரியாராக இருப்பவர் ஸ்டீபன் (வயது - 30). இவர் தேவாலயத்தைச் சேர்ந்த நடுநிலைப்பள்ளியின் தாளாளராகவும் உள்ளார்.

பாதிரியார் ஸ்டீபன் சம்பவத்தன்று இரவு தேவிகாபுரத்தைச் சேர்ந்த 12 வயதான 7 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவனை அழைத்துச் சென்று அவனை கட்டாயப்படுத்தி ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டார் என கூறப்படுகிறது. அதன் பேரில் பொலிஸார் விசாரணை நடத்தி பாதியாரைக் கைது செய்தனர்.

# நீர், நிலத்தில் பயணிக்கும் 'ஹோவர் கிராப்ட்' பாதுகாப்புப் பணிக்காக சென்னை வருகை




சென்னை,ஒக. 19

கடலிலும், நிலத்திலும் பயணிக்கும் கடலோரக் காவல் படையின் 'ஹோவர் கிராப்ட்' பாதுகாப்புப் பணிக்காக சென்னை வந்துள்ளது. இது ஒரு வாரம் இங்கு தங்கி கடலோரக் காவல்பணியில் ஈடுபடும்.

கடல் வழி [illegible] தல், இந்தியக் [illegible] நுழைபவர்களைக் கண்காணித்து கைது செய்யும் பணியில் கடலோரக் காவல் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் ரோந்து செல்வதற்கு வசதியாக நவீன ரோந்துக் கப்பல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடலிலும், நிலத்திலும் பயணிக்கக் கூடிய அதி நவீன வசதிகளுடன் கூடிய 'ஹோவர் கிராப்ட்'களும் கடலோரக் காவல்பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் உள்ள கடலோரக் காவல்படை நிலையத்தில் இருந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டு வரும் 'ஹோவர் கிராப்ட்' பாதுகாப்புப் பணிக்காக நேற்றுமுன்தினம் சென்னை வந்தது. இந்த ''ஹோவர் கிராப்ட்' சென்னையில் இயங்கும் கடலோரக் காவல் படையின் தலைமையகத்திற்கு அருகே நேற்றுமுன்தினம் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டது.

இதுகுறித்து கடலோரக் காவல்படை [illegible], 'ஹோவர் கிராப்ட்' கொமாண்டர்கள் வேணு மாதவ், பிரேம் குமார் ஆகியோர் கூறியவை வருமாறு -

கடலோரக் காவல்படை ரோந்துப் பணிக்கு பிரிட்டனில் இருந்து ஆறு 'ஹோவர் கிராப்ட்' வாங்கப்பட்டுள்ளது.

சென்னை வந்திருக்கும் 'ஹோவர் கிராப்ட்' ஒரு வாரம் அங்கு தங்கி ரோந்துப் பணியில் ஈடுபடும். இந்த ஹோவர் கிராப்டில் அதிகபட்சமாக 15 பேர்வரை செல்ல முடியும். கணினி, இணையம், தொலைபேசி போன்ற தொலைத் தொடர்பு சாதன வசதிகளும் இதில் உள்ளன. ஆபத்து நேரத்தில் தப்பிச் செல்ல உதவும் இறப்பர் படகு வசதியும் உள்ளது. மணிக்கு 15 நாட்டிக்கல் மைல் வேகத்தில் செல்லும் இந்த ஹோவர் கிராப்ட் மூலம் எளிதில் குற்றவாளிகளைப் பிடிக்க முடியும். கடல், கடற்கரை மணல் மட்டுமின்றி ஐஸ் கட்டிகளிலும் இதுவேகமாகப் பயணிக்கும். எடையை குறைக்க, அலுமினியம் மூலம் இந்த ஹோவர் கிராப்ட் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இப்படி அவர்கள் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 5** புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு!

## ஒரு நற்செய்தி

2010ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகவுள்ள மாணவர்களுக்கு பெரும் சிரமத்தின் மத்தியிலும்

**இறுதி நேரத்தில்**

**முற்றிலும் எதிர்பார்க்கக்கூடிய**

**5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் 120/=**

வினாத்தாள் தேவையானோர் நேற்றைய உதயனில் வெளியான புத்தகசாலைகளின் பெயர்களை அறியலாம்.

**கொழும்பு எக்ஸ்பிரஸ் வெளியீடு**
**0778448763, 0213216922**


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றும் சோ.சிவகணேசன் அவர்களின் அன்புத் தாய்

அமரர் **சோதிநாதன் தவஞானபாக்கியம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரி சங்கம்,*
*பிரதேச செயலகம், உடுவில்.*

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினர் சுப்பிரமணியம் ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தாய்

திருமதி **சிவசுப்பிரமணியம் செல்லமுத்து**

அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/570019)

## துயர் பகிர்கின்றோம்



பழம்பெரும் பிரபல வர்த்தகரும், எமது மன்றத்தின் கட்டட வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரும் திக்கரை முருகன் அன்னதானப் பணிக்கு பல ஆண்டுகளாக உதவி செய்து வருபவருமாகிய களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட

**S.V.முருகேசு (SVM)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திக்கரை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து இளைஞர் மன்றம்,
திக்கரை, களபூமி, காரைநகர்.

(102210)

## துயர் பகிர்கின்றோம்



**ச.வி.முருகேசு**

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தின் மூத்த வர்த்தகரும், உயர்ந்த குண இயல்பைக் கொண்டவருமான ச.வி.முருகேசு அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்,

உரிமையாளர்,
விஸ்ணுகரன்ஸ், *சுன்னாகம்.*

(102216)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
**எஸ்.வி.முருகேசு**
உரிமையாளருமாகிய


**சண்முகம் விசுவநாதர் முருகேசு**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்றுத் துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



திருமதி **அபிராமசுந்தரி தாமோதரம்**

அவர்கள் 09.08.2010 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர்கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*இல.1, 'பங்கஜவாசம்'*
*1ஆம் கட்டை, கல்வயல்,*
*சாவகச்சேரி.* (102211)

சிவஸ்ரீ செ.பரமானந்தக்குருக்கள்
மற்றும் பிள்ளைகள், குடும்பத்தினர்.

## திறந்த பல்கலைக்கழக பட்டப்பின் டிப்ளோமா மாணவருக்கான பதிவு

யாழ்ப்பாணம், ஓக.19

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கைக்குத் தெரிவான புதிய மாணவர்களுக்கான பதிவுகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெறும்.

பதிவை மேற்கொள்ளவரும் ஆசிரிய மாணவர்கள் தாம் கடமையாற்றும் பாடசாலை அதிபரிடமிருந்து சேவைக்கால உறுதிப்படுத்தல் கடிதம், 10 வார கற்பித்தல் பயிற்சிக்கான அனுமதிக் கடிதம் என்பவற்றைக் கொண்டுவருமாறு யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-6-323)

## வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி; இன்று கட்டைக்காட்டில்

கிளிநொச்சி, ஓக.19

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்படும் வீட்டு மின் இணைப்புப் பயிற்சிநெறியின் கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்கான ஆரம்ப நாள் நிகழ்வு கட்டைக்காடு பொதுநோக்கு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கிராம அபிவிருத்தி அதிகாரிகளும், கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி. றூ.கேதீஸ்வரனும் கலந்து கொள்கின்றனர். (ஒ-405-323)

## மிருசுவில்வாசிக்கு ரூ.18 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஓக.19

பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் வகையில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய மிருசுவில் வடக்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 18ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு கடந்த 17ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா, குறித்த நபருக்கு 18ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 6 மாத சாதாரணச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## மலக்கழிவு அகற்றும் வாகனசேவை

தென்மராட்சி, ஓக.19

சாவகச்சேரி நகரசபையினால் மலக்கழிவு அகற்றும் வாகனசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகன சேவையைப் பெற விரும்புவோர் நகர சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## அலுவலகத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஓக.19

இடம்பெயர்ந்தோர் நலன்பேணும் அபிவிருத்தி அமைப்பின் அலுவலகத் திறப்புவிழா இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நெல்லண்டை வீதி, தும்பளையில் இடம்பெறவுள்ளது. (த-6)

## நல்லூர் ஆலயச்சூழலை ஆராய்ந்தார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழா நடைபெற்றுவரும் நிலையில், ஆலயச் சூழலில் பக்தர்களுக்கான வசதிகள் தொடர்பில் ஆராயவென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா செவ்வாய் இரவு அப்பகுதிக்கு விஜயம் செய்தார். ஆலயச் சூழலை ஆராய்த அமைச்சர் பக்தர்களுக்கான வசதிகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் தமது அவதானத்தைச் செலுத்தியதுடன் சில விடயங்கள் தொடர்பில் உடன் நட வடிக்கைகள் மேற்கொள்ளுமாறு யாழ் மாநகர முதல்வருக்கு பணிப்புரை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.


### தேவை

பிரபல ஜவுளி நிறுவனத்துக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0772850753

### அருள்முருகன் திருமண சேவை

Teachers, Doctors, Engineers உட்பட பெருமளவு மணமக்களில் விரும்பும் மணமகன்/மணமகளைத் தெரிவு செய்யலாம். ஓய்வுநிலை அரச சேவையாளர்- SLTS-1 வழங்கும் கௌரவ சேவை! தரகரல்ல. எம்மத்தியில் உள்ள சகல சமூக மணமக்களுக்குமுரிய சேவை!

*03,யாழ் வீதி, சிறாம்பியடி லேன்*
(........................ இணைக்கும் லேன்), *யாழ்ப்பாணம்.*


## அறிவித்தல்

கீரிமலை, ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலய நித்திய பூசைகள் (22.08.2010) ஞாயிற்றுக் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. அன்றைய தினம் அம்பாளைத் தரிசிக்கவரும் பக்தர்களுக்கு இளவாலையில் இருந்து போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்னதானமும் இடம்பெறும்.

ந.உமாபதீஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தா.

(சி/570018)

## கண்ணீர் அஞ்சலி



நாடறிந்த நீதி, நியாயம் நிறைந்த சிறந்த வர்த்தகப் பெருமகன்

**உயர்திரு. S.V. முருகேசு** ஐயா

அவர்களுக்கு எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவருடைய ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

பாரதி உணவுக் கைத்தொழில் நிறுவனம்
*19, சம்பியன்லேன், கொக்குவில்.*

## கண்ணீர் அஞ்சலி



**எஸ்.வி.முருகேசு** அவர்கள் இறைவனடி அடைந்ததற்குப் பருத்தித்துறை அம்பாள் ஸ்ரோர்ஸ் நா.சுப்பையாவும் அவர் மைத்துனர் அ.தெய்வேந்திரராசாவும் இணைந்து தரும் கண்ணீர் அஞ்சலி

S.V.M. குணரத்தினம் ஐயா அவர்களே! எங்கள் அன்புக்கும், மரியாதைக்குமுரிய தங்கள் தந்தையுடன் கடந்த ஐம்பது ஆண்டுகளாகவே வர்த்தக ரீதியான நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தோம். எங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டிய அன்னார் அவர்களை இழந்து பெருந்துயர் அடைகின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாமும் எமது ஸ்தாபனத்தின் சக ஊழியர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்,
*பருத்தித்துறை.*

(சி/570030)

## VACANCIES

UNIVERSITY OF JAFFNA. SRI LANKA.

University of Jaffna will entertain applications upto 06.09.2010 from suitably qualified persons for the under mentioned posts on contract basis.

**FACULTY OF AGRICULTURE**

Assistant Lecturer (On Contract)/Demonstrator (On Contract) in Agronomy/Agricultural Biology/Agricultural Chemistry /Animal Science/ Agricultural Economics/Agricultural Engineering

**FACULTY OF SCIENCE**

Assistant Lecturer (on contract) Demonstrator (on contract) in Botany / Chemistry/ Physics / Zoology / Fisheries

Assistant Lecturer (on contract)/Instructor (on contract) in Mathematics / Statistics / Computer Science

Instructor (on contract) in Computing (Computer Unit)

**Note:** Candidates who are awatting the results of the final degree examination may also apply.

| POST | SALARY SCALE |
|---|---|
| Asst. Lecturer (On Contract) | Rs. 25,145/= p.m. |
| demonstrator/Instructor (On Contract) | Rs.20,755/= p.m. |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should make separate applications.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date and incomplete as well as illegible applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

Registrar,
University of Jaffna, Sri Lanka.
18.08.2010

(C/570020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாக இம்முறை இலகு வேலைக்கான திட்டம் நடைமுறை

## பத்துநாள்கள் பணிகளில் ஈடுபட்டால் 25கிலோ பொருள்கள்

யாழ்ப்பாணம், ஓக.19

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இலகு வேலைக்கான உணவுத் திட்டத்தின் ஆவணி மாதத்திற்கான வேலைகள் நடைபெறவுள்ளன என்று யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகம் அறிவித்துள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முதல் 29ஆம் திகதி வரையான பத்து நாள்கள் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது. இதற்கு அமைவாக ஒருவர் ஆகக்கூடிய பத்து நாள்கள் முழுமையாக வேலையில் ஈடுபட்டால் 25 கிலோகிராம் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது மிக வேகமாக டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்திருப்பதனால், இம்மாத இலகு வேலைத்திட்டத்தின் ஊடாக டெங்கு ஒழிப்புக்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வேலையில் ஈடுபட்ட பயனாளிகளின் தொழில்நுட்ப அறிக்கையின் தொகுப்பைப் பூர்த்தி செய்யும்போது குறித்த ப.நோ.கூ.சங்கத்தையும், வேலையில் ஈடுபட்ட ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு வேலை முடிவடைந்து ஐந்து நாள்களுக்குள் வரவு இடாப்பு, தொழில்நுட்ப அறிக்கையின் தொகுப்பு, உணவு வேண்டுகைப் படிவம் என்பவற்றையும் பிரதேச செயலாளர்கள் அனுப்பி வைக்குமாறும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-319)

# வட்டு.தெற்கு மக்களுக்கு குடிதண்ணீருக்கு கஷ்டம்

வட்டு.தெற்கு கிராம சேவகர் பிரிவு, முதலிய கோயிலடிப் பகுதிகளுக்கான குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளமையால் முதலியகோயிலடி, அரசடி, இன்பசோலை, நாவலடிப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் வலி.மேற்கு செயலகம் சுழிபுரம் உப அலுவலகத்தினால் குடிதண்ணீர் வழங்கப்படாத போதும் குறிப்பிட்ட பகுதி மக்களிடம் வரி அறவிடப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-161-323)

# டெங்கு ஒழிப்பில் அசிரத்தை காட்டினால் தண்டம்

டெங்குநோய்ப் பரம்பலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதவர்களுக்கு மற்றும் சுகாதாரத்தைப் பேணாதவர்களுக்கு ரூபா 14 ஆயிரம் முதல் 25ஆயிரம் ரூபாவரை தண்டப் பணம் அறவிடப்படும் என்று குருநகரில் ஒலிபெருக்கி மூலம் யாழ் மாநகர சபையினரால் நேற்று அறிவிக்கப்பட்டது.

# சைக்கிளில் சென்ற பெண்ணின் கைப்பையை பறித்தெடுத்தான் மோ.சைக்கிளில் வந்த ஆசாமி

## — செம்மணி வீதியில் சுடலைக்கு அருகில் சம்பவம் —

யாழ்ப்பாணம், ஓக.19

சைக்கிளில் தனியாக வந்துகொண்டிருந்த பெண் ஒருவரின் கைப்பையைப் பட்டப்பகலில் மோட்டார் சைக்களில் வந்த திருடன் ஒருவன் பறித்துச் சென்றான்.

இச்சம்பம் செம்மணி வீதியில் நேற்றுப் முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

நாவற்குழியில் உள்ள தாயாரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு நல்லூரில் உள்ள தனது வீட்டுக்குத் தனியாகச் சைக்களில் வந்துகொண்டிருந்த கண்ணன் நிஷாந்தினி (வயது 30) என்ற பெண்மணியை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த ஒருவன் செம்மணிச் சுடலைக்கு எதிரே வழிமறித்து அவரது சங்கிலியை அறுக்க முயன்றான். எனினும் குறித்த பெண் கூக்குரலிடவே சைக்கிளில் இருந்த அடையாள அட்டை முதலான ஆவணங்கள் அடங்கிய கைப்பையை எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டான் திருடன்.

அவ்வேளை வீதியால் வந்துகொண்டிருந்தவர்கள் திருடனின் மோட்டார் சைக்கிளைத் துரத்திச் சென்றபோதும், அவன் விரைந்து சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும் திருடன் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் குறித்துக் கொண்ட கைப்பையை இழந்தபெண் இது குறித்துக் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (எ)

# சாவகச்சேரி நகரசபைப் பகுதிகளில் விசேட டெங்கு ஒழிப்புப் பணிகள்

தென்மராட்சி, ஓக.19

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் நகரசபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புகளின் உதவியுடன் விசேட டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரி நகரசபையினர், படையினர், பொலிஸார், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிப் பிரிவினர், கைத்தொழில் வணிக மன்றத்தினர், உலக உணவுத் திட்டத் தொண்டர்கள் உட்படப் பலர் இந்தச் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிந்தது.

சங்கத்தானை, மீசாலை மேற்கு, கல்வயல், கோவில்குடியிருப்பு, டச்சுவீதி, மருதடி, அரசடி, வைத்தியசாலைகள் உட்பட ஏனைய இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு 'சீற்'றுக்குப் பதிலாகக் கிடுகுகள்!

கொழும்பு, ஓக.19

வடக்கில் மீளக் குடியமர்ந்தப்படுவோருக்கு இதுவரையிலும் வழங்கப்பட்டு வந்துள்ள கூரைத் தகடுகளுக்குப் பதிலாக கிடுகுகளை வழங்குவதற்கு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் குழு தீர்மானித்துள்ளது.

மீளக்குடியமர்தப்படும் மக்களுக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாத இறுதியிலேயே கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளதாகப் புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளதன் காரணமாகவே அதுவரையில் அவர்களுக்குத் தற்காலிகமாக உதவியாக - அவசரமாகக் கிடுகுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்தப்படும் குடும்பமொன்றுக்கு 16 கூரைத்தகடுகளும் அவர்கள் தற்காலிக வீடொன்றை அமைத்துக் கொள்வதற்காக 5 ஆயிரம் ரூபாவும் இப்போது வழங்கப்படும். தற்காலிக உதவியாக குடும்பமொன்றுக்கு 300 கிடுகுகள் மற்றும் வீடொன்றை அமைத்துக்கொள்வதற்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது. (ஓ-22)



இனந்தெரியாத ஆயுததாரிகளால் பொரளை தபாலதிபருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை எதிர்த்தும், குறித்த ஆயுததாரிகளை உடனடியாகக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தியும் இலங்கை தபால் சேவை தொழிற் சங்கத்தினர் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கண்ணிவெடி அகற்றுவதற்கு இந்தியா தொடர்ந்தும் உதவும்

கொழும்பு, ஓக. 19

வடமாகாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேலும் நீடிக்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது என இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொண்டுள்ள பொஹறசன் மற்றும் சர்வத்ரா நிறுவனங்களின் ஏழு இந்தியக் கண்ணிவெடி அகற்றும் முகவர்களின் சேவைக்காலத்தை நீடிப்பதற்கு இந்திய அரசு இணங்கியுள்ளது என இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்தார். இதற்காக இந்தியா 410 மில்லியன் இலங்கை ரூபாவைச் செலவிடும் எனவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-சி)

# ஒரு கோடி லட்சம் லீற்றர் மதுபானத்தை அருந்தும் நுவரேலிய வாழ் 'பெருங்குடிகள்'!

## அந்த மாவட்ட எம்.பியே நேற்று சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19

நுவரெலியா மாவட்டத்தில் ஒரு கோடியே 50 லட்சம் லீற்றர் மதுபானம் வருடம்ஒன்றுக்கு அம்மாவட்ட மக்களால் அருந்தப்படுகின்றது என்று இ.தொ.காவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ராதாகிருஷ்ணன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற போதைப்பொருள் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் மதுபாவனை அதிகரித்துள்ளது. வருடமொன்றிற்கு ஒரு கோடியே 50 லட்சம் லீற்றர் மதுபானம் அருந்தப்படுகிறது. இதற்காக 5 ஆயிரத்து 720 கோடி ரூபா பணம் செலவிடப்படுகிறது.

நுவரெலியாவின் அபிவிருத்திக்குச் செலவிடப்படும் பணத்தைவிட அங்கு மதுபாவனைக்குச் செலவிடப்படும் பணம் அதிகமாகும். மலையகத்தில் மதுபாவனையைத் தடுக்க ஜனாதிபதி அண்மையில் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி வைத்தார்.

நுவரெலியாவின் பொலிஸ் நிலையங்கள் அனைத்திலும் இதுதொடர்பான முறைப்பாடுகள் அதிகம். மதுபாவனையால் குடும்பங்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் பிரச்சினை.

இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் 220 சாராயத் தவறணைகள் உள்ளன. இனிமேல் அங்கு இவை அமைக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும். அவ்வாறு அமைத்தால் அது அம்மக்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதாக அமையும்.

நுவரெலியா மக்களின் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமைக்கு இந்த மதுபாவனையே காரணம். நுவரெலியாவில் பொழுதுபோக்கு அம்சங்கள் இல்லை. பொழுதுபோக்கு அம்சத்தை ஊக்குவித்தால் மதுபாவனையைக் கட்டுப்படுத்த முடியும். - என்றார். (ஓ-சி)

# ரணிலின் படுக்கையறை குறித்து நேற்று சபையில் ஏற்பட்ட சலசலப்பு

கொழும்பு, ஓக. 19

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் படுக்கை அறையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பெண்ணொருவரும் இருந்தனர் என்று அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

தனது படுக்கை அறையை தன்னைத் தவிர வேறு எவரும் பயன்படுத்துவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க அதற்குப் பதிலளித்தார்.

போதைப்பொருள் தொடர்பான சட்ட மூலம் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றது. அந்த விவாதத்தில் கலந்துகொண்டு அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சச்சின் வாஸ் குணவர்தன உரையாற்றிக்கொண்டிருந்தபோது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பிய அஸ்வர் மேற்படி விடயத்தைக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் உள்ள படுக்கை அறையை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவருடன் சேர்ந்து பெண்ணொருவரும் பயன்படுத்தியிருக்கின்றனர். இதனால் நாடாளுமன்றத்திற்கே அவமானம்.

இதுதொடர்பாக விசாரித்து இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அஸ்வர் மேலும் கூறினார்.

அப்போது சபைக்குத் தலைமை வகித்துக் கொண்டிருந்த பிரதி சபாநாயகர் பிரியங்கர ஜயரட்ண இந்த விடயத்தை சபா நாயகரின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதுதொடர்பாக ஆராயப்படும் என்று கூறினார்.

அஸ்வரின் இந்தக் கூற்றுக்கு எதிராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். அஸ்வர் கூறுவதுபோல் எதுவும் நடக்கவில்லை. அப்படியென்றால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் யாரென்று பெயரைக் கூறவேண்டும் என்றனர்.

அச்சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் இருக்கவில்லை. இதன் பின்னர் சற்றுத் தாமதமாக சபைக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் இதற்குப் பதிலளித்தார்.

எனது அலுவலகத்தின் படுக்கை அறையை என்னைத் தவிர வேறு எவரும் பயன்படுத்துவதில்லை. அஸ்வர் கூறியது பொய்யான குற்றச்சாட்டாகும்.

- என்றார்.

(ஓ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர் சமாசத் தலைவருக்கு இந்தியா செல்ல விஸா அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக தமிழக மீனவர் சங்கங்களுடன் பேசுவதற்கு செல்லவிருந்த யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணத்துக்கு இந்தியா செல்வதற்கான விஸா அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வடபகுதி மீனவ சங்கப் பிரதிநிதிகள் 20 பேர் அடங்கிய குழுவினர் கடந்த 16 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது செல்லவிருந்த தவரட்ணத்துக்கு விஸா அனுமதி இல்லை என இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஸா மறுக்கப்பட்டதன் காரணங்கள் குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் கேட்டபோது அதற்கான பதில் ஏதும் தரப்படவில்லை என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தக் குழுவில் அடங்கியிருந்ததாகவும் குழுவுக்கு தானே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததாகவும் இந்த நிலையிலேயே தனக்கு விஸா அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகவும் தவரட்ணம் தெரிவித்துள்ளார். (ஓ-14-10)

## ஆசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளையும் சாவோ கேட்டறிவார் என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நெடுஞ்சாலைகள் செயலகக் கட்டடமொன்று பத்திரமுல்லையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது. சமீபத்தில் இந்தக் கட்டடத்துக்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்திலும் இவர் கலந்துகொள்ளவுள்ளார்.

இம்மாதம் சனிக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோரையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் இவர் பார்வையிடவுள்ளார் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-ஐ-சி)

## வெலிக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறியதாலேயே நாங்கள் சரணடைந்தோம். ஆனால் நாங்கள் இப் போது ஏமாற்றப்பட்டுவிட்டோம். விடுதலை செய்யப்படுவதற்குப் பதிலாக சிங்களத்தில் எழுதப்பட்ட குற்றப் பத்திரிகையில் என்ன எழுதப்பட்டுள்ளது எனப் புரியாத நிலையில் பலாத்காரமாகக் கையெழுத்துப் பெறப்பட்டது. இதன் மூலம் எங்களை நிரந்தமாக சிறையில் அடைக்க ஏற்பாடு கள் செய்யப்பட்டு வருகின்றன'' எனவும் அவர்கள் நீதிவானிடம் முறையிட்டனர்.

''நீங்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதற்கான ஆவணங்கள் தற்போது சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பதில் வரும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டும்'' என நீதிவான் தெரிவித்தார். (ஓ-சி)

## கொக்குவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஸ்ரேசன் வீதிப் பகுதிகளில் பொலிஸாரும் படையினரும் ரோந்து செல்கின்றனர். வீதியில் செல்பவர்களை மறித்து படையினர் சோதனையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுக்காலை நாச்சிமார் கோயிலடி மற்றும் பூநாறி மரத்தடிப் பகுதிகளூடாக பயணித்தவர்களையும் மறித்து 'எங்க போறது' என்று விசாரித்தனர்.

நேற்றிரவு அப்பகுதி ஊடாகச் சென்ற வாகனங்களும் சோதனையிடப்பட்டதுடன் உடற்சோதனையும் இடம்பெற்றது.

இதேவேளை -

வலிகாமம் பகுதியில் சில இடங்களில் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ஐ-160)

## கைத்தொலைபேசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலத்தின் அருகே கருகிய நிலையில் செல்போன் கிடந்தது. விசாரணையில் அவர் செல்போன் பேசிக்கொண்டிருந்தபோது செல்போன் திடீரென வெடித்து சிதறிப் பலியானமை தெரியவந்தது.

## குளிர்காற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய தினம் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் முன்னால் நடைபெறவுள்ள ஐரோப்பா தழுவிய தேசிய இன எழுச்சி ஒன்றுகூடலில் கலந்துகொள்வதற்கு போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கோர்ச்பேர்க் எனும் இடத்தில் இருந்து டுர்தென் என்ற இடம்வரை சிறிய குன்றுகளைக் கடந்து வரும்போது குளிர் காற்றுடன் மழை பெய்தமையால் நேற்றுமுன்தினம் சிவந்தனும் அவருடன் பாதயாத்திரை மேற்கொண்டவர்களும் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மௌடோன் நகரிலிருந்து சிவந்தன் உட்பட இளையோரின் பாதயாத்திரை நேற்றுக்காலை ஆரம்பமானது. கால்களில் கொப்புளங்கள் ஏற்பட்டபோதும் அவர்கள் மன உறுதியுடன் பாதயாத்திரையைத் தொடர்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-சி)

## அருந்ததாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீரமைக்கப்பட்டு விரைவில் இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டிய தன் அவசியம் குறித்தும் முதல்வருடன் பேசினார் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தர இந்திய அரசு முன்வந்துள்ள நிலையில், முதல் கட்டமாக ஆயிரம் வீடுகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்றும் நிருபமா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியத் தூதரக அலுவலகம் திறக்கப்படும் என்றும் இலங்கையின் தென்பகுதியிலும் தூதரக அலுவலகம் திறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஈழத் தமிழர்கள் பிரச்சினை தவிர, மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் குறித்தும் கருணாநிதியுடன் நிருபமா ஆலோசனை நடத்தினார் எனத் தெரிகிறது.

# கனடா சென்றுள்ள இலங்கையர்களுக்கு அகதி அந்தஸ்து கிடைக்க தாமதமாகும்

கொழும்பு, ஓக. 19

இலங்கையிலிருந்து கனடாவுக்குச் சென்ற அகதிகளுக்கான அகதி அந்தஸ்து வழங்கும் பணிகள் நிறைவடைய நீண்ட காலம் எடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கான குடியுரிமை வழங்கும் பணிகள் தொடர்பிலான முதலாம் கட்ட விசாரணைகள் கடந்த திங்கட்கிழமை முதல் மேற்கொள்ளப்படுகின்றன.

கனேடிய குடிவரவுத் துறையினரால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த நடவடிக்கைகள் பல்வேறுக் கட்டங்களாக மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 492 இலங்கை அதிகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த பதிவு மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தனித்தனியாக முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன் அவர்கள் தொடர்பில் இலங்கை அரசுடனும் பேச்சு நடத்தப்படும் என முன்னதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

ஏற்கனவே இலங்கையில் இருந்து சென்ற ஓசியானிக் லேடி கப்பலின் 76 அகதிகளுக்கு முழுமையான விசாரணை நிறைவடைந்து, அகதி அந்தஸ்து வழங்க 6 மாதங்களுக்கும் அதிக காலம் தேவைப்பட்டது.

இந்த நிலையில், 492 பேருக்கும் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள குறைந்த பட்சம் 18 மாதங்களேனும் தேவை என கனேடியக் குடிவரவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், குறித்த இலங்கை அதிகளுள் 50 பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, கனேடிய சிறுவர் துறை அமைச்சு பொறுப்பேற்றுள்ளது.

எனவே இந்தப் பணிகளை இலகுப்படுத்தும் பொருட்டு, ஏனைய நிர்வாகக் குழுக்கள், அகதிகளின் விசாரணை நடவடிக்கைகளைப் பொறுப்பேற்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியினர் செயற்பட்டனர். இதுவே 1983ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரத்துக்கு வித்தானது.

கடந்த கால போர் நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக அமுலுக்கு வராமைக்கு பரஸ்பர நம்பக்கையின்மையே காரணம். இந்தப் போரை இனப் போராகவோ, தீவிரவாதத்துக்கு எதிரான போராகவோ கருத முடியாது.

இது முற்றுமுழுதான அரசியல்நோக்கம் கொண்ட போராகும். முன்பொரு காலத்தில் தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையுடன் இணைந்தே வாழ்ந்தனர், ஒன்றாகப் பணியாற்றினர். ஆனால் சுதந்திரம்பெற்ற பின்னர் நாட்டின் தலைவர்கள் பொறாமையால் உந்தப்பட்டனர்.

தேச நலனை பற்றிய எண்ணம் எதுவுமின்றி அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டி ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்கிற சிந்தனையோடு செயல்பட்டமையாலேயே பிரச்சினை ஏற்பட்டது. இந்த எண்ணம் சிங்கள் - தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்தது. இன்னமும் இந்த நிலையே நீடித்துக் கொண்டிருக்கிறது.

தீவிரவாதம் காலப்போக்கில் ஏற்பட்ட ஒன்றுதான். இந்நாட்டின் இரண்டு முக்கிய கட்சிகளின் தலைவர்களுமே பொறாமையுடனும், ஒருவர் மீது ஒருவர் அதிகாரம் செலுத்துகின்றமையை ஒன்றையே குறிக்கோளாக கொண்டும் செயற்பட்டனர். அவர்களின் அரசியல் பக்குவம் குறைந்து போனது.

இதன் பின்னர் வடக்குப் பகுதியில் நடந்த தேர்தல்களில் இளைய சமுதாயம் சோர்வுடன் உற்சாகமின்றிக் காணப்பட்டது. இதன் விளைவாகவே அனைத்து அரசியல் கட்சிகளையும், தீவிரவாதக் குழுக்களையும் அகற்றிவிட்டு பிரபாகரன் ஆயுதங்களுடன் களமிறங்கினார்.

வடக்கு பகுதியில் இடம்பெற்ற தேர்தல்கள் ஜனநாயக ரீதியில் நடந்திருக்குமானால் இளைஞர்கள் வன்முறைப் பாதைக்கு சென்றிருக்கமாட்டார்கள். ஆனால் அனைத்துமே தலைகீழாகி இருந்தன.

தேச நலனில் அக்கறையின்றி செயற்படுகின்றமையையும், ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்கிற நினைப்பால் சண்டையிடுகின்றமையையும் அரசியல்வாதிகள் விட்டுவிட வேண்டும். நாட்டு மக்களுக்காக ஒற்றுமையுடன் உழைக்க முன்வரவேண்டும்'' - என்றார். (அ-சி)

## பிரிட்டனிலிருந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனுக்குச் சென்றிருந்தார்.

எனினும் இவரின் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது. அந் நாட்டின் குடிவரவு அதிகாரிகள் இவரை நாடு கடத்துகின்றமைக்காக கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் கைதுசெய்து தொடர்ச்சியாக தடுத்து வைத்திருந்தனர்.

இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் பட்சத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவர் என்று குடியேற்றவாசிகளுக்கான சர்வதேச ஸ்தாபனம் இவருக்கு வாக்குறுதி வழங்கியிருந்தது. இவ்வாக்குறுதியை நம்பியே அவர் இலங்கைக்குத் திரும்பி வரச் சம்மதித்திருந்தார்.


IIS

கணனிக்கற்கை நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 05.09.2010 |
| பிரிவு 02 | 06.09.2010 |
| பிரிவு 03 | 23.09.2010 |
| பிரிவு 04 | 25.09.2010 |

இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டணச் சலுகை வழங்கப்படுகின்றது

மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர்
IIS , #100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

படிவம் விற்பனையாகிறது

வடக்கு மாகாண பொதுச் சேவைக்கு
முகாமைத்துவ உதவியாளர் III ம் வகுப்பு
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.
நல்லூர் உற்சவகால சிறப்பு விற்பனை நிலையம்

e.com

Walk in Interview

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான நேர்முகத் தேர்வானது எதிர்வரும் 21-08-2010 நடைபெற உள்ளது. விரும்புவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையுடன் பி.ப 3.00 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.

Position : Receptionist cum Instructor
Salary : Attractive & Negotiable
Date : 21-08-2010 (Saturday)
Time : 03.00 p.m.



E.Com Computer Learning Center
No.95A Temple Road,
Nallur, Jaffna
T.P. 021-7429005

காணவில்லை

வெள்ளை நிறம், கண்ணைச் சுற்றியும் உடலிலும் மண்நிறப் புள்ளிகள் கொண்ட 1 ½ வயது பசுக்கன்று 10.08.2010 தொடக்கம் காணவில்லை. கழுத்தில் பட்டும், பண்டாரகுளம் பிள்ளையார் என தகடும் கட்டப்பட்டுள்ளது. இதனைக் கண்டவர்கள், இ.பஞ்சலிங்கம் அண்ணாமலை இசை மன்றம், பண்டாரக்குளம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.: 0775302627, 021 4915313

விற்பனையாகிறது

கலை, வர்த்தக, விஞ்ஞான மாணவர்களுக்கான
பொதுச் சாதாரண பரீட்சை வழிகாட்டி - 2010
மாணவர்கள் சுயமாக கற்றிட இலவசப் பிரதியுடன்
By: P.உமாசங்கர் & கமல்தாசன்
பூபாலசிங்கம் புத்தகசாலை

நிருட்டன் அக்கடமி, கோண்டாவில்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்பார்க்கப்படும் வினா உட்பட
★ வெளிமாவட்டங்களுக்கு பரீட்சை
பரீட்சைக் கட்டணம் 100/=
நடைபெறும் திகதி: 20.08.2010 Fri
இரு நேரங்களில் நடைபெறும்: காலை 9 மணி, மாலை 3 மணி
21.08.2010 Sat
* இலவசக் கருத்தரங்கு நடைபெறும்.
* விடைத்தாள் திருத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.
* முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

விற்பனையாகிறது

* PHARMACY
* PHARMACOLOGY
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.
நல்லூர் உற்சவகால சிறப்பு விற்பனை நிலையம்

யாழ்.நகரில் புதிய காட்சியறை



விளையாட்டு உபகரணங்களின் விற்பனையில் முன்னணி நிறுவனமான ஒலிம்பியா ஸ்போட்ஸ் இன்று (19.08.2010) வியாழக்கிழமை காலை 7.35 முதல் 9.05 வரையான சுபநேரத்தில் தனது புதிய காட்சியறையை ஆரம்பிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்

இல.06, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



(102220) உரிமையாளர்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்


மதிப்புக்குரிய
பிரபல தொழிலதிபர்

# S.V. முருகேசு



தோற்றம்
27
★
12
★
1923

வியாபாரம் என்றால் என்ன?
பிறரை மதிப்பது என்றால் என்ன?
பக்தி என்றால் என்ன?
சமுதாயத்தில்
எப்படி வாழவேண்டும்
என்று எல்லாம் எங்களுக்கு
கற்பித்த ஐயா!
உங்கள் மறைவால்
நாங்கள்
துயர்வடைகிறோம் ....



S.V.MURUGESU
நிறுவன ஊழியர்கள்
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி




எமது நிறுவன பங்காளரான

**முருகேசு குணரத்தினம்**

அவர்களின்

அன்புத் தந்தையாகிய

அமரர்

## S.V. முருகேசு

(பிரபல தொழிலதிபர்,

S.V.M. கூட்டு நிறுவனங்கள்)

**அமரர் S.V.முருகேசு**

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள் அனைவரின் துயரில்
நாமும் பங்கு கொள்வதுடன்
அவரின் ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி!

**- பங்காளர்களும்**
**பணியாளர்களும்.**



**OFFICE**
MAHA SHIPPING (PVT) LTD,
NO: 5A, PENTREVE GARDEN,
COLOMBO - 03,
SRI LANKA.

**HEAD OFFICE**
MAHA SHIPPING (PVT) LTD,
232, WOLFENDHAL STREET,
COLOMBO - 13,
SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுக்கு மிஞ்சினால்

அசடு அண்ணாசாமி என்று ஒருவர் உள்ளார்! அவர் அசட்டுத்தனமா ஏதாவது செய்து கொண்டே இருப்பார்.

உடம்பு அசதியா இருக்கிறதென்று வைத்தியரிடம் போனார். வைத்தியர் இவர் உடம்பை சோதித்துப் பார்த்தார்.

சத்துப் பற்றாக்குறையாக இருந்தது. அதற்கு தேவையான விற்றமின் மாத்திரையை எழுதிக் கொடுத்தார்.

'இதிலே 30 மாத்திரை வாங்கிக் கொள்ளுங்கள். தினம் ஒன்று சாப்பிட்டுக் கொண்டு வாருங்கள்.. சரியாகப் போய்விடும்!' என்றார்.

'வைத்தியர்! நான் ஒரு யோசனை சொல்லலாமா உங்களுக்கு''! என்றார் இவர்.

'சொல்லுங்கள்! 'என்றார் அவர்.

இந்த 30 மாத்திரையை எதற்காக 30 நாள் சாப்பிடச் சொல்கிறீர்கள். ஒரே நாளில் சாப்பிட்டால் குணமாகிவிடாதா?' என்றார்.

வைத்தியர் எச்சரிக்கையாக 30 மாத்திரையையும் தான் வாங்கி வைத்துக் கொண்டு தினம் ஒவ்வொன்றாக அந்த ஆசாமியிடம் கொடுத்து வந்தார். இல்லாவிடில் விசயம் விபரீதம் ஆகிவிடும் என்று தெரிந்து வைத்திருந்தார்.

அண்ணாசாமி மாதிரி பலபேர் நம்மவர்களிலும் உள்ளனர். சத்து மாத்திரைகள் அதிகமாக உண்டால் அதிக சத்து சேரும் என்று நினைத்து அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவார்கள். தேவைக்கு அதிகமாகச் சாப்பிட்டால் பல உபாதைகள் தொந்தரவுகள் வந்து சேரும். வைத்தியரிடம் கேட்காம எம் பாட்டுக்கு எதையும் வாங்கிச் சாப்பிடக் கூடாது.

விற்றமின் D ஐ ஒரு நாளைக்கு 400 யூனிட் உண்டால் இரத்த கல்சிய அதிகரிப்புக் காரணமாக உடல் அசதி,சத்தி, மூளைக் குழப்பம், குமட்டல், பசியின்மை, மலச்சிக்கல், அதிக சிறுநீர்ப் போக்கு, சிறுநீர்க் குழாய் தந்துகிகள் பாதிப்பு, இதயத்துடிப்பு சீரின்மை இப்படிப்பட்ட தொந்தரவுகள் எல்லாம் வந்துவிடும். விற்றமின் D, 13 மில்லிகிராம் அளவுக்கு அதிகரிக்குமென்று வைத்தால் கல்சியக் கல் உண்டாகிவிடும்! எங்கே? சிறுநீரகம், நுரையீரல், இருதயம்,இரத்தக்குழாய், தோல் இங்கேயெல்லாம் உண்டாகிவிடும்!

400 யூனிட் விற்றமின் D சிலசமயம் ஒவ்வாமை காரணமா உடல்வலி, வயிற்றுவலி இது மாதிரியான தொந்தரவை உண்டாக்கிவிடும்.

விற்றமின் D 18 மில்லியன் அளவுக்குப் போயிட்டுதென்று வைத்துக் கொள்ளுங்கள்; உயிருக்கே ஆபத்து!

அடுத்து விற்றமின் A

விற்றமின் 'A' அடங்கிய மருந்துகளை குழந்தைகளுக்குச் சாதாரணமாக கொடுகின்றோம்!

கடல்மீன், கல்லீரல் இதையெல்லாம் தொடர்ந்து சாப்பிடுகிறவர்களுக்கும் விற்றமின் A உடம்பில் அதிகமாகிவிடும். இதனால் வயிற்றுவலி, குமட்டல், வாந்தி, தலைவலி, மயக்கம், சோம்பல், கண்நரம்பு - உறைவீக்கம், குழந்தையின் உச்சிப் பள்ளம் வீக்கம், தோல் உரிதல் - இது போன்ற தொந்தரவுகள் வந்துவிடும்!

ஒரு நாளைக்கு 40,000 யூனிட் வீதமா ஒருத்தர் விற்றமின் A ஐ நீண்டநாள் சாப்பிட்டுக் கொண்டே வந்தால் எலும்புவலி, மூட்டுவலி, எலும்புகளில் அதிக வளர்ச்சி, முடி உதிர்தல், உதடு - வாய் வறட்சி, பசியின்மை, உதடு வெடிப்பு, குறைந்த அளவு காய்ச்சல், எடை இழப்பு, கல்லீரல் - மண்ணீரல் வீக்கம் எல்லாம் வந்துவிடும்.

விற்றமின் E அதிகமாகச் சாப்பிட்டால் உடல் அசதி,ஜீரண மண்டல தொந்தரவு தலைவலி, அதிக ரத்த அழுத்தம் எல்லாம் வரலாம்.

விற்றமின் K அதிகமாகச் சாப்பிட்டால் கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை வரலாம்.

விற்றமின் C அதிகமாகினால் உடம்பில் B12 விற்றமின் குறைபாடு ஏற்பட்டு, சிறுநீரகத்தில் ஒக்சலேட் கற்கள் உற்பத்தி ஆகலாம்.

இரும்புச் சத்து மருந்து, துத்தநாக சத்து மருந்து இதையெல்லாம் அதிகமாகச் சாப்பிட்டாலும் நிறைய தொந்தரவு வந்துவிடும்!

அதனால் எந்த சத்து மாத்திரையாக இருந்தாலும், மருந்தா இருந்தாலும் அளவுக்கு அதிகமா சாப்பிட்டுவிட்டு கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதீர்கள் - எம் அசடு அண்ணாசாமி மாதிரி.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

# கடவுள் செய்த ஏற்பாடு

ஓர் ஏழை பசியிலே எதை உண்ணுகிறானோ அதை இறைவன் தன்னுடைய கணக்கில் வரவு வைத்துக் கொள்கிறான். இது திருமந்திரத்தின் கருத்து.

ஒரு பெரிய யாகத்திற்கெல்லாம் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். வாசலில் வந்து ஒருவன் பசிக்கிறது. எனக்குக் கொடு என்று கேட்கிறான். அது யாகத்திலே போட இறைவனுக்காகத் தயாரிக்கப்பட்டது. எப்படிக் கொடுக்க முடியும் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். அப்பொழுது அவன் சொல்கிறான் என் வயிற்றிலும் ஒரு அக்கினி எரிகிறது அந்த அக்கினிக்கு ஏன் கொடுக்ககூடாது என்று கேட்டதாக வேதகாலத்தில் ஒரு கதை உண்டு.

ஒருமுறை கோவையில் ஒரு பெரிய செல்வந்தரைப் பார்த்தோம். ஒரு கருணை இல்லத்திற்கு நிதி கேட்பதற்காக சென்றிருந்தோம். அவர் நிறைய கோயில்களுக்கு கொடுப்பவர். அவர் சொன்னார் கோயிலுக்கு எவ்வளவு வேணுமென்றாலும் கேளுங்கள் ஆனால் இந்த மாதிரி அநாதை பிள்ளைகளுக்கு உதவி கேட்காதீர்கள் என்றார்.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. இது மனிதருக்கு புரியவில்லை. கடவுள் தாம் யாவற்றையும் எமக்கு கொடுத்தார். அதைக் கடவுளுக்கே திருப்பிக் கொடுப்பதில் அவசியமில்லை.

கோயில்களில் பல இடங்களில் பால் அபிஷேகம் நடைபெறுகிறது. கோயில்களில் சுகாதாரம் பேணப்படுகிறதா யோசித்துப் பாருங்கள் எவ்வளவு அசிங்கம். அபிஷேகம் செய்யும் பாலை பசித்தவருக்கு கொடுத்தால் எவ்வளவு நல்லது.

உடல் ஊனமுற்ற ஒருவர் சிரமப்பட்டார். இதைப் பார்த்த இன்னொருவர் சொன்னார் இவ்வளவு கஷ்டப்படுகிறாரே. இவருக்கு கடவுள் என்ன ஏற்பாடு செய்து இருக்கிறார். உடனே எதிரிலிருந்தவர் சொன்னார் இவருக்கு ஒரு ஏற்பாட்டை செய்து இருக்கிறார். அதுதான் நீதான் அது என்றார். ஆரோக்கியமாக இருக்கிற நாம் பலவீனமான ஒருவருக்கு உதவி செய்வதற்குக் கடமைப்பட்டுள்ளோம்.

இப்பிறவியில் நாம் மற்றவருக்குச் செய்கின்ற உதவி உண்மையில் இறைவன் கணக்கில் வைத்திருக்கிறான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த உண்மையை தெரிந்து கொண்டால் இந்தநாள் ஓர் இனிய நாள்.

சுகி.சிவம்


# திருவடிக்குச் சிறப்பு

காரில் பவனி வந்த மகாராஜாவின் மனம் துணுக்குற்றது. ஒரு முதியவர் நடக்க முடியாத நிலையில் தாள மாட்டாத மூடை ஒன்றைத் தலையில் சுமந்தபடி வெயிலில் வியர்க்க எதிரில் வந்து கொண்டிருந்தார்.

காரை நிறுத்தி இந்த வயதில் இப்படிக் கஷ்டப்படலாமா? பிள்ளைகள் யாரும் இல்லையா? தலையில் என்ன மூடை. மகாராஜா கேட்டார். முதியவர் சொன்னார், காட்டில் மரத்தை வெட்டிக் கரியாக்கி தலையில் சுமையாகக் கொண்டு வந்து ஊரில் கொடுத்தால் எனக்கு பசிக்கு சோறு கிடைக்கும். பிள்ளைகள் யாரும் என்னைக் காப்பாற்றவில்லை என்றார்.

மகாராஜா சந்தன மரங்கள் நிறைந்த காட்டின் ஒரு பகுதியை அந்த முதியவருக்கு கொடுத்தார். சில மாதங்களுக்குப் பிறகு அதே வழியாக மகாராஜா வரும் போது அதே முதியவர் சாக்கு மூடையோடு தடுமாறி நடந்து கொண்டிருந்தார். நான் கொடுத்த சந்தனக்காடு எங்கே. அதை என்ன விலைக்கு விற்றீர்கள் என்று முதியவரைப் பார்த்துக் கேட்டார்.

காட்டை விற்கவில்லை. இதே மாதிரிதான் மரத்தை வெட்டிக் கரியாக்கி விற்றேன் என்றார். இது வெறும் கதையல்ல. சந்தன மரங்களை கரியாக்கி விற்ற முதியவரைப் போலத்தான் நாமும் கடவுள் கொடுத்த உடல், உயிர், உள்ளம், வாழ்நாள் இவற்றின் மேன்மை தெரியாமல் கரியாக்கி விடுகின்றோம்.



பாகவதத்தில் ஓர் உருக்கமான கட்டம். தேவகி வயிற்றில் தோன்றும் எட்டாவது கர்ப்பம். கம்சனுக்கு எமன் என்று அசரீரி வாக்கு. தேவகி வசுதேவரை சிறையில் இட்டான் கம்சன். அவர்களுக்குப் பிறந்த ஆறு பிள்ளைகளையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கொன்றான். எட்டாவதாகக் கண்ணன் பிறந்தான். பேரொளிப் பிழம்பின் உத்தரவில் கண்ணனை யமுனையில் சேர்ப்பித்துவிட்டு அங்கிருந்த விஷ்ணு மாயை என்னும் கிருஷ்ண சகோதரியைக் கொண்டு வந்து கொடுத்தார் வசுதேவர்.

ஆறு பிள்ளைகளையும் கொன்ற கம்சன் கொலைவெறியோடு அக்குழந்தையையும் கொல்ல வந்தான். தேவகி அநியாயமாகக் குழந்தையை கொல்லப்படுவதைத் தடுத்தாள்.

குழந்தையின் கால்களில் பிடித்து சுவரில் அறைந்து கொல்லும் போது என்ன ஆச்சரியம் சாளரம் வழியாக சங்கு சங்கரத்தோடு காட்சி கொடுத்தார் விஷ்ணு மாயை.

அட மூடனே என்னைக் கொல்வதற்கு யாரும் பிறக்கவில்லை. கொல்ல நினைத்த உன்னை ஏன் கொல்லவில்லை தெரியுமா. நீ என் கால்களை [illegible] எவரையும் தெய்வம் கொல்வதில்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் கல்விப் பணிப்பாளர், அதிபர், ஆசிரியருக்கு எதிராக நடவடிக்கை

## கிழக்கு கல்வி அமைச்சு அதிரடி

மட்டக்களப்பு, ஓக. 19

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிராக கிழக்கு கல்வியமைச்சு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுவரை மூவர் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். ஓர் உயர் அதிகாரிக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர், கல்வியமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கமைய கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எச்.கே.யூ.கே. வீரவர்தன இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்.

இந்த அதிரடி நடவடிக்கையில் மேலும் பலர் இடைநிறுத்தம் செய்யப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக கல்விப்புலத்தில் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், நிதி மோசடி போன்றன அதிகரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அனைத்தும் தற்போது விசாரணைக்குட்படுத்தப்படுகின்றன.

கிழக்கு மாகாணப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் குடிபோதையில் எப்போதும் நடமாடுபவர் என்றும், பல தடவைகளில் இது நிரூபிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

இதேவேளை, பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஓர் உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

மற்றுமொரு அதிபர் நிதி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

தரம் - 9 பரீட்சையின் போது விடைகளைச் சொல்லிக்கொடுத்து பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு குற்றவாளியாகக் கருதப்பட்டுள்ளார்.

இவ்வாசிரியரும் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, இன்னும் பலர் இடை நிறுத்தப்படலாமென கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களுக்கான விசாரணைகள் தொடர்கின்றன எனத் தெரியவருகிறது.

(ளி)

# கிண்ணியாப் பிரதேச இரு முஸ்லிம் பாடசாலைகளை தற்காலிகமாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குக

## முதலமைச்சரிடம் கோரிக்கை

திருகோணமலை, ஓக. 19

திருகோணமலை மாவட்ட கிண்ணியாப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடங்களிலுள்ள கிண்ணியா பறக்கத் நகர் முஸ்லிம் வித்தியாலயம், கல்வெட்டுவான் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளையும் மீள ஆரம்பிப்பதற்கான தற்காலிக பாடசாலைக் கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கிண்ணியாப் பிரதேசசெயலாளர் எம். முபாறக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

1990ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது இப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

அங்குள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றம் கருதியே பிரதேச செயலாளர் கிழக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்திற்கு இந்த விடயங்களைக் கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பில் தற்காலிக கட்டட வசதிகளை அங்குள்ள இரு பாட சாலைகளையும் மீள ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே கிண்ணி யாப் பிரதேச செயலாளர் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கவனத்திற்கு சுட்டிக்காட்டியபோதும் அக் கோரிக்கை நிரா கரிக்கப்பட்டது. இதனை அடுத்தே பிரதேச செயலாளர் எம். முபாறக், மீள் குடியேற்றத்திற்குப் பொறுப்பானவர் முதலமைச்சரே என்ற வகையில் அவரிடம் இக் கோரிக்கையை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ளி)




# இவ்வாண்டிற்கான இலக்கிய விழாவை நடத்த கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானம்

கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சு இவ்வாண்டிற்கான இலக்கிய விழாவை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. மாகாணத் தமிழ்மொழி இலக்கிய விழாவை மூதூரிலும், சிங்கள மொழிமூல இலக்கிய விழாவை திருகோணமலை நகரிலும் நடத்துவதென்று மாகாணக் கல்வி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தலைமையிலான மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிங்களமொழி இலக்கிய விழா திருகோணமலை நகரில் ஒக்டோபர் 6ஆம், 7ஆம் திகதிகளிலும், தமிழ்மொழி இலக்கியவிழா மூதூரில் 16ஆம், 17ஆம் திகதிகளிலும் நடத்தப்படவுள் ளன. இலக்கிய விழாக்கள் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக பத்துப்பேர் கொண்ட குழு நியமிக்கபட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ளி)

# திருமலை மாவட்டத்தில் மழை

திருகோணமலை, ஓக. 19

திருகோணமலை மாவட்டத்தில் நீண்டகால வறட்சியின் பின்னர் நேற்று முன்தினமும், நேற்றும் மழை பெய்துள்ளது.

திருகோணமலையில் கந்தளாய், கிண்ணியா, தோப்பூர், மூதூர், நிலாவெளி, முள்ளிப்பொத்தானை உள்ளிட்ட மாவட்டங்களின் பல பகுதிகளிலும் மழை பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நகர்ப்புறப் பகுதிகளிலும், குப்பை கூளங்கள் நிறைந்துள்ள இடங்களிலும் நுளம்புகள் பெருகக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன எனவும் சுகாதாரப்பணிமனை கூறுகின்றது.

(ளி)

# றொக்லேண்ட் தோட்டத் தொழிலாளருக்கு வீடுகள் அமைப்பது தொடர்பாக ஆராய்வு

நுவரெலியா, ஓக.19

மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட தீவிபத்தில் தமது குடியிருப்புகளை இழந்து போன உடபுசல்லாவை றொக்லேண்ட் தோட்டத் தொழிலாளர்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக உரிய தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என நுவரெலியா மாவட்டச் செயலாளர் டி.பி.ஜீ.குமாரசிறி தெரிவித்தார்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள 15 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் சூரிய காஹ பத்தன சிங்களப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்கான உடுதுணிகள் மற்றும் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

உடப்புசல்லாவை - டெல்மார், றொக்லண்ட் டிவிஷனில் கடந்த சனிக்கிழமை மாலை 3.10 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் அங்கிருந்த முதலாம் இலக்க லயன் குடியிருப்பு முற்றாக எரிந்து நாசமானது. இதில் 15 வீடுகள் பாதிப்படைந்தன.

இந்த அனர்த்தத்தின்போது வீடுகளிலிருந்த அனைத்து உடைமைகளும் தீக்கிரையாகின. தெய்வாதீனமாக எவருக்கும் காயங்களோ உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை.

பொதுமக்களும் நுவரெலியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள் சூரியகாஹ பத்தன சிங்களப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தோட்ட நிர்வாகம் சில உடனடி உதவிகளை வழங்கியது.

சம்பவ இடத்திற்கு உடனடியாக விஜயம் செய்த வலப்பனை பிரதேச சபையின் புதிய ஜனநாயக மார்க்சிய லெனினிசக் கட்சியின் உறுப்பினர் பன்னீர்ச் செல்வம் பாதிப்புகளை அவதானித்து விட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வலப்பனை பிரதேச சபையால் முடியுமான உதவிகளை வழங்குமாறு அதன் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ளி)

# இரட்டைப்பாதை நகரத்தில் பல்வேறு குறைபாடுகள்

கண்டி, ஓக.19

நுவரெலியா உடபலாத்த பிரதேச சபைக் குட்பட்ட மிகப் பழைமை வாய்ந்த இரட்டைப் பாதை நகரத்தில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன எனப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக நகரவாசிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

நகருக்கு சீரான தண்ணீர் விநியோகம் இல்லை. பொதுக்கழிப்பறை பாவிக்க முடியாத நிலையில் உள்ளது. நகர சுத்திகரிப்பாளர்களும் இல்லை. வடிகான்கள் சுத்தம் செய்யப்படுவதில்லை. வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் செல்லும் வடிகான்களை குறிப்பிட்ட வர்த்த கர்களே சுத்தம் செய்யவேண்டும் எனப் பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், நகரத்திலுள்ள வர்த்தகர்களோ பிரதேசசபைக்குச் செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் கிரமமாகச் செலுத்துகின்றனர். எனவே, இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என - வர்த்தகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ளி)

# இந்திய வம்சாவளித் தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## அந்த அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஓக.19

இந்திய வம்சாவளித் தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என இந்திய வம்சாவளித் தமிழர்களின் உலக அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள பஞ்சாயத்து முறையிலான ஓர் முறைமையை இலங்கையில் உருவாக்க அரசு முனைப்புக் காட்டி வருவதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் கிராம சபை (ஜனசபா) முறைமை விரைவில் அறி முகப்படுத்தப்பட உள்ளது. இந்த முறைமையின் கீழ் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு உரிய நியாயம் கிட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய முறைமையின் கீழ் இந்திய வம்சாவளித் தமிழர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் குரல் ஒலிப்பதில்லை எனவும், எதிர்வரும் காலங்களில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்க வேண்டுமெனவும் இலங்கை - இந்திய வம்சாவளித் தமிழர்களின் உலக அமைப்பின் தலைவர் பீ.பீ.தேவராஜ் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமது மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை எனவும், இதனால் அவர்கள் பல்வேறு விளைவுகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பெருந்தோட்ட நிறுவனங்கள் நிர்வாகம் செய்து வருகின்றன. எனினும், உள்ளூராட்சி மன்றங்களில் அவர்களுக்கு போதியளவு உரிமை வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ளி)

# கேகாலை மாவட்டத் தோட்டப் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நீக்குமாறு கோரிக்கை

கேகாலை, ஓக.19

கேகாலை மாவட்டத்திலுள்ள தோட்டப் பாடசாலைகளில் நீண்டகாலமாக நிலவி வரும் குறைபாடுகளை நீக்கி, பிள்ளைகளின் கல்விவளர்ச்சிக்கு வழி செய்யுமாறு முதல மைச்சரும், மாகாணக் கல்வியமைச்சருமான மஹிபால ஹேரத்திடம் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள தோட்டப் பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இல்லாமை, ஆசிரியர் பற்றாக்குறை, தளவாடப் பற்றாக்குறை, கட்டடப் பற்றாக்குறை போன்ற பல குறைபாடுகள் நிலவுகின்றன.

குறிப்பாக ருவன்வெல்ல, எட்டியாந்தோட்டை, தெரணிகலை மற்றும் தெஹியோ விற்ற பாடசாலைகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

எனவே, இது தொடர்பில் முதலமைச்சர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என புத்திஜீவிகளும், பெற்றோரும் கோருகின்றனர்.

(ளி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org